உங்கள் நிறுவனங்களுக்கு
திறமையான பணியாளர்களை
குறுகிய காலத்தில்
பெற்றுக்கொள்ள
WINSTAR
JOB BANK
106, தபாற்பெட்டிச் சந்தி,
திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
web: www.winstar jaffna.com
Fb : winstar job bank
021 320 2789
c/400

காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 01 வள்ளுவர் ஆண்டு 2048 ஆவணி 26, திங்கட்கிழமை 11.09.2017 கதிர் 309

# கூட்டமைப்பு – கூட்டு எதிரணி ஓரிரு தினங்களில் சந்திப்பு!

## மஹிந்தருடனான பேச்சுக்களைத் தொடர்ந்து

கொழும்பு, செப்ரெம்பர் 11

**தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமைக்கும் கூட்டு எதிரணிப் பிரமுகர்களுக்கும் இடையிலான சந்திப்பு ஒன்று விரைவில் - அடுத்த ஓரிரு தினங்களில் கொழும்பில் நடைபெறவிருப்பதாக அறியவருகின்றது.**

**அண்மையில் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தனுக்கும் முன்னாள் ஜனாதிபதியும் கூட்டு எதிரணியின் தலைவருமான மஹிந்த ராஜபக்ஷவுக்கும் இடையில் நடந்த சந்திப்பின் தொடர்ச்சியாகவே இந்தச் சந்திப்பு இடம்பெறுவதாகவும் தெரியவந்தது.**

இந்தச் சந்திப்பு கடந்த வெள்ளிக்கிழமை நடைபெறுவதாக இருந்தது. ஆனால், சந்திப்புக்கு ஒழுங்குசெய்யப்பட்ட நேரத்தில் திடீரென கூட்டு எதிரணிப் பிரமுகர்கள் எல்லோரும் ஒன்று சேர்ந்து அதற்கு முதல் நாள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்ட முன்னாள் ஜனாதிபதியின் செயலாளர்

பக்கம் 18 ›››

## வன்முறையைத் தூண்டினாராம் ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரி!

### மேஜர் ஜெனரல் மீது ஜனாதிபதி குற்றச்சாட்டு

கொழும்பு, செப்.11

முன்னாள் பாதுகாப்புச் செயலாளர் கோட்டாபய ராஜபக்ஷ வுடன் அரசியல் ரீதியாகத் தொடர்பு வைத்துள்ள சில ஓய்வுபெற்ற இராணுவ அதிகாரிகளே ஊனமுற்ற படையினருக்கும் அதிகாரிகளுக்கும் இடையில் மோதலை ஏற்படுத்தி வருகின்றார்கள்.

– இவ்வாறு குற்றம்சுமத்தியிருக்கின்றார் ஜனாதிபதி மைத் திரிபால சிறிசேன.

ஜனாதிபதி செயலகத்துக்கு முன்னால் ஊனமுற்றபடை அதிகாரிகளுக்கும் பொலிஸாருக்கும் இடையில் கடந்த நவம்பர் மாதம் இடம்பெற்ற மோதல் குறித்து ஓய்வு பெற்ற

பக்கம் 18 ›››



## நீரிழிவு நோயாளருக்கு இனிப்பான செய்தி

கொழும்பு,செப்.11

இரத்தத்தில் சர்க்கரையின் அளவைக் குறைக்க உதவும் ஒரு நாளமில்லா சுரப்புத் திரவத்தை அமெரிக்க விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர் என்று செய்திகள் வெளியாகியுள்ளன.

முறையான உடற் பயிற்சிகள் செய்வதன் மூலம் உடலியல் மாற்றங்களைத் தூண்டும் இரிசின் எனப்படும் நாளமில்லா சுரப்புத் திரவம், உடலிலுள்ள கெட்ட

பக்கம் 18 ›››

அளப்பு அருணாசலம்



உவர் சொல்லுறது போல அங்கு பல பெருக்கும் இடி தாங்கி எல்லோ வேணும்...!

## மத்தள, கொழும்பு துறைமுக திட்டங்களை விரைவுபடுத்துமாறு கடும் அழுத்தம்

### மோடி, சுஷ்மாவை மாரப்பன சந்தித்த வேளை

புதுடில்லி, செப்.11

இந்தியப்பிரதமர்நரேந்திர மோடி வெளிவிவகார அமைச்சர் சுஷ்மா ஸ்வராஜ் ஆகியோரை புதுடில்லியில் நேற்று முன்தினம் இலங்கை வெளிவிவகார அமைச்சர்திலக் மாரப்பன சந்தித்தபோது மத்தள விமான நிலைய திட்டம் மற்றும் கொழும்புத் துறைமுக கொள்கலன் முனைய திட்டம் போன்ற இரு தரப்பு திட்டங்களை நடைமுறைப் படுத்துவதை விரைவுபடுத்துமாறு வலியுறுத்திக் கூறினர் எனத் தெரிய வருகின்றது.

இரு தரப்புத் திட்டங்களை விரைவாக நடைமுறைப்படுத்துமாறு கடந்த சில வாரங்களாக இலங்கையை இந்தியா

பக்கம் 18 ›››

## சரத் பொன்சேகாவின் கருத்தால் விக்னேஸ்வரனுக்கு சந்தேகமாம்

### அனுராதபுரத்தில் நேற்று மஹிந்த



கொழும்பு,செப்.11

முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் ஜெகத் ஜயசூரியவுக்கு எதிராக சரத் பொன்சேகா வெளியிட்ட கருத்து முன்னாள் இராணுவத் தளபதியின் கருத்து என்பதால், வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வி.விக்னேஸ்வரனுக்கு சந்தேகம் ஏற்பட்டுள்ளதாக முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

அனுராதபுரம் ஸ்ரீ மஹாபோதியில்

பக்கம் 18 ›››

## மைத்திரி மடியில் அமர்ந்து செல்லம் கொட்டிய சிறுமி!



கொழும்பு,செப்.11

நிகழ்வு ஒன்றுக்குச் சென்ற ஜனாதிபதியைக் கண்டவுடன் ஓடிச் சென்ற சிறுமி ஒருவர், நிகழ்வு முடியும் வரை ஜனாதிபதியின் மடியில் இருந்து செல்லம் கொட்டி குதூகலித்த சம்பவம் தென்னிலங்கையில் உள்ள சிங்களக் கிராமம் ஒன்றில் இடம்பெற்றது.

பக்கம் 18 ›››

## சீரற்ற காலநிலை காரணமாக டெங்கு பரவக்கூடிய அபாயம்

### எச்சரிக்கிறார் டெங்கு தடுப்பு வைத்திய அதிகாரி

கொழும்பு, செப்.11

தற்போது நிலவும் சீரற்ற கால நிலைக்கு மத்தியில் மீண்டும் டெங்கு நோய் பரவக்கூடிய நிலை இருப்பதாக தேசிய டெங்கு நோய் தடுப்புப் பிரிவின் சமூக விசேட வைத்தியர் திருமதி பிரசீலா சமரவீர தெரிவித்துள்ளார்.

கடந்த காலத்துடன் ஒப்பிடுகையில் இந்த வருடத்தில் டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை குறிப்பிடத்தக்களவு குறைந்திருப்பதாகவும் அவர் கூறினார். விசேடமாக சுகாதாரப் பிரிவு மற்றும் பொதுமக்கள் நிறைவேற்றிய பணிகளுடன் மழையும் குறைவடைந்தமையே இதற்குக் காரணமாகும்.

பக்கம் 18 ›››

## விக்கியின் தேவைக்காகச் செயற்படும் பொன்சேகா தலையில் இடி விழட்டும்!

### சாபமிடுகின்றார் ஜனக பண்டார எம்.பி.



கொழும்பு,செப்.11

அமைச்சர் சரத் பொன்சேகா தலை மீது இடி விழ வேண்டும் என முன்னாள் அமைச்சரும் நாடாளுமன்ற உறுப்பினருமான ஜனக பண்டார தென்னக்கோன் தெரிவித்துள்ளார்.

தம்புள்ளையில் உள்ள தனது இல்லத்தில் நேற்று நடத்திய விசேட ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இவ்வாறு சாபமிட்டுள்ளார்.

பக்கம் 18 ›››

## காணாமற்போனோரின் உறவினர்கள்

## கிளிநொச்சி கந்தசுவாமி ஆலய வீதியில் இனிமேல் போராட்டம் நடத்த முடியாது!

### நிர்வாகம் நேற்று அறிவித்தது

கிளிநொச்சி, செப்.11

காணாமற்போனோரின் உறவினர்கள் கிளிநொச்சி கந்தசுவாமி ஆலயத்துக்கு முன்பாக வீதியில் அமர்ந்திருந்து போராட்டம் நடத்த இடமளிக்க முடியாது என ஆலய நிர்வாகம் அறிவித்துள்ளது. இது தொடர்பாக ஆலய நிர்வாகம் காணாமற்போனோரின் உறவினர்களுக்கு கடிதம் ஒன்றையும் கையளித்துள்ளது.

யுத்த காலத்தில் படையினரால் கைது செய்யப்பட்டு காணாமற்போனோரினதும் இறுதி யுத்தத்தின் போது படையினரிடம் கையளிக்கப்பட்ட நிலையில் காணாமற்போனோரினதும் உறவினர்கள் கிளிநொச்சி கந்தசுவாமி ஆலய முன்றிலில், ஒதுக்குப்புறமாகப் போராட்டத்தில் ஈடுபட்டுவருகின்றனர்.

காணாமற்போனோருக்கு என்ன நடந்தது

பக்கம் 18 ›››

## மஹிந்தவை காரணம் காட்டிக்கொண்டு

## தமிழர்களுக்கான தீர்வு விடயத்தில் நழுவல் போக்கில் நல்லாட்சி அரசு!

### பி.பி.ஸி. சிங்கள சேவைக்கான செவ்வியில் வடக்கு முதல்வர்



கொழும்பு, செப்.11

மஹிந்த ராஜபக்ஷ மீண்டும் அதிகாரத்துக்கு வந்து விடுவார் என்ற அச்சம் காரணமாக தற்போதைய அரசு தமிழ் மக்களின் பிரச்சினைக்குத் தீர்வுகாண்பதைத் தவிர்த்து வருகிறது என வடக்கு மாகாண முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

பி.பி.ஸி. சிங்கள சேவைக்கு அளித்துள்ள செவ்வியிலேயே அவர் இவ்வாறு கூறியுள்ளார்.

தமிழ் மக்களுக்கு ஏதாவது

பக்கம் 18 ›››

# கிழக்கு பல்கலை பிரச்சினை முடிவுக்கு வந்தது!





மட்டக்களப்பு, செப். 11

கடந்த 3 மாதம் நீடித்த கிழக்குப் பல்கலைக்கழக சர்ச்சை முடிவுக்கு வந்துள்ளது.

உடன்படிக்கையில் முத்தரப்பும் கைச்சாத்து கோரிக்கைகளை நிறைவேற்ற நிர்வாகம் இணக்கம் தெரிவித்ததையடுத்து ஆக்கிரமிப்புக் கட்டடத்திலிருந்து மாணவர்கள் வெளியேறியுள்ளனர். இதனையடுத்து பல்கலைக் கழகம் மீளத் துவங்கவுள்ளது.

கிழக்குப் பல்கலைக் கழகம் வந்தாறுமூலை வளாகத்தில் கடந்த 3 மாதங்களாக இடம் பெற்றுவந்த அசாதாரண சூழ்நிலையை முடிவுக்குக்கொண்டு வரும் வகையில் அதில் சம்பந்தப்பட்ட முத்தரப்பும் கைச்சாத்திட்டுள்ளது என கிழக்குப் பல்கலைக்கழக பிரதி உபவேந்தர் வைத்திய கலாநிதி கே.ஈ.கருணாகரன் நேற்று அறிவித்துள்ளார்.

கிழக்குப் பல்கலைக்கழகப் பேரவை, இப்பிரச்சினையை ஆராய்வதற்காக நியமிக்கப்பட்ட மத்தியஸ்த குழு மற்றும் மாணவர் பிரதிநிதிகள் ஆகியோருக்கிடையில் இடம்பெற்ற முத்தரப்புப் பேச்சின் விளைவாக அனைத்துத் தரப்பினருக்கும் சாதகமான முடிவு எட்டப்பட்டுள்ளது என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

இந்த முடிவுகளின் படி பின்வரும் தீர்மானங்களில் கைச்சாத்திடப்பட்டுள்ளது.

பல்கலைக் கழகத்தை மீளத் திறப்பதற்காக நேற்று நண்பகல் 12 மணிக்கு முன்னர் மாணவர்கள் தாம் ஆக்கிரமித்துள்ள பல்கலைக்கழக பேரவை நிருவாகக் கட்டடத்திலிருந்து வெளியேறிவிட வேண்டும்.

தற்போது கிழக்குப் பல்கலைக்கழகத்தில் கற்றுக்கொண்டிருக்கும் சகல மாணவர்களுக்கும் முதலாம் வருடம், இறுதி வருடம், மூன்றாம் வருடம் என்ற ஒழுங்கின் முன்னுரிமை அடிப்படையில் விடுதி வசதி வழங்கப்பட வேண்டும்.

இடைநிறுத்தப்பட்ட மற்றும் ஒழுக்காற்று நடவடிக்கைகளுக்கு உட்படுத்தப்பட்டுள்ள மாணவர்களின் விவகாரத்தைக் கையாள்வதற்காக நியமிக்கப்பட்டுள்ள வைத்திய கலாநிதி எச்.ஆர்.தம்பவித்த, ஓய்வு பெற்ற பேராசிரியர் எஸ். மௌனகுரு, சங்கைக்குரிய அடிகளார் போல் றொபின்ஸன் ஆகியோரடங்கிய மத்தியஸ்தக் குழு சர்ச்சைக்குரிய மாணவர் விவகாரங்களைக் கவனித்து அடுத்த ஒரு வாரத்திற்குள் அறிக்கை சமர்ப்பிக்க வேண்டும்.

புதிய மாணவர்களின் அடையாள அட்டையில் கல்வி அனுமதிக்கான திகதியும் அனுமானிக்கக் கூடிய முடிவுறும் திகதியையும் குறிப்பிடல், மஹாபொல மாணவர் ஊக்குவிப்புக் கொடுப்பனவை சீராகப் பேணுதல், தற்போது பேரவைக்கட்டடத்தை ஆக்கிரமித்த மாணவர்களுக்கெதிராக எதுவித ஒழுக்காற்று நடவடிக்கைகளும் எடுக்காதிருத்தல், மாணவர்களுக்கு விடுதி வசதி வழங்கப்படுவது என்ற இணக்கப்பாட்டின் அடிப்படையில் மாணவர்கள் நிருவாகக் கட்டடத்தை விட்டு வெளியேறிவிட்டார்கள் என்பது தொடர்பில் பொலிஸாருக்கு அறிவித்து அந்த விடயத்தை அடுத்த நீதிமன்றத் தவணையில் நீதிமன்றத்திற்குத் தெரியப்படுத்தல்.

மாணவர்களின் துயரங்களை அறிந்து கொள்வதற்காக கவுன்ஸிலால் குழு ஒன்று நியமித்தல், தற்போது மூடப்பட்டுள்ள கிழக்குப் பல்கலைக் கழகம் இறுதியாண்டு மாணவர்களுக்காக செப்ரெம்பர் 18ஆம் திகதியிலிருந்தும் அனைத்து ஆண்டுகளையும் சேர்ந்த மாணவர்களுக்காக ஒக்ரோபர் 02ஆம் திகதியும் மீளத் திறத்தல்.

பல்கலைக்கழக ஒழுங்கு விதிகளை ஏற்றுக் கொண்டு எதிர்காலத்தில் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை பேச்சு மூலம் தீர்த்துக் கொள்வதற்கு மாணவர்கள் உடன் படல், இடைநிறுத்தப்பட்டதன் காரணமாக 2017 ஓகஸ்ட் 08ஆம் திகதி இடம்பெற்ற பரீட்சைக்குத் தோற்ற முடியாமற் போன மாணவர்களுக்கு விசேட தேர்வொன்றை நடத்துதல் ஆகிய விடயங்களில் முத்தரப்பும் கைச்சாத்திட்டுள்ளது.

இந்த உடன்பாட்டின்படி தாம் ஆக்கிரமித்துள்ள நிருவாக பேரவைக் கட்டடத்திலிருந்து வெளியேறியுள்ளோம் எனவும், பல்கலைக்கழக நுழைவாயிலில் கடந்த 3 மாதகாலமாக அமைக்கப்பட்டிருந்த சத்தியாக்கிரகப் பந்தலையும் கறுப்புக் கொடிகளையும் அகற்றி விட்டோம் எனவும் மாணவர்கள் தெரிவித்தனர்.

உடன்பாடு எட்டப்பட்டதன் பின்னர் மாணவர்கள் பட்டாசு கொளுத்தி தமது மகிழ்ச்சி ஆரவாரத்தையும் வெற்றிப் பிரகடனத்தையும் வெளிப்படுத்தியுள்ளனர்.

## வாள்வெட்டுக் குழுவினர் நெல்லியடியில் அட்டகாசம்!

பருத்தித்துறை, செப். 11

நெல்லியடி கப்புதூ வீதியில் நேற்று அதிகாலை வாள் வெட்டுக் குழுவினர் அட்டகாசம் செய்துள்ளனர் என்று நெல்லியடிப் பொலிஸில் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது.

கப்புது வீதியில் முகமூடி அணிந்த ஒருவர் உட்பட நால்வர் வாள்கள் மற்றும் ஆயுதங்களுடன் நின்றுள்ளனர்.

கொடிகாமத்திலிருந்து இந்த வீதியூடாக பயணம் செய்த நால்வரை வழிமறித்த வாள்வெட்டுக்குழுவினர் அவர்களை வெட்டுவதற்கு வாள்களை ஓங்கியுள்ளனர்.

இதனால், மோட்டார் சைக்கிள் இரண்டையும் கைவிட்டு நால்வரும் தப்பியோடியுள்ளனர்.

இந்த நிலையில், ஒரு மோட்டார் சைக்கிளை கொத்தி சேதப்படுத்தியதுடன் மற்றைய மோட்டார் சைக்கிளை எடுத்துக் கொண்டு வாள்வெட்டுக் குழுவினர் தலை மறைவாகி யுள்ளனர் என கூறப்படுகிறது.

சிறிது நேரத்தின் பின்னர் மோட்டார் சைக்கிளில் பயணித்த நால்வரும் அந்தப் பகுதிக்கு வந்து கொத்தப்பட்ட நிலையிலிருந்த மோட்டார் சைக்கிளை மீட்டுச் சென்றுள்ளனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் நெல்லியடிப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

## வெறும் மேடைப்பேச்சுக்களும், அறிக்கைகளும் உரிமைகளுக்கு தீர்வை தராது: ரவூப் ஹக்கீம்!

கொழும்பு, செப். 11

வெறும் மேடைப்பேச்சுக்களும், பத்திரிகை அறிக்கைகளும் மாத்திரம் உரிமைகளுக்குத் தீர்வை தந்துவிடாது என அமைச்சரும், ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரசின் தலைவருமான ரவூப் ஹக்கீம் தெரிவித்துள்ளார்.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் உறுப்பினர்களின் மத்தியில் கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

எம்முள் பலர் மறந்து, எதை ஒழிப்பதற்காக இந்த இயக்கம் ஆரம்பிக்கப்பட்டதோ அந்த



விடயங்களில் அதிகூடிய அக்கறை காட்ட தொடங்கியுள்ளனர். அதில் முக்கியமானது பிரதேச வாதம்.

ஊர்வாதம், பிரதேச வாதம் நாடு முழுவதும் எம்மவர்களாலேயே படு மோசமாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது. தற்பொழுது என்னையும் இலக்கு வைத்து பிரதேச வாதம் வந்து விட்டது.

அபிவிருத்தி செய்வது மட்டும் தான் அரசியல் என்பது எங்களுடைய அரசியல் தலைவர்களின் கொள்கையாக இருக்கிறது. வெறும் மேடைப் பேச்சுக்களும், பத்திரிகை அறிக்கைகளும் மாத்திரம் உரிமைகளுக்கு தீர்வை தந்து விடாது. அதற்கு காத்திரமான நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

ஒரு புதிய யுக மாற்றம் நிகழ வேண்டுமானால் அழுத்தத்துடன் செயற்படுகின்ற இளைஞர் குழுவொன்று தேவை. இன நல்லிணக்கம் என்ற விடயத்தில் இளைஞர்களின் பங்களிப்பு பிரதானமானது எனவும் அவர் சுட்டிக் காட்டியுள்ளார்.

## வவுனியாவில் இடம்பெற்றது சமாதான பேரணி!




வவுனியா, செப். 11

சர்வதேச சமாதான பேரவையின் ஏற்பாட்டில் பொதுமக்கள் சமாதானப்பேரணி ஒன்று நேற்று முன்தினம் வவுனியா வில் நடைபெற்றது.

மக்கள் மத்தியில் போர் சமாதான நல்லெண்ணத்தை ஏற்படுத்தும் நல்லெண்ண நடவடிக்கையை நாட்டில் அமுல்படுத்தும் விழிப்புணர்வு செயற்பாடாக இந்த பேரணி இடம்பெற்றுள்ளது.

பதாதைகளை ஏந்தி அமைதியான முறையில் வவுனியா பட்டானிச்சூர் பகுதியில் ஆரம்பமாகி மன்னார்வீதி, ஏ9வீதி ஆகிய வீதிகள் ஊடாக வவுனியா சைவபிரகாசா மகளிர் கல்லூரியை இப் பேரணி சென்றடைந்தது.

சர்வதேச சமாதானப் பேரவையின் வடமாகாண இணைப்பாளர் சரண்ராஜ் தலைமையில் நடைபெற்ற இந்தப் பேரணியில் வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர்களான ந.சிவசக்தி ஆனந்தன் மற்றும் காதர்மஸ்தான் சமாதான பேரவையினர் உட்பட மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

(க-100)

## மதத்தில் கொண்ட பற்றுதலே கலாசார சீரழிவை தடுக்கிறது!

**சாள்ஸ் எம்.பி கூறுகிறார்**

மன்னார் மக்கள் தங்கள் மதத்தில் கொண்ட பற்றுதலும் அறிவுரையுமே கலாசார சீரழிவை நோக்கி செல்ல விடாது தடுத்து வருகின்றது என்று சாள்ஸ் எம்.பி. தெரிவித்துள்ளார்.

நேற்றுமுன்தினம் இலங்கை மெதடிஸ்த திருச்சபைக்கான பேராயர் பேரருள் ஆசிரி பிரியலால் பெரேரா ஆண்டகை மன்னாருக்கு விஜயம் மேற் கொண்டிருந்தார்.

மன்னார் மெதடிஸ்த முகாமைத்துவ அருட்பணி ரவி முருகேஸ்பிள்ளை அடிகளார் தலைமையில் அவருக்கு மன்னார் மெதடிஸ்த ஆலயத்தில் நடைபெற்ற வரவேற்பு நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே சாள்ஸ் எம்.பி. தேற் கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில்-

வட பகுதியில் அண்மை காலமாக நிலவி வரும் வாள் வெட்டு போன்ற கலாசார சீரழிவானது மன்னாரில் இடம் பெறாமைக்கு முக்கிய காரணம் மன்னார் வாழ் மக்கள் பெரும்பாலும் தங்கள் மதங்களின் மேல் கொண்டுள்ள மதப்பற்றும் மதங்களின் மேல் காட்டுகின்ற நற்பண்புமே ஆகும்.

மன்னாரை பொறுத்தமட்டில் இப்பகுதி மக்கள் இறை அன்பிலும் இறை பண்பிலும் கட்டுப்பட்டு வாழ்பவர்களாக காணப்படுகின்றனர் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (112)

### அமெரிக்காவின் உலக வர்த்தக மையமான

## இரட்டைக் கோபுரங்கள் தகர்க்கப்பட்ட 16 ஆவது ஆண்டு நினைவுதினம் இன்று


யாழ்ப்பாணம், செப். 11

அமெரிக்காவின் நியூயோர்க் நகரில் இருந்த இரட்டைக் கோபுரங்கள் தகர்க்கப்பட்ட 16 ஆவது ஆண்டு நினைவு தினம் இன்றாகும். இதையொட்டி அமெரிக்காவின் பல இடங்களிலும் இன்று அஞ்சலி நிகழ்வுகள் இடம்பெறவுள்ளன.

கடந்த 2001 ஆம் ஆண்டு செப்டம்பர் மாதம் 11 ஆம் திகதி அல்கொய்தா இயக்கத் தீவிரவாதிகள் 19 பேர் விமானங்களைக் கடத்திச் சென்று நியூயோர்க் நகரின் லோயர் மன்ஹாட்டன் பகுதியில் இருந்த உலக வர்த்தக மைய இரட்டை கோபுரத்தின் மீது விமானங்களை மோதித் தாக்குதல் நடத்தினர்.

இதனால் 110 மாடிகளைக் கொண்ட கட்டடங்கள் தகர்ந்தன. இதில் 3 ஆயிரத்துக்கும் அதிகமானோர் பலியாயினர். உலகம் முழுவதும் பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்திய இந்தத் தாக்குதலைத் தொடர்ந்து பயங்கரவாதத்திற்கு எதிரான செயற்பாடுகளை அமெரிக்கா விரைவுபடுத்தியிருந்தது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்தத்தாக்குதலில்உயிரிழந்த மக்களுக்கான பிரதான அஞ்சலி நிகழ்வு இன்று நியூயோர்க்கில் தகர்க்கப்பட்ட இரட்டைக் கோபுரம் அமைந்திருந்த இடத்தில் இடம் பெறவுள்ளது. (ம)




## புதிய மோட்டார் வாகனச் சட்டம் ஓட்டோ தொழிலாளரைப் பாதிக்கும்

### அதைக் கைவிடக் கோருகின்றனர் ஓட்டோ தொழிலாளர்கள்

கொழும்பு, செப்.11

நாட்டில் அரசு அறிமுகப் படுத்தும் புதிய மோட்டார் வாகன திருத்தச்சட்டம் கொண்டுவரப் பட்டால் ஓட்டோ சாரதிகள் மோசமாகப் பாதிக்கப்படுவர் என தேசிய முச்சக்கரவண்டி தொழிலாளர்கள் சங்கம் தெரிவித்தது.

ஓட்டோக்களை முற்றாக இல்லாதொழித்து அதனை நம்பியிருக்கும் தொழிலாளர்களின் வயிற்றிலடிப்பதற்கான செயற்பாடாகவே அரசு புதிய மோட்டார் வாகன திருத்தச்சட்டத்தை நிறைவேற்ற நடவடிக்கை எடுக்கவுள்ளது எனவும் அச்சங்கத் தலைவர் சுனில் ஜயவர்தன தெரிவித்தார்.

மருதானை சனசமூக நிலையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

'இச்சட்டமானது மிகவும் பாரதூரமானதாகும். இதனை அரசாங்கம் உடனடியாக கைவிட வேண்டும். இல்லையெனின் அடுத்தமாத முற்பகுதியில் போக்குவரத்து அமைச்சை முற்றுகை யிடுவோம்' எனவும் சங்கத்தின் தலைவர் கூறினார். (ம)

## பரு. பிரதேச சபைக்கு உட்பட்ட பொது நிறுவனங்களுக்கு உதவி

### வடமாகாண சபை உறுப்பினர் கஜதீபன் வழங்கினார்



பருத்தித்துறை, செப்.11

வடமாகாணசபை உறுப்பினர் பா.கஜதீபன் தனது 2017 ஆம் ஆண்டுக்கான குறித்தொதுக்கப் பட்ட நிதியுதவியின் கீழ் பருத்தித் துறை பிரதேச சபைப் பகுதிகளுக் குட்பட்ட சனசமூகநிலையங்களுக்கு உதவிகளை வழங்கினார்.

நேற்று முன்தினம் சனிக்கிழமை மேற்படி நிகழ்வுகள் இடம் பெற்றன.

மந்திகையில் அமைந்துள்ள பருத்தித்துறைப் பிரதேச சபையில் இடம்பெற்ற நிகழ்வில் திக்கம் சனசமூக நிலையம், அறிவகம் சனசமூக நிலையம் மற்றும் குரும்பகட்டி முன்பள்ளி என்பவற்றுக்கு தளபாடங்கள் மற்றும் சிறார்களுக்கான பாண்ட் வாத்திய இசைக்கருவிகள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வில் வடமாகாண சபை உறுப்பினருடன், பருத்தித் துறை பிரதேசசபை செயலாளர் மற்றும், குறித்த சனசமூக நிலைய நிர்வாகிகள், உத்தியோகத்தர்கள் எனப்பலரும் கலந்துகொண்டனர். (ம)

## தேசிய இளைஞர் சேவை மன்றத்தால் முல்லைத்தீவில் 29 வேலைத்திட்டங்கள்

### பனிக்கன்குளத்தில் கரபந்தாட்ட மைதானத்திற்கு அடிக்கல்

முல்லைத்தீவு, செப்.11

தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தால் நடத்தப்படும் இளைஞர் சக்தி ஊருக்கு ஒரு கோடிஎனும் வேலைத்திட்டத்தின் கீழ் இம்முறை முல்லைத்தீவு மாவட்டத்தில் 29 திட்டங்கள் தெரிவு செய்யப்பட்டு நடைமுறைப்படுத்தப்படவுள்ளன.

இவ் வேலைத்திட்டத்துக்கென தேசிய இளைஞர் சேவைகள் மன்றத்தினால் ஒரு இலட்சத்து ஐம்பதாயிரம் ரூபா நிதி வழங்கப் படும். ஆனால், இளைஞர்கள் மூன்று இலட்சம் ரூபா பெறுமதியான வேலைத்திட்டத்தை செய்ய வேண்டும்.

போட்டி அடிப்படையில் நடைபெறும் இத்திட்டத்தில், மாவட்ட அடிப்படையில் வெற்றிபெறும் இளைஞர் கழகங்களுக்கு முதலாம் பரிசாக 5 இலட்சம் ரூபாவும் இரண்டாம் பரிசாக 4 இலட்சம் ரூபாவும் மூன்றாம் பரிசாக 3 இலட்சம் ரூபாவும் வழங்கப்படும்.

அதைவிட, தேசிய ரீதியில் முதல் பரிசாக ஒரு கோடி ரூபாவும் ஏனைய 10 இடங்களுக்கான பணப்பரிசும்வழங்கப்படவுள்ளன.

இத்திட்டத்தில் தெரிவு செய்யப் பட்ட பனிக்கன்குளம் மின்னல் இளைஞர் கழகத்தின் கரபந்தாட்ட மைதானம் அமைப் பதற்கான பணிகள்நேற்றுமுன்தினம்மாலை ஆரம்பித்து வைக்கப்பட்டது. வன்னி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் திருமதி சாந்தி சிறிஸ்கந்தராஜா இதில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு



திட்டத்தை ஆரம்பித்து வைத்தார்

மின்னல் இளைஞர் கழக தலைவர் தலைமையில் இடம் பெற்ற நிகழ்வில் கிராம இளைஞர் யுவதிகள், மக்கள் கிராம மட்ட அமைப்புக்களின் பிரதிநிதிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (ம-81)

### மாற்று வலுவுள்ளோரின்

## உற்பத்திப் பொருள்களின் கண்காட்சியும் விற்பனையும்

வடக்கு மாகாண மாற்று வலுவுள்ளோர் அமைப்புக்களின் ஏற்பாட்டில், 'சமதளத்தில் ஒன்றாக' என்னும் இயலாமையுடன் கூடிய நபர்களுடைய உற்பத்திப் பொருள்களின் கண்காட்சி யும் விற்பனையும் எதிர் வரும் 16ஆம் திகதி சனிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் கிளிநொச்சி மத்திய கல்லூரி மைதானத்தில் நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

"அங்கக் குறைவு, ஆற்றல் குறைவு அல்ல; உழைக்கும் கரங்களை ஊக்கப் படுத்துங்கள்" எனும் தொனிப்பொருளில் நடத்தப் படும் இந்தக் கண்காட்சியில் அனைவரும் கலந்து கொண்டு ஊக்குவிக்குமாறு மாகாண மாற்று வலுவுள்ளோர் அமைப்புக்கள் கேட்டுள்ளன. (இ)

## பாரம்பரிய வைத்தியர்களின் பிரச்சினைகளுக்கு தீர்வுகள்

### அமைச்சர் ராஜித தெரிவித்தார்

கொழும்பு, செப்.11

பாரம்பரிய வைத்தியர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகளுக்கும் தீர்வுகளைப் பெற்றுக் கொடுப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்படும் என சுகாதார அமைச்சர் ராஜித சேனாரத்ன தெரிவித்துள்ளார்.

ஐந்து வருடத்திற்கு ஒருமுறை 1500 ரூபாவைச் செலுத்தி, பாரம்பரிய வைத்தியர்களின் ஆயுள்வேத சபையில் பதிவு செய்து கொள்ள வேண்டும். இந்தப் பணத்தை செலுத்த முடியாத நிலையில் வைத்தியர்கள் இருப்பதாக இந்த சந்திப்பில் தெரிய வந்ததை அடுத்து, இவர்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கு சுகாதார அமைச்சு தீர்மானித்துள்ளது.

ஐக்கிய சுதேச வைத்தியர் சங்கத்துடன் நடைபெற்ற பேச்சுவார்த்தையின் போது இந்தத் தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.



இதற்கு அமைய, பாரம்பரிய வைத்தியர்கள் 70 வயதிற்கு மேற்பட்டிருப்பார்களாயின்கட்டணத்தை அறவிடாமல் இருப்பதற்கும், கிராம உத்தியோகத்தர் மற்றும் பிரதேச செயலாளர்களின் அனுமதியுடன் இவ்வாறான வைத்தியர்களின் கட்டணத்தை அறவிடுவதிலிருந்து விடுவிப்பதற்கும் அமைச்சர் ராஜித சேனாரத்ன தீர்மானித்துள்ளார். (ம)

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை
ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## இனி வருவது தேர்தல் ஆண்டு

புதிய அரசமைப்பு உருவாக்க நடவடிக்கை பெரும்பாலும் தீர்க்க மான கட்டத்தை எட்டிவிட்டது.

அடுத்து வரும் வாரங்களில் நாடாளுமன்றச் செயற்பாடுகள் நாட்டின் தலைவிதி தொடர்பான பல முக்கியமான முடிவுகளைப் பிரதிபலிக்கப் போகின்றன என்பது நிச்சயம்.

இருபதாம் திகதியளவில் - அடுத்த பத்து நாள்களில் - அரசமைப்பு உருவாக்கத்துக்கான நடவடிக்கைக் குழுவின் இடைக்கால அறிக்கை அரசமைப்புப் பேரவையான நாடாளுமன்றத்துக்கு வந்து விடும்.

இந்த இடைக்கால அறிக்கை தொடர்பில் பல தரப்புகளினாலும் கூறப்பட்டு வந்த சந்தேகங்கள், குறைகள், குற்றச்சாட்டுக்கள் தொடர்பான உண்மைகள் பத்து நாள்களில் வெளிச்சத்துக்கு வந்து விடும்.

இந்த அறிக்கை வெளிவந்த பின்னர் அரசும் நாட்டின் தலைவர்களான ஜனாதிபதியும் பிரதமரும் சேர்ந்து திட்டவட்டமான ஒரு முடிவை எடுப்பார்களாயின் 2017 இலேயே அரசமைப்பு உருவாக்கத்தில் பயனுள்ள அளவுக்கு முன்னேறி விடலாம் என்கின்றன சட்ட வட்டாரங்கள்.

இடைக்கால அறிக்கை வெளிவந்தாலும் கூட -

நிறைவேற்று அதிகார முறைமை ஒழிப்பு, தேர்தல் சீர்திருத்தங்கள், அதிகார பகிர்வு ஆகிய விடயங்களில் அரசுக் கட்டமைப்புக்கு உள்ளேயும் கூட்டமைப்புக்கு வெளியேயும் எந்த அம்சங்களிலும் ஒற்றுமைப்பாடு ஏற்பட்டதாகத் தகவலில்லை; இன்னும் முரண்பாடுகள் நீடிக்கின்றன.

ஆளும் தரப்புக்குள் இருக்கும் சுதந்திரக் கட்சித் தரப்பு நிறைவேற்று அதிகார ஆட்சி முறைமையை நீக்குவதற்கு இணங்குவதாக இல்லை.

அதிகாரப் பரவலாக்கலுக்கு அரசுக்குள் அதிகம் எதிர்ப்பு இல்லாவிட்டாலும் கூட்டு எதிரணியும் பௌத்த, சிங்களப் பேரினவாத தரப்புகளும் அதற்கு இணங்குமா என்பது கேள்வியே.

இவை எல்லாவற்றையும் தாண்டி புதிய அரசமைப்புக்கான நகல் வடிவம் நாடாளுமன்றுக்கு வந்தாலும் அதற்கு குறைந்த பட்சம் நாடாளுமன்றில் மூன்றில் இரண்டு பங்கு ஆதரவு கிட்டுமா என்பது கேள்வியே.

மூன்றில் இரண்டு பங்கு ஆதரவு கிட்டினாலும் கூட சர்வஜன வாக்கெடுப்பில் அது மக்கள் ஆதரவு என்ற தடையைத் தாண்டுமா என்பது அடுத்த கேள்வி.

ஏற்கனவே புதிய அரசமைப்பை உருவாக்க விடமாட்டேன் எனக் கங்கணம் கட்டியுள்ள முன்னாள் பாதுகாப்புச் செயலாளரும், முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் சகோதரருமான கோட்டாபய ராஜபக்ஷ, அதற்காகவென்றே 'எலிய' (வெளிச்சம்) என்ற அமைப்பை உருவாக்கி நிற்கின்றார். புதிய அரசமைப்பு உருவாக்கத்தைத் தடுப்பதே தமது அமைப்பின் நோக்கம் என்று அவர் பிரகடனப்படுத்தியுமிருக்கின்றார்.

எனவே, அடுத்து வரும் நாள்களில் இந்தத் தரப்பினரின் செயற்பாடுகள், எதிர்ப்பு நடவடிக்கைகள் தீவிரமாகும் என எதிர்பார்க்கலாம்.

அவற்றைத் தாண்டி, இந்த அரசமைப்பு உருவாக்க முயற்சிகள் வெற்றி பெறும் எனத் தமிழ்க் கூட்டமைப்புத் தலைமை எதிர்பார்க்கின்றது.

அரசமைப்பு உருவாக்க முயற்சி ஒருபுறம் நாடாளுமன்றுக்கு வரும் அதேசமயம், இருக்கின்ற அரசமைப்புக்கு கொண்டு வரப்படும் இருபதாவது திருத்தமும் அடுத்து வரும் வாரங்களில் நாடாளுமன்றத்துக்கு வரும் வாய்ப்புகள் அதிகம் உள்ளன.

அது உயர் நீதிமன்றத் தடையை தாண்டுமா என்ற முடிவு பெரும்பாலும் இரண்டொரு நாள்களில் வெளியாகிவிடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

அப்படித் தாண்டினாலும் நாடாளுமன்றில் அதற்கும் மூன்றில் இரண்டு பங்கு ஆதரவு கிட்டுமா என்பதும் சந்தேகத்துக்கு உரியது.

அவ்வாறு உயர் நீதிமன்றத் தடை மற்றும் நாடாளுமன்றின் மூன்றில் இரண்டு பங்கு ஆதரவு ஆகியவற்றை அது பெறத் தவறுமானால் அடுத்த சில மாதங்களில் கிழக்கு, வடமத்திய மற்றும் சப்ரகமுவ மாகாண சபைகளுக்கான தேர்தல்கள் தவிர்க்க முடியாதனவாகி விடும்.

போதாக்குறைக்கு, தற்போது நிறைவேற்றப்பட்டுள்ள உள்ளூராட்சித் தேர்தல் திருத்தச் சட்டத்துக்கு அமைய இதுவரை நடத்தப்படாமல் மூன்று வருடங்களாகத் தள்ளிப் போயுள்ள உள்ளூராட்சித் தேர்தல்களை டிசெம்பரில் அல்லது ஜனவரியில் நடத்துவது தவிர்க்க முடியாததாகியுள்ளது.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமை நம்புகின்றமை போல, அரசியல் தீர்வையும் உள்ளடக்கிய புதிய அரசமைப்புக்கான நகல் வடிவம் இவ்வாண்டு இறுதிக்குள் தயாராகுமானால் அதற்கான சர்வஜன வாக்கெடுப்பையும் கூட அப்போது நடத்த வேண்டியிருக்கும்.

அப்படிப் பார்த்தால் அடுத்த வருடப்பிறப்போடு நாடு வரிசையாகத் தேர்தல்களைச் சந்திக்க வேண்டியிருக்கும்.

கடந்த இரண்டு ஆண்டுகளாக விரும்பியோ விரும்பாமலோ தேர்தல்களைத் தள்ளிப் போட்டு வரும் நல்லாட்சி அரசின் தலைமையில் அடுத்த ஆண்டு வரிசையாகத் தேர்தல்கள் வந்திறங்கப் போகின்றன என்பது நிச்சயம்.

அந்தத் தேர்தல்களில் நல்லாட்சி அரசினர் கோட்டை விட்டால், அவர்களது இருப்புக்கு ஆப்பு வைக்கக் கூடிய பொதுத் தேர்தலையும் கூட அவர்கள் விரைந்து சந்திக்க வேண்டி நேர்ந்து விடலாம்.

# இரத்தினபுரிப் பகுதியில் பெரியளவில் மண்சரிவு!




கொழும்பு, செப். 11

இரத்தினபுரி துரெக்கந்த பகுதியில் பெரிய மண் சரிவு ஏற்பட்டுள்ளது.

இதன் காரணமாகத் துரெக்கந்த வேவல்வத்தை பாதையின் போக்குவரத்து முற்றாகத் தடைபட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த 7 ஆம் திகதி தொடக்கம் இரத்தினபுரி மாவட்டத்தின் 5 பிரதேச செயலகத்திற்கு உட்பட்ட கிராமங்களில் அதிக மழைவீழ்ச்சி பதிவாகியுள்ள நிலையில், பல பிரதேசங்கள் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

மண்சரிவு அபாய எச்சரிக்கை அனர்த்த முகாமைத்துவ மத்திய நிலையத்தினால் விடுக்கப்பட்ட நிலையில், மக்கள் குறித்த பிரதேசங்களில் இருந்து வெளியேறியுள்ளனர்.

இந்த நிலையில் அடுத்தடுத்து மண்சரிவு அனர்த்தம் இரத்தினபுரியில் ஏற்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.

# 40 இராணுவத்தினர் சென்ற பஸ் தடம்புரண்டு விபத்துக்குள்ளானது!



கொழும்பு, செப். 11

அம்பாறை - கொண்டவட்டவான் இராணுவ முகாமிலிருந்து இராணுவத்தினரை ஏற்றிச் சென்ற பஸ் ஒன்று தடம் புரண்டு விபத்துக்குள்ளாகியுள்ளது.

இந்த விபத்து சவளக்கடை - வேப்பையடி பிரதான வீதியிலுள்ள 15ஆம் கிராமம் கிணற்றடிச் சந்திக்கருகில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

சுமார் 40 இராணுவத்தினரை ஏற்றிக்கொண்டு வேப்பையடி நோக்கிச் சென்ற இராணுவ பஸ் ஒன்றே பாதையை விட்டு விலகி தடம்புரண்டு விபத்துக்குள்ளானது.

இந்த விபத்தில் எவருக்கும் பாதிப்புக்கள் ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த பஸ்ஸின் ரயர் காற்று போனதால் பாதையை விட்டு விலகி தடம் புரண்டது எனத் தெரிவிக்கப்படுகிறது.

(க)

# மஸ்கெலியா பகுதியில் 30 பேர் இடம்பெயர்வு!




கொழும்பு, செப். 11

மஸ்கெலியா - பிரவுண்லோ தோட்டத்தில் தொடர் லயன் குடியிருப்பைச் சேர்ந்த 30 பேர் தோட்ட கலாசார மண்டபத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

பிரவுண்லோ தோட்டத்தைச் சேர்ந்த வீடொன்றின் மீது கற்பாறை சரிந்து விழுந்ததையடுத்தே இந்த 30 பேரும் இடம்பெயர்ந்துள்ளனர்.

மஸ்கெலியா பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பிரவுண்லோ தோட்டத்தில் கடந்த வெள்ளிக்கிழமை இரவு கற்பாறை சரிந்து விழுந்ததில் வீடொன்று பகுதியளவில் சேதமடைந்துள்ளது.

இதன்போது வீட்டில் இரு ஆண்கள், இரு பெண்கள், ஐந்து சிறுவர்கள் உட்பட ஒன்பது பேர் இருந்துள்ளனர். எனினும், ஒருவருக்கும் பாதிப்பு எதுவும் ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

எனினும், ஏனையோரது பாதுகாப்பையும் கருத்திற் கொண்டு மேற்படி ஒன்பது பேருடன், இந்த தொடர் லயக் குடியிருப்பில் உள்ள ஏனைய 5 குடும்பங்களைச் சேர்ந்த 21 பேரும் தற்போது பிரவுண்லோ தோட்ட கலாசார மண்டபத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளனர் எனப் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மலையகத்தில் தொடர்ந்து நிலவிரும் சீரற்ற காலநிலை காரணமாக, இந்த அனர்த்தம் இடம்பெற்றது.

இதேவேளை, கடந்த 08 ஆம் திகதி அக்கரபத்தனை - டொரிங்டன் - கல்மதுரை பிரிவில் தொடர்ச்சியாகப் பெய்த மழை காரணமாக ஐந்து வீடுகள் தாழிறங்கியதையடுத்து, ஐந்து குடும்பங்களைச் சேர்ந்த 20 பேர் தற்காலிகமாக வேறு இடத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

தொடரும் சீரற்ற காலநிலை காரணமாக பொது மக்களை விழிப்புடன் செயற்படுமாறு பொலிஸார் அறிவுறுத்தல் விடுத்துள்ளனர்.

**நாளை**

12.09.2017
செவ்வாய்க்கிழமை
நட்சத்திரம் : கார்த்திகை மு.ப 09.54 வரை
திதி : ஸ்டிமி பி.இ. 2.12 மணி வரை
சுபநேரம் : 10.33 - 12.03 வரை
இராகுகாலம் : 03.03 - 04.33 வரை

# இலங்கையுடன் உறவை பலப்படுத்த இந்தியப் பிரதமர் மோடி விருப்பம்!

கொழும்பு, செப். 11

இந்தியாவுக்கு விஜயம் மேற்கொண்டுள்ள இலங்கை வெளிவிவகார அமைச்சர் திலக் மாரப்பன, நேற்று முன்தினம் பிற்பகல் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியைச் சந்தித்துப் பேச்சு நடத்தினார்.

ஹைதராபாத் இல்லத்தில் நடந்த இந்தச் சந்திப்பின் போது, இருதரப்பு முக்கியத்துவம் வாய்ந்த விவகாரங்கள் தொடர்பாக பேச்சுக்கள் நடத்தப்பட்டது என்று தகவல்கள் தெரி விக்கின்றன.

இதுதொடர்பாக இந்திய அரசாங்கம் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில்,-

இலங்கை வெளிவிவகார அமைச்சர் திலக் மாரப்பன, நேற்றுமுன்தினம் பிற்பகல் இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியை, மரியாதை நிமித்தமாகச் சந்தித்தார்.

இலங்கை வெளிவிவகாரர அமைச்சராகப் பொறுப்பேற்றுக் கொண்டமைக்காக, திலக் மாரப்பனவுக்கு, இந்தியப் பிரதமர் மோடி வாழ்த்துக்களைக் கூறினார்.

சர்வதேச வெசாக் நாள் கொண்டாட்டங்களில் பங்கேற்பதற்காக, கடந்த மே மாதம் தாம் இலங்கைக்கு மேற்கொண்ட பயணம் பயனுள்ளதாக அமைந்தது என்று இந்தியப் பிரதமர் தெரிவித்தார்.

இலங்கையுடனான உறவுகளுக்கு இந்தியா கூடுதல் முக்கியத்துவம் அளிக்கும் என்பதை அவர் மீண்டும் உறுதிப்படுத்தினார்.

இரண்டு நாடுகளும் ஆழமான- பரந்த அடிப்படையிலான உறவுகளைக் கொண்டுள்ளன.

இருதரப்பு ஒத்துழைப்பை மேலும் விரிவாக்கி, பலப்படுத்திக் கொள்வதற்கு, இலங்கை ஜனாதிபதி மற்றும் பிரதமருடன் தொடர்ந்து பணியாற்றுவதற்கு எதிர்பார்த்திருப்பதாகவும், இந்தியப் பிரதமர் தெரிவித்தார். - என்று கூறப்பட்டுள்ளது.

(க)

**திலக் மாரப்பனவுடன் அவர் முக்கிய பேச்சு**



# கடையில் தீ அனர்த்தம்; 2 வயது குழந்தை பலி!

கிளிநொச்சி, செப். 11

கிளிநொச்சி கண்ணகி நகர் பகுதியில் கடை ஒன்றில் ஏற்பட்ட தீ விபத்தில் சிக்கி குழந்தை ஒன்று உயிரிழந்துள்ளது.

இவ்வாறுஉயிரிழந்தகுழந்தை றமேஸ்குமார் சுஜித் இரண்டரை வயது என அடையாளம் காணப்பட்டுள்ளது.

இந்தச் சம்பவம் நேற்று முன்தினம் இரவு இடம்பெற்றுள்ளது.



இந்தச் சம்பவம் தொடர்பிலான மேலதிக விசாரணைகளை கிளிநொச்சி பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# உடல் நல மேம்பாட்டு தேசிய வார நிகழ்வுகள்!

கொழும்பு, செப். 11

விளையாட்டு அமைச்சின் 50 வருட பூர்த்தியை முன்னிட்டு, விளையாட்டு மற்றும் உடல் நல மேம்பாட்டு தேசிய வார நிகழ்வுகள் நாடளாவிய ரீதியில் ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

கிழக்கு மாகாண விளையாட்டுத் திணைக்களம், அம்பாறை மாவட்டச் செயலகம் என்பனவற்றின் பணிப்பின் பேரில் அம்பாறை மாவட்ட பிரதேச செயலகங்கள் விளையாட்டு மற்றும் உடல் நல மேம்பாட்டு வார நிகழ்வுகளை நடத்தத் திட்டமிட்டுள்ளன.

அக்கரைப்பற்று பிரதேச செயலக நிகழ்வுகள் பிரதேச செயலாளர் ஏ.எம். அப்துல் லத்தீப் தலைமையில் நடைபெறவுள்ளன.

இதன் ஓர் அங்கமாக உடற்ப யிற்சி நிகழ்வு இன்று அக்கரைப்பற்று மாநகர சபை நீர்ப்பூங்காவில் காலை 8.30 மணிமுதல் நடைபெறவுள்ளது.

அதனைத்தொடர்ந்துஅக்கரைப்பற்று பிரதேச செயலகத்தில் இலவச வைத்திய முகாமொன்றும் நடைபெறவுள்ளது. இதில் பிரதேசத்திலுள்ள அரச உத்தியோகத்தர்கள் தொற்றா நோய்களைக் கண்டறிவதற்கான இரத்தப் பரிசோதனையை மேற்கொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

# இந்தியத் தூதரகத்தின் பாதுகாப்பு ஆலோசகர் இலங்கை இராணுவத் தளபதியுடன் சந்திப்பு!



கொழும்பு, செப். 11

இந்தியத் தூதரக உதவிப் பாதுகாப்பு ஆலோசகராக, லெப்.கேணல் ரவி மிஸ்ரா அண்மையில் நியமிக்கப்பட்டுள்ளார்.

இவர் இலங்கை இராணுவத் தளபதி லெப்.ஜெனரல் மகேஸ் சேனநாயக்கவை நேற்று முன்தினம் சந்தித்துக் கலந்துரையாடினார்.

இலங்கை இராணுவத் தலைமையகத்தில் இந்தச் சந்திப்பு இடம் பெற்றுள்ளது.

இருதரப்பு இராணுவ முக்கியத்துவம் வாய்ந்த விவகாரங்கள் தொடர்பாக இந்தச் சந்திப்பின் போது கலந்துரையாடப்பட்டுள்ளது.

இந்தியத் தூதரகத்தில் பாதுகாப்பு ஆலோசகராக இந்தியக் கடற்படை அதிகாரிகளே நியமிக்கப்படுவது வழக்கம்.


இலங்கையில் சீனத் தலையீடுகள் அதிகரித்ததை அடுத்து, உதவிப் பாதுகாப்பு ஆலோசகராக, இந்திய இராணுவத்தைச் சேர்ந்த அதிகாரிகளை இந்தியா நியமித்து வருகிறது.

(க)

## வலிகாமம் தென் மேற்குப் பிரதேச சபை பண்டத்தரிப்பு பட்டின உப அலுவலகம் பண்டத்தரிப்பு ஆதனப் பெயர் மாற்ற அறிவித்தல்

**வட்டாரம்:- 2**
**உத்தேச ஆதன இல :- 171/12, 171/13,171/14**
**வீதி :- சில்லாலை டச்சு வீதி**
**கிராம சேவையாளர் பிரிவு:- J/148, சில்லாலை வடக்கு.**

வட்டாரம் 02, சில்லாலை டச்சு வீதி, உத்தேச ஆதன இல 171/12 இல் அமைந்துள்ளது. உறுதிப்படி வடமாகாணம், யாழ். மாவட்டம், வலிகாமம் மேற்கு (தற்போது வலிகாமம் தென்மேற்கு) பகுதி பண்டத்தரிப்பு கோவில்பற்று சில்லாலை இறை **'வேரை கூளாக்கலட்டி'** என்னும் பெயருள்ள நிலப்பரப்பு 4, நிலப்பரப்பு 2 குழி $12^1/_2$, நிலப்பரப்பு 5 மொத்தம் நிலப்பரப்பு 11 குழி $12^1/_2$ கொண்ட இவ்வாதனம் சில்லாலையைச் சேர்ந்த அந்தோனிப்பிள்ளை யோசப் குணசீலனும் பெண் மேரிறோஸ் நிர்மலா அவர்களால் வெளிப்படுத்துகை உறுதி மூலம் பிரசித்த நொத்தாரிஸ் ப.இராசகுரு அவர்கள் முகதாவில் நிறைவேறிய 8099 இலக்க 29.05.2011 திகதிய வெளிப்படுத்துகை உறுதி மூலம் தமக்குச் சொந்தம் என தெரியப்படுத்தி எமது பண்டத்தரிப்பு பட்டின உப அலுவலக ஆதனப் பதிவேட்டில் தமது பெயரை உட்புகுத்துவதற்கு விண்ணப்பம் செய்துள்ளனர். நில அளவையாளர் திரு S.பாலேந்திரம் அவர்களால் வரையப்பட்ட 878 ஆம் இலக்க 09.06.2017 ஆம் திகதிய நில அளவைப்படத்தின் பிரகாரம் இவ் ஆதனம் ஆனது 'வேரை கூளாக்கலட்டி' நிலப்பரப்பு 9 குழி 9.68 கொண்ட குறித்த ஆதனத்தின் பெயர் மாற்றம் தொடர்பாக ஆட்சேபனை தெரிவிப்பவர்கள் யாராவது இருப்பின் உரிய ஆவணங்களுடன் பிரசுரித்த திகதியிலிருந்து 30 நாள்களுக்குள் எழுத்து மூலம் அறியத்தருமாறும், அவ்வாறு உரிமைகோராதவிடத்து குறித்த ஆதனமானது அந்தோனிப்பிள்ளை யோசப் குணசீலனும் பெண் மேரிறோஸ் நிர்மலா எனும் பெயருக்கு பெயர் மாற்றம் செய்ய உரிய நடவடிக்கை மேற்கொள்ளப்படும் என்பதனை அறியத்தருகின்றேன்.




**செயலாளர், வலி.தென்மேற்கு பிரதேச சபை, மானிப்பாய்.**

# 20 ஆவது திருத்தத்தை விவாதிக்காமல் நழுவி வருகிறது கிழக்கு மாகாண சபை!

மட்டக்களப்பு, செப். 11

மாகாணசபைகளுக்குரிய அதிகாரத்தை நாடாளுமன்றம் தன்வயப்படுத்திக்கொள்ளும் வகையில் கொண்டுவரப் பட்டுள்ள அரசமைப்பின் 20 ஆவது திருத்தச் சட்டத்தை ஊவா, தென் மற்றும் வடக்கு மாகாண சபைகள் நிராக ரித்துள்ளன. இந்த நிலையில், கிழக்கு மாகாணசபை இந்த விடயத்தை விவாதத்துக்கு எடுத்துக்கொள்ளாமல் நழுவல் போக்கைக் கடைப்பிடிக் கிறது.

-இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின்மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப் பினர் சதாசிவம் வியாழேந் திரன் தெரிவித்தார்.

மட்டக்களப்பு ஏறாவூரில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் கலந்து கொண்டு உரையாற் றுகையிலேயே அவர் மேற் கண்டவாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித் தவை வருமாறு:-

20 ஆவது திருத்தச் சட்ட மூலத்தை நிராகரிக்காமல் கிழக்கு மாகாணசபையின் ஆயுள் காலம் நிறைவடைந்து விட்டால்; தேர்தலுக்கு முகம் கொடுக்க வேண்டியேற்படும் என்பதைப் புரிந்துகொள்ள வேண்டும்.

எனவே, மாகாணசபைக ளைக் கட்டுப்படுத்துகின்ற எந்தவொரு நிகழ்ச்சி நிரலை யும் நாங்கள் ஏற்றுக் கொள்ள முடியாது.

கிழக்கு மாகாணசபையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு மற்றும் இலங்கை முஸ்லிம் காங்கிரஸ்ஆகியன இணைந்து ஆட்சி அமைத்துள்ளன. நல் லிணக்க அடிப்படையில் முஸ் லிம் சமூகத்தைச் சேர்ந்த ஒரு வர் முதலமைச்சராக உள்ளார். இது இணக்க அரசியல் ஆகும். அதனை நாங்கள் வரவேற்கிறோம். ஒரு வேளை கிழக்கு மாகாணத்தினுடைய ஆட்சிக்காலம் மேலதிகமாக ஒரு வருடம் நீடிக்கப்படுமா யின்முதலமைச்சர்பதவியைத் தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் ஒருவருக்கு வழங்க முஸ்லிம் காங்கிரஸ் முன்வர வேண்டும் இதுதான் உண்மை யான நல்லிணக்கம்.



**குற்றஞ்சாட்டுகிறார் வியாழேந்திரன் எம்.பி.**

வடக்கு, கிழக்கு மாகாணங் களில் வாழ்கின்ற மக்கள், தமிழ்த் தேசியக் கூட்டமைப் புக்கு மாத்திரமே வாக்களித் தார்கள். ஒரு தனிக்கட்சிக்கு அவர்கள்வாக்களிக்கவில்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு யாருடைய வீட்டுச் சொத்தும் அல்ல. கூட்டமைப்புக்குள் இருந்து கொண்டு அதனை உடைப்பதற்காகச் சிலர் சதி செய்கிறார்கள். அதற்கு அரசும் துணைபோகிறது. இது தமிழ் மக்களுக்குச் செய்கின்ற துரோகமாகும். எங்களுக் குள்ளேயே உள்ள காட்டிக் கொடுப்புக்கள் மற்றும் ஒற்று மையின்மை காரணமாகவே அகிம்சை மற்றும் ஆயுத ரீதி யான போராட்டங்களில் நாங் கள் இலகுகளை அடைய வில்லை. இந்த நிலையில், தற்போது தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு தமிழ் மக்களின் ஏக பிரதிநிதிகளாக பயணிக் கும்போது அதனை உடைப்ப தற்குச் சதி நடைபெறு கிறது.-என்றார். (ச)

## காத்தான்குடியில் விபத்து; இரண்டு பேர் படுகாயம்!




காத்தான்குடி, செப். 11

காத்தான்குடிப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட புதிய காத்தான்குடியில் ஓட்டோவுடன் மோட் டார் சைக்கிள் மோதி விபத்துக்குள்ளானதில், மோட்டார் சைக்கிளில் பயணித்த இருவர் காயமடைந்தனர்.

படுகாயமடைந்த இருவரும் காத்தான்குடி ஆதார வைத்தியசாலையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்டுள்ளனர்.

இந்த விபத்துத் தொடர்பான மேலதிக விசா ரணைகளை காத்தான்குடிப் பொலிஸார் மேற்கொண்டுள்ளனர். (ச)

## கிழக்கு மாகாண அதிபர்களுக்கு புதிய இடமாற்றக் கொள்கை!

### — தமிழாசிரியர் சங்கம் வரவேற்பு —

கிழக்கு மாகாணத்தில் அதிபர்க ளுக்கு வகுக்கப்பட்டுள்ள புதிய இடமாற்றக் கொள்கைக்கு அம் மாகாணத் தமிழாசிரியர் சங்கம் வரவேற்புத் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் ஆசிரியர் சங் கத்தின் பொதுச்செயலாளர் சிவக் கொழுந்து ஜெயராஜாவினால் வெளியிட்டுள்ள அறிக்கை யிலேயே இவ்விடயம் குறிப் பிடப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் தெரி விக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

கிழக்கு மாகாணத்தில் கடமை யாற்றும் அதிபர்கள் முறையற்ற இடமாற்றங்களுக்கு உட்பட்டு முரண்பாடுகளுக்கும் மன உளைச்சலுக்கும் உள்ளாக்கப் பட்டிருந்தனர். இந்த நிலையில், அதிபர்களின்இடமாற்றத்துக்கான தனித்துவமான கொள்கையை முதலமைச்சர் நஸீர் அஹமட் தலைமையிலான மாகாணசபை நிர்வாகமும், மாகாணக் கல்வி அமைச்சும் தற்போது வடிவ மைத்துள்ளது.

இந்தப் புதிய இடமாற்றக் கொள்கை வகுக்கப்பட்டதன் மூலம் இடமாற்றப் பிரச்சினை முற்றாக முடிவுக்கு வந்துள்ளது. ஒரே பாடசாலையில் கடமையாற் றும் அதிபர்களுக்கும், அலுவ லகங்களில் கடமையாற்றும் கல்வி நிர்வாக அதிகாரிகளுக்கும் இடமாற்றங்கள் வழங்கப்படா மையால் வடக்கு ,கிழக்கு மாகா ணங்களில்உள்ளமாணவர்களின் கல்வியில் பின்னடைவு ஏற் பட்டது.

தற்போது பாடசாலை அதிபர்களிடமிருந்து இடமாற்ற விண்ணப்பங்கள் கோரப்பட்டுள் என. இதற்கமைய எதிர்வரும் ஜனவரி மாதத்தோடு அதிபர் இடமாற்ற முரண்பாடுகள் முடி வுக்கு வந்து விடும். அதன் பின் னர் கல்விச் செயற்பாடுகள் சீராக இடம்பெறும்.- என்றுள்ளது.



## நான்கு உணவகங்களுக்கு அம்பாறையில் மூடுவிழா!

அம்பாறை, செப். 11

அம்பாறையில் நுகர் வுக்குப் பொருத்தமற்ற வகையில் பழுதடைந்த உணவுகளை வைத்தி ருந்த நான்கு உணவ கங்கள் காலவரையறை யின்றி மூடப்பட்டுள் ளன என பொத்துவில் பிரதேச மேற்பார்வை பொதுச் சுகாதார பரி சோதகர் எம்.எஸ். அப் துல் மலீக் தெரிவித்தார்.

பொத்துவில் பிரதேச சுகாதார அதிகாரி வைத் தியர் ஏ.எம். இஸ்ஸதீன் தலைமையில் பொதுச் சுகாதாரப் பரிசோத கர்கள் நேற்றுமுன்தினம் அம்பாறையில் உள்ள உணவகங்களில் திடீர் சுற்றிவளைப்பை மேற் கொண்டனர். இதன் போதே மேற்படி உணா வகங்கள் மூடப்பட்டன. (ச)

## கிழக்கு முதலமைச்சராக தமிழர் வர வேண்டும்!

**சு.க. அமைப்பாளர் தெரிவிப்பு**

மட்டக்களப்பு, செப். 11

அரசியல் சாணக்கியம் மற்றும் அனுபவம் கொண்ட தமிழர் ஒருவர் கிழக்கு மாகாண முதலமைச்சராக வர வேண்டும்.

-இவ்வாறு சிறிலங்கா சுதந்திர கட்சியின் பட்டிருப்புத் தொகுதி அமைப்பாளர் இரா.சாணக்கியன் தெரிவித்துள்ளார்.

சமகால அரசியல் தொடர்பாக ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு கூறி னார்.

அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

மட்டக்களப்பு மாவட்டத்தில் சிறி லங்கா சுதந்திரக் கட்சியிலோ மற்றும் ஐக்கிய தேசியக் கட்சியிலோ அரசியல் சாணக்கியம் உள்ள தமிழர் கள் எவரும் இல்லை. தற்போது அரசியல் அனுபவம் இல்லாத முகங்களை உள்வாங்கும் வகையில் தமிழர்களின் அரசியல் கலாசாரம் சென்று கொண்டிருக்கின்றது. -என் றார். (ச)







மட்டக்களப்பு - செங் கலடிப் பிரதேசசபை பிரி வுக்குட்பட்ட பிரதே சங் களில் வாசிகசாலை, சுற் றுலாப் பயணிகளுக்கான ஓய்வுமடம் என்பன நேற்று ஞாயிற்றுக்கிழமை திறந்து வைக்கப்பட்டன.

இந்த நிகழ்வு செங்கலடி பிரதேசசபை செயலாளர் கே.கோபாலரெட்ணம் தலைமையில் நடைபெற் றது. இந்த நிகழ்வில் கிழக்கு மாகாண முதலமைச்சர் ஹாபீஸ் நஸிர் அஹமட், கிழக்கு மாகாண விவசாய அமைச்சர் கி.துரைராஜசிங் கம், கிழக்கு மாகாண சபை பிரதி அவைத் தலைவர் பிரசன்னா இந்திரகுமார் உட்படப் பலரும் கலந்து கொண்டனர். (ச)

# மத்தள விமான நிலையம் ராணுவத் தேவைக்கு இல்லை!




கொழும்பு, செப். 11

மத்தள விமான நிலையத்தை இராணுவத் தேவைகளுக்குப் பயன்படுத்தக் கூடாது என்ற முக்கியமான நிபந்தனையை இந்தியாவிடம் இலங்கை முன்வைத்துள்ளது என தெரிவிக்கப்படுகிறது.

மத்தள விமான நிலையத்தை இந்திய நிறுவனம் ஒன்றுக்கு குத்தகை அடிப்படையில் வழங்கும் கூட்டு முயற்சி உடன்பாடு ஒன்றைச் செய்து கொள்வதற்கான பேச்சுகள், இரண்டு நாடுகளுக்கும் இடையில் நடத்தப்பட்டு வருகின்றன.

இந்த நிலையில், மத்தள விமான நிலையம் தொடர்பாக இந்தியாவுடன் செய்து கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ள உடன்பாட்டில், இந்த விமான நிலையத்தை இராணுவத் தேவைகளுக்குப் பயன்படுத்தக் கூடாது என்ற நிபந்தனை உள்ளடக்கப்பட்டிருக்கும் என்று சிறிலங்காவின் சிவில் விமானப் போக்குவரத்து அமைச்சின் செயலர் நிகால் சோமவீர தெரிவித்துள்ளார்.

**இந்தியாவுக்கு இலங்கை அரசு நிபந்தனை!**

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

விமானப் போக்குவரத்து கட்டுப்பாட்டுக் கோபுரத்தையும் இலங்கையே நிர்வகிக்கும்.

மத்தள விமான நிலையத்தின் 70 வீத உரிமையை தமக்கு வழங்குமாறு இந்தியா கேட்டுக் கொண்டுள்ளது. எனினும், தமக்கு கூட்டு முயற்சி நிறுவனத்தில் 40 வீத உரிமை இருக்க வேண்டும் என்றும் இலங்கை அரசு வலியுறுத்தியுள்ளது.

அத்துடன், இந்த உடன்பாடு 40 ஆண்டுகளுக்கு நடைமுறையில் இருக்கும் என்றும், அதன் பிறகு, தேவைப்பட்டால் இரண்டுதரப்புகளும் இணைந்து நீடித்துக்கொள்ளலாம் என்றும் இந்தியா யோசனையை முன்வைத்துள்ளது என்றும் அவர் கூறியுள்ளார்.

மத்தள விமான நிலைய உடன்பாடு எதிர்வரும் டிசெம்பர் மாதத்துக்குள் நிறைவு செய்யப்படும் என்று எதிர் பார்க்கப்படுகிறது. இதில், இரண்டு முக்கிய நிபந்தனைகள் உள்ளடக்கப்படும்.

அம்பாந்தோட்டை துறைமுகம் தொடர்பாக சீன நிறுவனத்துடன் செய்து கொண்ட உடன்பாட்டை ஒத்த விதிமுறைகளை இந்த உடன்பாட்டிலும் இலங்கை சேர்த்துக் கொள்ளவுள்ளது.

## நல்லாட்சி அரசுக்கு எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை!



**ரஞ்சித் டி சொய்சா கூறுகிறார்**

கொழும்பு, செப். 11

ஒவ்வொரு அமைச்சர்கள் மீதும் தனித்தனியாக நம்பிக்கையில்லாப் பிரேரணைகளைச் சமர்ப்பிப்பதற்குப் பதிலாக ஒட்டுமொத்த அரசுக்கும் எதிராக நம்பிக்கையில் லாப் பிரேரணை ஒன்றை நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்க ஒன்றிணைந்த எதிர்க் கட்சி தயாராகி வருகிறது என ஒன்றிணைந்த எதிர்க் கட்சியின் தேசிய அமைப்பாளரும் இரத்தினபுரி மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான ரஞ்சித் டி சொய்சா தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இந்த நல்லாட்சி அரசு மகா நாயக்கர்களுக்கும் இராணுவத் தினருக்கும் எதிராகவே செயற்பட்டு வருகின்றது.

ஆகவே, ஒவ்வொரு அமைச்சர்களுக்கும் எதிராக நம்பிக்கையில் லாப் பிரேரணைகளை கொண்டுவருவதற்குப் பதிலாக ஒட்டு மொத்த அரசுக்கும் எதிராக நம்பிக்கையில்லாப் பிரேரணை கொண்டுவரப் படும்.

அத்துடன், அரசில் இருக்கும் அமைச்சரும் முன்னாள் இராணுவத் தளபதியுமான சரத் பொன்சேகா சொற்ப வாக்குகளைப் பெற்ற மக்கள் ஆதரவற்ற ஒருவர். அவர் தற்போது இராணுவ ரகசியம் பற்றி பேசிக் கொண்டிருக்கின்றார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் கருத்தும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்கவின் கருத்துமே அவரது குரலாக ஒலிக்கின்றது.

அத்துடன், இந்த அரசு செல்கின்ற போக்கும் சரியில்லை. புதிய அரசமைப்பை கொண்டுவரப் போவதாக அண்மைய தினங்களில் தொடர்ச்சியாகக் கூறி வருகின்றனர்.

இந்தப் புதிய அரசியலமைப்பு என்பது மக்களுக்காகக் கொண்டுவரப் பட்டதல்ல. இதன் பின்னணியில் முழுக்க முழுக்க அரசியல் பழிவாங்கல்களே உள்ளன என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

(க)

## அம்பாந்தோட்டைத் துறைமுகத்துக்கு வந்த சீன குழுவினருக்கு எதிராக ஆர்ப்பாட்டம்!



கடற்படை பலத்த பாதுகாப்பு



கொழும்பு, செப். 11

அம்பாந்தோட்டைத் துறைமுகத் திட்டம் அடுத்த மாதம் ஆரம்பிக் கப்படவுள்ள நிலையில், சீன குழுவொன்று நேற்று முன்தினம் அம்பாந்தோட்டைத் துறைமுகத்துக்கு வந்துள்ளது.

இந்தக் குழுவின் வருகைக்கு எதிர்ப்புத் தெரிவித்து, அம்பாந்தோட்டைத் துறைமுக தற்காலிக பணியாளர்கள் போராட்டங்களில் ஈடுபட்டனர்.

இதனால், அம்பாந்தோட்டைத் துறைமுகத்தில் இலங்கைக் கடற்படையினர் கவசவாகனங்களுடன் பலத்த பாதுகாப்பில் ஈடுபட்டுள்ளனர். அதேவேளை, அடுத்த மாதம் அம்பாந்தோட்டை துறைமுகத்தை சீன நிறுவனத்திடம் கையளிக்கும் ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

## சிறையில் அடைக்கப்பட்டார் ஜனாதிபதியின் சகோதரர்!



பொலன்னறுவையில் விபத்து ஒன்றை ஏற்படுத்தி, இரண்டு பேர் உயிரிழக்கக் காரணமாக இருந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் சகோதரர் லால் சிறிசேன கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

பொலன்னறுவ- ஹிங்குராகொட வீதியில் எதுமல்பிட்டிய என்ற இடத்தில் நேற்றுமுன்தினம் பிற்பகல் 1.10 மணியளவில், லால் சிறிசேன ஓட்டிச் சென்ற லான்ட் குரூசர் வாகனம், மோட்டார் சைக்கிள் ஒன்றை மோதித்தள்ளியது.

இந்த விபத்தில் மோட்டார் சைக்கிளில் பயணம் செய்த சகோதரர்களான இருவர் உயிரிழந்தனர்.

விபத்தை ஏற்படுத்திய லால் சிறிசேன, அந்த இடத் தில் நிற்காமல் தப்பிச் சென்று சில மணிநேரம் கழித்து காவல் நிலையத்தில் சரணடைந்தார்.

இதையடுத்து, அவரை பொலன்னறுவை பதில் நீதிவான் முன் ஆஜர்படுத்தியபோது, அவரை செப்ரெம்பர் மாதம் 11ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்க நீதிவான் உத்தரவிட்டார்.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவின் சகோதரரான லால் சிறிசேன, பொலன்னறுவையில் மிகவும் பிரபலமான வர்த்தகராவார். இவர், 140 கி.மீ. வேகத்தில் செலுத்திச் சென்ற வாகனமே விபத்தை ஏற்படுத்தியுள்ளது என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரியில் இன்று பாரதி விழா

வட்டுக்கோட்டை - யாழ்ப்பாணக் கல்லூரி தமிழ் மன்றத்தினரின் ஏற்பாட்டில் 35 ஆவது ஆண்டாக நடத்தும் பாரதி விழா இன்று முற்பகல் 10.30 மணிக்கு கல்லூரியின் ஒற்லி மண்டபத்தில் நடைபெறும். நிகழ்வில் முதன்மை விருந்தினராக மருத்துவ கலாநிதி யமுனாநந்தா கலந்து கொள்ளவுள்ளார்.

அத்துடன் பட்டிமன்றம், வில்லூப் பாட்டு, சொற்பொழிவு, இன்னிசைப்பாடல்கள், நாட்டிய நடனம் ஆகிய கலை நிகழ்வுகளும் நடைபெறும் என்று அதிபர் தெரிவித்தார். (இ)

# நவராத்திரியை முன்னிட்டு பாலர்கள் இடையே போட்டி

கைதடி வடக்கு சனசமூக நிலையத்தினர் நவராத்திரியை முன்னிட்டு பாலகர்களுக்கிடையில் பல போட்டிகளை நடத்தவுள்ளனர். இப்போட்டி எதிர்வரும் 24 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணி முதல் கைதடி வடக்கு சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெறும். இப்போட்டியில் பாலகர்களிடையே சித்திரம், தேவாரம், மனனம், ஆத்திசூடி, ஆகியன இடம்பெறவுள்ளது எனத் தெரிவிக்கப்படுகின்றது.

# முன்னாள் யாழ். மேயர் சிவபாலனின் 19ஆவது ஆண்டு நினைவு தினம் இன்று

## த.வி.கூட்டணி அலுவலகத்தில் அஞ்சலி நிகழ்வு



யாழ்ப்பாணம்.செப்.11

யாழ்.மாநகர சபையின் முன்னாள் முதல்வர் பொன்.சிவபாலனின் 19 ஆவது ஆண்டு நினைவு இன்று திங்கட்கிழமை முற்பகல் 10 மணியளவில் தமிழர் விடுதலைக் கூட்டணியின் யாழ் நாச்சிமார் கோவிலடியில் அமைந்துள்ள தலைமைச் செயலகத்தில் இடம்பெறும்.

1998 ஆம் ஆண்டு இதே நாளில் மேயர். சிவபாலன், பிரிகேடியர் மென்டிஸ், 12 இராணுவ பொலிஸ், மாநகர சபை அதிகாரிகள் ஆகியோர் நல்லூரில் அமைந்திருந்த மாநகர சபைக் கட்டடத்தில் இடம்பெற்றகுண்டுவெடிப்பில் கொல்லப்பட்டனர்.

இது குறித்து யாழ்.மாநகர சபையின்முன்னாள்உறுப்பினர் (த.வி.கூ) தங்க முருந்தன் குறிப்பிடுகையில்,

மாநகர சபை அதிகாரிகள் மா. ஈஸ்வரம், சு. பத்மநாதன், பொ.பத்மராஜா, திருமதி மல்லிகா ராஜரட்ணம் ஆகியோரையும் நினைவு கூருவது அன்றைய நாளில் மாநகர சபை அங்கத்தவனாக இருந்த எனது கடமையாகிறது என்றார். (இ)

# தினசரி ராசி பலன் 11.09.2017

**2017 ஆம் ஆண்டு ஏவிளம்பி வருடம் ஆவணித்திங்கள் 26 ஆம் நாள் ஷஷ்டித்திதி பி.இ. 3.15 மணி வரை. பின்னர் ஸப்தமி. நட்சத்திரம் பரணி காலை 9.20 மணி வரை. பின்னர் கார்த்திகை. மரணயோகம் முழுவதும். ராகுகாலம் காலை 7.35 மணி முதல் 9.04 மணி வரை. சுபநேரம் பகல் 12.03 மணி முதல் 1.34 மணி வரை. இன்று கார்த்திகை விரதம். திவசம் செய்ய வேண்டிய திதி. ஆவணி மாத தேய்பிறை ஷஷ்டி. பிறந்த நட்சத்திர வழிபாடு: கார்த்திகை.**

‘ஜோதிடமணி’ பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி.

**மேஷம் :** சுபீட்சமான நாள். பண பலம் அதிகரிக்கும். ஆரோக்கியம் மேம்படும். வியாபாரம் நன்மையும், லாபம் தருவதாக அமையும். பெண்களுக்கு மண வாழ்க்கை கூடி மகிழ்ச்சி தரும்.

**ரிஷபம் :** அலைச்சல் மிகுந்த நாள். தொழில் ரீதியான அலைச்சல் காணப்படும். வேலையற்றோர் திறமைக்குரிய வேலை தேடித்திரிவார்கள். உடலில் உபாதைகள் உண்டாகி மருத்துவ உதவியை நாடுவார்கள்.

**மிதுனம் :** மகிழ்ச்சியான நாள். பொருளாதாரம் வளமடையும். குடும்ப மகிழ்ச்சி மேலோங்கும். ஸ்தலயாத்திரை, மகான் தரிசனம் அமையும். தொழிலில் வளர்ச்சியும், லாபமும் அதிகரிக்கும்.

**கடகம் :** விருத்தியான நாள். பொருளாதாரம் விருத்தி அடையும். தொழில் வளர்ச்சியும், தொழிலில் லாபமும் இருக்கும். புதிய தொழில் தொடங்க வாய்ப்பு ஏற்படும். சிலர் சொந்த வீட்டிற்கான அடித்தளம் ஏற்படுத்துவார்கள்.

**சிம்மம் :** மேன்மையான நாள். பணப்புழக்கம் படிப்படியாக மேன்மை அடையும். குடும்பத்திற்கு சிறப்பும், உயர்வான நற்பலன்களும் அமையும். உத்தியோக உயர்வுகள் கிடைத்து மன அமைதியடையும்.

**கன்னி :** கவலையான நாள். எடுத்த காரியத்தை எண்ணம் போல முடிக்க முடியாமல் அடுக்கடுக்காக இடர்கள் வரும். பணம் பற்றாக்குறையாக இருக்கும். குடும்ப அமைதி குன்றும்.

**துலாம் :** மத்திம பலன்கள் காணப்படுகின்றன. வருமானம் சுமாராக இருக்கும். செலவுகள் அதிகரிக்கும். சத்துரு உபாதை, வழக்குகளில் சிரமம், கடன் உபாதை போன்ற பலன்கள் இருக்கும்.

**விருச்சிகம் :** ஆக்கபூர்வ பலன்கள் காணப்படுகின்றன. புதிய வேலை சுலபமாக எதிர்பார்த்தபடி கிடைக்கும். பணவரவும், பணப்புழக்கமும் திருப்தியாக அமையும்.

**தனுசு :** அனுகூலமான நாள். பொருளாதாரம் வளமாக இருக்கும். தேக நலன் சிறப்பாக அமையும். குடும்பத்தில் சந்தோஷ சூழ்நிலை ஏற்படும். மாணவர்களுக்கு கல்வியில் தேர்ச்சி முன்னேற்றம் மேன்மை தரும்.

**மகரம் :** சோதனையான நாள். வரவேண்டிய பணம் வரத் தாமதமாகும். உடலில் ரோகங்கள் உண்டாகும். குடும்பத்தில் நிம்மதியற்ற சூழ்நிலை காணப்படும். பெண்களுக்கு குடும்பப் பொறுப்புகள் அதிகரிக்கும்.

**கும்பம் :** சமபலன்கள் காணப்படுகின்றன. வருமானம் சுமாராக இருக்கும். தொழிலில் கவனம் தேவை. தொழிலில் யாரையும் நம்பி எதையும் செய்யக் கூடாது. நண்பர்கள் உதவி புரிவார்கள்.

**மீனம் :** கீர்த்தியான நாள். பணப்புழக்கம் அதிகரிக்கும். குடும்பத்தில் அமைதி நிலவும். வீட்டுப் பிரச்சினை தீரும். காரிய வெற்றி உண்டாகும்.

**சந்திராட்டமநாள்: உத்தரம் 2, 3, 4 அத்தம், சித்திரை 1, 2ஆம் கால்கள் ஆகியவற்றில் பிறந்தோர் இன்று சுப கருமங்களில் ஈடுபடுவதைத் தவிர்க்கவும்.**

# துன்பவேளையில் அடைக்கலம் கேட்டால் மரியன்னை ஒருபோதும் கைவிடாள்!

## மன்னார் எழுத்தூர் திருவிழா திருப்பலியில் ஆயர் சுவாம் பிள்ளை ஆண்டகை மறையுரை



(வாஸ் கூஞ்ஞ)

மன்னார்.செப்.11

எமக்கு துன்பம் ஏற்படும் போது நாம் அன்னை மரியாளிடம் வேண்டும்பொழுது அவள் எம் ஒவ்வொருவருக்கும் அடைக்கலம் தருவாள் என்ற விசுவாசத்துடன் வாழ வேண்டும் என மன்னார் மறைமாவட்ட அப்போஸ்தலிக்க பரிபாலகர் மேதகு ஆயர் யோசப் கிங்சிலி சுவாம்பிள்ளை ஆண்டகை தெரிவித்தார்.

மன்னார் எழுத்தூர் தூய அடைக்கலமாதா ஆலய வருடாந்த திருவிழாவின்போது திருப்பலியில் மறையுரை ஆற்றிய ஆயர் யோசப் கிங்சிலி சுவாம்பிள்ளை ஆண்டகை தொடர்ந்து தெரிவிக்கையில்

எமது கத்தோலிக்க திருச்சபையிலே ஒவ்வொரு மாதமும் புனித கன்னி மரியாளுக்கு புகழ்ச்சி செய்யவும் மகிமை படுத்துவதற்கும் தரப்பட்டுள்ளது. இதற்கமைய புரட்டாசி மாதம் அன்னையின் பிறப்பு விழாவைக் கொண்டாட திருச்சபை எமக்கு அழைப்பு விடுத்திருக்கின்றது. இதற்கமைய நாம் இவ் விழாவை இன்று புரட்டாசி மாதம் எட்டாம் திகதி கொண்டாடுகின்றோம்.

இறைவன் தெரிந்து கொள்ளப்பட்டவர்களை அழைக்கின்றார். அவர்களை அவர் புனிதமாக்கி தனக்கு ஏற்புடையவர்களாக ஆக்குகின்றார். இவ்வாறுதான் புனித மரியாளும் இறைவனுக்கு ஏற்புடையவராக்கியுள்ளார். இறைவனின் அற்புத செயலிலே மரியாளும் உள்வாங்கப்பட்டமையால் அவள் இறைமகனுக்குத் தாயானாள். இந்த செயல்பாடு இறையேசுவின் தாய்க்கும் தந்தைக்கும் தெரியாது. இவ்வாறு இறைவன் அற்புதங்களை செய்துள்ளதை நாம் பார்க்கின்றோம்.

இவ்வாறுதான் சக்கரியாஸ் எலிசபேத்தம்பதியினர் குழந்தை பாக்கியம் அற்றவர்களாக இருந்தபோதும் இவர்கள் இறைவனுக்கு உகந்தவர்களாகவும் விசுவாசத்தில் நிலைத்திருந்தமையாலும் வயது முதிர்ந்தவர்களாக இருந்தபோதும் அவர்களுக்கு திருமுழுக்கு யோவானை பிறக்கச் செய்தார்.

மரியாள் வானதூதரின் மங்கள வார்த்தையை ஏற்று வாழ்ந்து இறைவனுக்கு தாயாகியதால் அவள் இறைமகன் இயேசுவிடம் கானாவூர் திருமணவீட்டில் இருந்த குறையை தீர்க்க இறைமகனிடம் வேண்டியபோது தனது நேரம் வரவில்லை என்று தெரிவித்து தாய் கேட்டுக் கொண்டதிற்கு இணங்க அவர் குறையை தீர்த்து வைக்கின்றார்.

இதன் மூலம் நாம் தெரிந்து கொள்வது கிறிஸ்துவுக்காக அன்னை மரியாள் தெரிந்து கொள்ளப்பட்டு அவள் இவ்வுலகில் பிறந்துள்ளார். அத்துடன் கல்வாரிமலைவரைக்கும் அவள் செல்வதற்கான தைரியமும் இறைவனால் கொடுக்கப்பட்டிருந்தது.

இறைவனின் தாயானவளை பல பெயர்களில் நாம் அழைக்கின்றோம். இவ்வாறு அடைக்கல அன்னையின் ஆலய விழாவை கொண்டாடும் நாம் எமக்கு துன்பம் எற்படுகின்ற போது அவளிடம் அடைக்கலம் வேண்டும்பொழுது அவள் எமக்கு கைகொடுப்பாள். அவள் பிறந்தமையாலே எமக்கு இரட்சனியம் கிடைக்கப் பெற்றுள்ளது. ஆகவே, அன்னை மரியாள் மூலம் நம் தேவைகளை வேண்டி இறைவனிடம் வரம் வேண்டுவோம்.

குறிப்பாக, அனைவரும் நல்லகிறிஸ்தவ குடும்பங்களாக வாழ்ந்து இப்பகுதியில் தேவ அழைத்தல் பெருக இறைவனிடம் வேண்டியவர்களாக வாழ வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார். (இ-112)

# இன்றும் நாளையும் மின் தடை

உயர்அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக இன்று திங்கள் காலை 08 மணியிலிருந்து மாலை 05 மணிவரை **கிளி நொச்சி பிரதேசத்தில்** இரணைமாதநகர் விஜி வீதி ஆகிய இடங்களிலும் **வவுனியா பிரதேசத்தில்** வேளாங்குளம், மடுக்குளம், வேளாங்குளம் விமானப்படை ஆகிய பிரதேசங்களிலும்.

12.09.2017 செவ்வாய் காலை 08 மணியிலிருந்து மாலை 05.30 மணிவரை **யாழ்பிரதேசத்தில்** வலந்தலை சந்தி, சிவகாமி அம்மன் கோவிலடி, ஆலடி, மருதபுரம், வியாவில், கருங்காலி, காரைநகர் சிவன் கோவிலடி, பொன்னாலை கிருஷ்ணன் கோவிலடி, பொன்னாலை வீட்டுத் திட்டம் ஆகிய இடங்களிலும், **கிளிநொச்சி பிரதேசத்தில்** வற்றாப்பளை, கேப்பாபிலவு, நாவற்காடு (முள்ளியவளை), வற்றாப்பளை விமானப் படை-I மற்றும் II, 59ஆவது படைப்பிரிவு (14 ESR 01 மற்றும் 14ESR- 02), SFHQ வற்றாப் பளை, CLI நந்திக் கடல், நந்திக்கடல் 16 ESR படைப் பிரிவு ஆகிய இடங்களிலும் **வவுனியா பிரதேசத்தில்** அட்டம்பஸ்கட கிராமம், தவசிக் குளம் கிராமம், வேளாங்குளம், மடுக்குளம், வேளாங்குளம் விமானப்படை ஆகிய பிரதேசங்களிலும் மின்சாரம் தடைப்படும் என்று மின் பொறியியலாளர் அறிவித்துள்ளார். (இ)

# தமிழிற்கு நவீனத்துவம் கொடுத்தவர் மகாகவி சுப்பிரமணிய பாரதியார்



பாரதியார் மறைந்த நாள் இன்றாகும். அதனையொட்டி இந்த ஆக்கம் வெளியிடப்படுகிறது

தமிழுக்கு நவீனத்துவம் கொடுத்த மகாகவி சுப்பிரமணியபாரதியார் அவர்கள் சிறந்தவிடுதலைப் போராளி பாரதேசத்தின் விடுதலைக்காக 19 ஆம் நூற்றாண்டின் இறுதியிலும் 20 ஆம் நூற்றாண்டின் ஆரம்பத்திலும் உயிர் மூச்சாக இயங்கியவர்.

இவரது ஊடகப் பணி, இலக்கியப் பணி ஆங்கிலேயரைஅச்சமடையவைத்தது. இதனால் பாரதியவர்களைச்சிறையிலடைத்துத்துன்புறுத்தினர். பாரதியார் தமிழுக்கும் சுதேசவிடுதலைக்கும் ஆற்றியபணிகள் இன்றையகாலகட்டத்தில் தமிழகத்திலாயினும் சிரீஈழத்திலாயினும் சரிசாலவும் பொருந்தும்.

**1. தமிழ் மொழியின் சிறப்பை பாரதியார் பாராட்டிய விதம்**

யாமறிந்தமொழிகளிலேதமிழ்மொழிபோல்
இனிதாவதெங்கும் காணோம்,
தேமதுரத் தமிழோசைஉலகமெலாம்
பரவும்வகைசெய்தல் வேண்டும்

பிறநாட்டுநல்லறிஞர் சாத்திரங்கள்
தமிழ்மொழியிற் பெயர்த்தல் வேண்டும்
இறவாதபுகழுடைய புதுநூல்கள்
தமிழ்மொழியில் இயற்றவேண்டும்

தெள்ளுற்றதமிழமுதின் சுவைகண்டார்
இங்கமரர் சிறப்புக் கண்டார்

வாழ்கநிரந்தரம் வாழ்கதமிழ்மொழி
வாழியவாழியவே.

**2. தமிழ் நாட்டின் சிறப்பைப் பாரதியார் பாராட்டிய விதம்**

செந்தமிழ் நாடெனும் போதினிலே - இன்பத்
தேன் வந்துபாயுதுகாதினிலே-எங்கள்
தந்தையர் நாடென்றபேச்சினிலே-ஒரு
சக்திபிறக்குது மூச்சினிலே-எங்கள்

சிங்களம் புட்பகம் சாவக-மாதிய
தீவுபலவினுஞ் சென்றேறி-அங்குத்
தங்கள் புலிக்கொடிமீன்கொடியும்நின்று
சால்புறக் கண்டவர் தாய்நாடு
சிங்களத் தீவினுக்கோர் பாலமமைப்போம்
சேதுவைமேடுறுத்திவீதிசமைப்போம்
வங்கத்திலோடிவரும் நீரின் மிகையால்
மையத்துநாடுகளிற் பயிர்செய்குவோம்

இலங்கைக்குசேதுவைமேடாக்கி வீதியமைத்து பாலமமைக்கவேண்டும் என்றுபாரதி கூறியதை நாம் நனவாக்கவேண்டும். வங்கத்திலோடிவரும் நீரினைநதி இணைப்பின் மூலம் பயன்பெறவேண்டும் என மையத்து மாநிலங்களில் பயிர் செய்தல் வேண்டும் என கூறுகின்றார்.

காவியஞ் செய்வோம் நல்லகாடுவளர்ப்போம் காடுகளைப் பேணல் வேண்டும் என்ற சூழலியல் தத்துவத்தினைக் கூறுகின்றார்

இனியொருவிதிசெய்வோம் - அதை
எந்தநாளும் காப்போம்

**3. தமிழ் இனத்தின் விடுதலைவேண்டி**

எந்தையுந்தாயுமகிழ்ந்துகுலாவி
யிருந்ததுமிந்நாடே-அதன்
முந்தையராயிமாண்டுகள் வாழ்ந்து
முடிந்ததுமிந்நாடேஎன்று கூறுவது,

'அற்றைத் திங்கள் அவ்வெண் நிலவில்
எந்தையும் உடையோம் எம் குன்றம்
-பிறர் கொணர்
இற்றைத் திங்கள் இவ் வெண் நிலவில்
வென்றுஎறிமுரசின் வேந்தர் எம்
குன்றும் கொண்டார் யாம் எந்தையும் இலமே'

என்றபுறநானூற்றுப் பாடலுக்கு இணையாக பாரதியும் கவிவடித்துள்ளார். இது 21 ஆம் நூற்றாண்டுக்கும் சாலவும் பொருந்தும்.

**4. அடிமையாய் வாழாது எழுச்சி பெற பாரதி கூறியவை**

என்றுதணியுமிந்தசுதந்திரதாகம்?
என்றுமடியுமெங்கள் அடிமையில் மோகம்?
என்றெமதன்னைகைவிலங்குகள் போகும்?,
என்றெமதின்னல்கள் தீர்ந்துபொய்யாகும்?

மாதர் தம்மை இழிவுசெய்யு
மடமையைக்கொளுத்துவோம்

அறத்தினால் வீழ்ந்துவிட்டாய்
அந்நியன் வலியனாகி
மறத்தினால் வந்துசெய்த
வன்மையைப் பொறுத்தல் செய்யாய்

வண்மையால் வீழ்ந்துவிட்டாய்
வாரிபோற் பகைவன் சேனை
திண்மையோ டடர்க்கும் போதில்
சிந்தனைமெலிதலின்றி
ஒண்மைசேர் புகழேமேலென்
றுளத்திலேஉறுதிகொண்டாய்
உண்மைதேர் கோலநாட்டார்
உரிமையைக் காத்துநின்றாய்

மானத்தால் வீழ்ந்துவிட்டாய்
மதிப்பிலாப் பகைவர் வேந்தன்
வானத்தாற் பெருமைகொண்ட
வலிமைதான் உடையனேனும்
ஊனத்தால் உள்ளமஞ்சி
ஒதுங்கிடமனமொவ் வாமல்
ஆனத்தைச் செய்வோமென்றே
அவன்வழியெதிர்த்துநின்றாய்

துணிவினால் வீழ்ந்துவிட்டாய்
தொகையிலாப் படைகளோடும்
பிணிவளர் செருக்கினோடும்
பெரும்பகையெதிர்த்தபோது
பணிவதுகருதமாட்டாய்
பதுங்குதல் பயனென் றெண்ணாய்,
தணிவதைநினைக்கமாட்டாய்,
நில்லெனத் தடுத்தல் செய்தாய்

வேள்வியில் வீழ்வதெல்லாம்
வீரமும் புகழுமிக்கு
மீள்வதுண் டுலகிற் கென்றே
வேதங்கள் விதிக்குமென்பர்
ஆள்வினைசெய்யும் போதில்
அறத்திலேயிளைத்துவீழ்ந்தார்
கேள்வியுண்டுடனேமீளக்
கிளர்ச்சிகொண்டுயிர்த்துவாழ்தல்

விளக்கொளிமழுங்கிப் போக
வெயிலொளிதோன்றும் மட்டும்
களக்கமாரிருளின் மூழ்குங்
கனகமாளிகையுமுண்டாம்
அளக்கருந் தீதுற்றாலும்
அச்சமேயுளத்துக் கொள்ளார்
துளக்கறவோங்கிநிற்பர்
துயருண்டோதுணிவுள்ளோர்க்கே?

வீரசுதந்திரம் வேண்டிநின்றார்பின்னர்
வேறொன்றுகொள்வாரோ? -என்றும்

நல்லதோர் வீணைசெய்தே-அதை
நலங்கெடப் புழுதியிலெறிவதுண்டோ?

வல்லமைதாராயோ - இந்த
மாநிலம் பயனுறவாழ்வதற்கே?

என்று பாரதியின் வார்த்தைகளை ஒவ்வொரு தமிழரும் இறைவனிடம் வேண்டுதல் வேண்டும்.

- மருத்துவர் யமுனாநந்தா

## சின்னச்சுவாமி சுப்பிரமணிய பாரதியார்
## பிறப்பு: 11.12.1882 இறப்பு:11.09.1921

பாரதியார் ஒரு கவிஞர், எழுத்தாளர், பத்திரிகையாசிரியர், விடுதலை வீரர் மற்றும் சமூக சீர்திருத் தவாதி ஆவார். இவரைப் பாரதியார் என்றும் மகாகவி என்றும் அழைக்கின்றனர். பாரதி, தமிழ்க் கவிதையிலும் உரைநடையிலும் சிறப்பான புலமை கொண்டு, நவீன தமிழ்க் கவிதைக்கு முன்னோடியாகத் திகழ்ந்தார். தமிழ், தமிழர் நலன், இந்திய விடுதலை, பெண் விடுதலை, சாதி மறுப்பு, பல்வேறு சமயங்கள் குறித்து கவிதைகளும் கட்டுரைகளும் எழுதியுள்ளார். தம் எழுத்துகள் மூலமாக மக்கள் மனதில் விடுதலை உணர்வை ஊட்டியவர்.

எட்டப்ப நாயக்கர் மன்னர் இவருடைய கவித் திறனை மெச்சி, பாரதி என்ற பட்டம் வழங்கினார். பாரதியாரின் நூல்கள் தமிழ்நாடு மாநில அரசினால் 1949 ஆம் ஆண்டில் நாட்டுடைமை ஆக்கப்பட்டன. இந்தியாவிலேயே முதன்முதலாக நாட்டுடைமையாக்கப்பட்ட இலக்கியம் பாரதியாருடையதாகும்.

பாரதி, இந்திய வரலாற்றின் திருப்பங்கள் நிறைந்த காலகட்டத்தில் வாழ்ந்தவர். பாலகங்காதர திலகர், உ. வே. சாமிநாதையர், வ. உ. சிதம்பரம் பிள்ளை, மகான் அரவிந்தர் முதலியோர் இவரின் சமகாலத்தைய மனிதர்கள் ஆவர். இவர் விவேகானந்தரின் மாணவியான சகோதரி நிவேதிதையை தமது குருவாகக் கருதினார்.

சின்னசாமி ஐயர் இலக்குமி அம்மாள் தம்பதியினருக்கு டிசெம்பர் 11, 1882இல் தமிழ்நாட்டின் தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள (அன்றைய திருநெல்வேலி மாவட்டம்) எட்டயபுரத்தில் பாரதியார் பிறந்தார். இவரின் இயற்பெயர் சுப்பிரமணியன் என்றாலும், சுப்பையா என்று அழைக்கப்பட்டார்.

1887ஆம்ஆண்டுஇலக்குமி அம்மாள் மறைந்தார். அதனால், பாரதியார் அவரது பாட்டியான பாகீரதி அம்மாளிடம் வளர்ந்தார்.

தனது பதினொன்றாம் வயதில் பள்ளியில் படித்து வரும் பொழுதே கவி புனையும் ஆற்றலை வெளிப்படுத்தினார். 1897 ஆம் ஆண்டு செல்லம்மாளை மணந்தார். 1898 ஆம் ஆண்டு தொழிலில் ஏற்பட்ட நட்டத்தால் வறுமை நிலையை அடைந்தார். இதனை எட்டயபுரம் மன்னருக்குத் தெரிவித்து பொருளுதவி வழங்குமாறு கடிதத்தில் கேட்டுக்கொண்டார். பின்னர் எட்டயபுரம் அரண்மனையில் பணி கிடைத்தது. சில காலத்திலேயே, அப்பணியை விடுத்து காசிக்குச் சென்றார். 1898 முதல் 1902 வரை அங்கு தங்கி இருந்தார். பின்னர் எட்டயபுரத்தின் மன்னரால் அழைத்து வரப்பட்டு அரண்மனை ஒன்றில் பாரதி வாழ்ந்தார்.

ஏழு ஆண்டுகள் பாட்டெழுதாமல் இருந்த பின்னர், 1904 ஆம் ஆண்டு மதுரையில் பாரதி எழுதிய பாடல் 'விவேகபானு' இதழில் வெளியானது. வாழ்நாள் முழுதும் பல்வேறு காலகட்டங்களில் இதழாசிரியராகவும் மதுரையில் சேதுபதி மேல்நிலைப் பள்ளியில் தமிழாசிரியராகவும் பணியாற்றினார்.

பாரதி, தமிழ், ஆங்கிலம், இந்தி, சமஸ்கிருதம், வங்காள மொழி ஆகியவற்றில் புலமை பெற்றவர். பிற மொழி இலக்கியங்களைமொழிபெயர்க்கவும் செய்தார்.

# போர்ச் சூழலும் ஊடகத்துறையும்

## அற்புதமான பத்திரிகையாளர் குருநாதன்

(நேற்றைய தொடர்ச்சி...)

**பி.மாணிக்கவாசகம்**

யாழ்ப்பாணத்தில் உதயன் பத்திரிகையில் அவர் பணியாற்றிய போது, வானொலியின் ஊடாகச் செய்திகளைத் திரட்டும் பணி அவரிடம் ஒப்படைக்கப்பட்டிருந்தது. இலங்கை வானொலியுடன், இந்தியவானொலி,லண்டன்பிபிஸிஉள்ளிட்ட பல்வேறு வானொலிகளின் தமிழ் மற்றும் ஆங்கில மொழியிலான ஒலிபரப்புக்களைக் கேட்டு, அவற்றில் வெளிவருகின்ற முக்கியமான செய்திகளைத் திரட்டுவதில் குருநாதன் மிகவும் வல்லவராக இருந்தார்.

பிலிப்பைன்ஸிலிருந்து ஒலிபரப்பு செய்யப்பட்ட வெரிட்டாஸ் வானொலியும் அப்போது பிரபல்யமாக இருந்தது. அதன் செய்தி அறிக்கை மற்றும் செய்திப்பார்வைகளில் இருந்து செய்திகளை உருவாக்குவதில் அவர் தவறியமை கிடையாது.

இலங்கை வானொலியில் செய்தி ஒலிபரப்பாகும்போது முதலில் வருகின்ற தலைப்புச் செய்தியை வைத்து, முக்கியான செய்திகளை அடையாளம் கண்டுகொள்வார்.

பின்னர். ஒலிபரப்பாகின்ற செய்தியை உன்னிப்பாகக் கேட்டு செய்தி வாசிக்கப்படுகின்ற அதேவேகத்தில் செய்தியை எழுதிவிடுவார். செய்தி ஒலிபரப்பாகி முடியும் போது, அதில் இருந்து திரட்டப்பட்ட செய்திகளும் எழுதி முடிந்திருக்கும்.

தமிழ் ஆங்கிலம் மட்டுமல்லாமல், ஹிந்தி உட்பட வேற்று மொழி செய்தி ஒலிபரப்புக்களையும் அவர் செவிமடுத்து, அவற்றில் இருந்து முக்கியமான, பிந்திய செய்திகளைத் திரட்டுவதில் நிகரற்றவராகத் திகழ்ந்தார்.

வானொலி செய்தி அறிக்கைகள் மட்டுமல்ல. கூட்டங்களில் உரையாற்றுபவர்களுடைய உரைகளையும் மின்னல் வேகத்தில் எழுத்தில் பதித்து விடுவதில் அவர் தன்னிகரற்றவராகவே இருந்தார்.

**ஊரடங்குக்குள் செய்தி சேகரிப்பு**

யுத்த மோதல்கள் மிகவம் தீவிரமாக இடம்பெற்ற அக்காலப் பகுதியில், பல்வேறு மொழிகளிலான செய்தி ஒலிபரப்புக்களையும் கேட்டு, அவற்றில் எல்ரீரீ அல்லது டெமில் டைகர்ஸ் என வருகின்ற சொற்பதங்களைப் பற்றிக்கொண்டு, அவற்றின் ஊடாக செய்திகளை மோப்பம் பிடித்து எழுதுவதில் குருநாதன் தனித்திறமை பெற்றிருந்தார்.

யாழ்.குடாநாட்டில் தொடர்ச்சியாக ஊரடங்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டு நிலைமை மிக மிக மோசமாக இருந்த காலப்பகுதியில், இரவு பகல் பாராமல் வான்வழி தாக்குதல்களை அரச விமானப்படையினர் நடத்தி வந்தனர்.

அப்போது மின்சாரம் முழுமையாகத் துண்டிக்கப்பட்டிருந்தது. யாழ். குடாநாட்டுக்கும் நாட்டின் ஏனைய பகுதிகளுக்கும் இடையிலான தொடர்புகளும் துண்டிக்கப்பட்டிருந்தன. மின்பிறப்பாக்கிகளையும் பெரிய அளவில் பயன்படுத்து முடியாத அளவில் எரிபொருளுக்குத் தட்டுப்பாடும் நிலவியது.

இதனால் மண்ணெண்ணெயைப் பயன்படுத்தி எரிக்கப்படுகின்ற விளக்குகளின் குறைந்த வெளிச்சத்தையே மக்கள் பயன்படுத்தினார்கள். ஆனால், ஊரடங்கு வேளையில் கட்டடங்களில் சிறிய வெளிச்சம் தெரிந்தாலே போதும். அங்கு நிச்சயமாக வான்வழி தாக்குதல் நடத்தப்படும்.

இத்தகைய சூழலில் உதயன் பத்திரிகை அலுவலகத்தின் ஜன்னல் கண்ணாடிகள் இறுக மூடப்பட்டு, மொத்தமான திரைச்சீலைகள் இட்டு, உள்ளே பயன்படுத்திய மெல்லிய வெளிச்சம் கூட வெளியில் தெரியாத வகையில் மறைக்கப்பட்டிருந்தன. இந்த மறைப்புக்குள்ளேதான் பற்றறிகளைப் பயன்படுத்தி, வானொலியை இயக்கி வானொலி செய்தி அறிக்கைகளைச் செவிமடுத்து, குருநாதன் செய்திகளைத் திரட்டினார்.

கடமைக்காக அலுவலகத்திற்குள் வந்தால், நினைத்த நேரம் வெளியில் செல்ல முடியாது. திடீர் திடீர் என நடைபெறும் தாக்குதல்களில் சிக்கி உயிரிழக்கவும், காயமடையவும் நேரிடக் கூடிய ஆபத்தான சூழல் அப்போது நிலவியது. பிற்பகலிலேயே ஊரடங்கு உத்தரவு நடைமுறைக்கு வந்துவிடும். சாதாரணமான நேரத்திலேயே வெளியில் நடமாடுவது உயிரச்சுறுத்தல் மிக்கதாக இருந்த போது ஊரடங்கு நேரத்தில் வெளியில் செல்வது பற்றிக் கூறவே வேண்டியதில்லை.

அத்தகைய ஆபத்தான சூழலுக்கு மத்தியிலேயே குருநாதன் பணியாற்றினார். அவரைப் போலவே ஏனைய ஊடகவியலாளர்கள், பணியாளர்களும் உயிரச்சுறுத்தலுக்கு மத்தியில் பணியாற்றினார்கள்.

அக்காலப்பகுதியில் குருநாதனும், அவருடன் செயலாற்றியவர்களும் ஆற்றிய செய்திப் பணி மகத்தானது. மிகவும் நெருக்கடியான ஒரு சூழலில் அவர்கள் ஆற்றிய செய்திச் சேவையின் பெறுமதி மதிப்பிட முடியாதது.

**இணையத்தள பிரவேசம்**

வெறும் செய்திகள் மட்டுமல்லாமல் செய்திக்கட்டுரைகளை எழுதுவதிலும் குருநாதன் வல்லவராகத் திகழ்ந் தார். அனைத்து அரசியல் தலைவர்களுடனும் நெருங்கிய தொடர்புகளை மேற்கொண்டிருந்த அவர், அரசியல் துறையில் மட்டுமல்லாமல், சமூகத்தின் பல்வேறு துறை சார்ந்தவர்களின தும் நன்மதிப்பையும் நம்பிக்கையையும் அவர் பெற்றிருந்தார்.

ஓர் ஊடகவியலாளர் என்ற வகையில், தமிழ் சமூகத்திற்கு அவர் ஆற்றிய சேவை அளப்பரியது. தினபதி, உதயன் மற்றும் தினக்குரல் டெயிலி மிரர், சண்டே டைம்ஸ் ஆகிய பத்திரிகைகளுக்கு மட்டுமல்லாமல், தமிழ் மக்களின் அரசியல் நிலைமைகளை வெளியுலகத்திற்கு ஆங்கில ஊடகத்தின் ஊடாக வெளிக்கொண்டு வந்த தமிழ்நெட் இணையத்தள செய்தியாளராகவும் அவர் பணியாற்றியிருந்தார்.

இணையத்தள பிரவேசத்தின் மூலம், நவீன தொழில்நுட்பத்திலும், நவீன ஊடகத் தொடர்பாடலிலும் தன்னை இலகுவாகப் பிணைத்துக் கொண்டார். செய்திப் பணியில் அவர் கொண்டிருந்த வேகமும், துரிதமான செயல் வல்லமையும், இணையத்தள செய்திச் சேவைக்குப் பேருதவியாக அமைந்திருந்தன.

கணினியைக் கையாள்வதில் அவர் மிகுந்த ஆர்வம் காட்டியிருந்தார். அதே போன்று டிஜிட்டல் கமெராவைப் பயன்படுத்துவது, படங்களை உரிய முறையில் எடிட் செய்வது போன்ற விடயங்களையும் அவர் இலகுவாகவும் விரைவாகவும் கற்றுக்கொண்டார்.

ஊடகத்துறையில் அவர் பெற்றிருந்த அனுபவமும், சமூகத்தின் பல்வேறு பிரிவினருடனும் அவர் கொண்டிருந்த தொடர்புகளும் நன்மதிப்பும் தமிழ்நெட் இணையத்தள செய்தியாளர் குடும்பத்தில் ஒருவராக அவரை இணைத்துக் கொள்வதற்கு ஊடகத்துறையின் ஜாம்பவானாகிய சிவராமைத் தூண்டியிருந்தது.

சிவராமினால் மிகவும் நேசித்து மதிக்கப்பட்டவர்களில் குருநாதனும் ஒருவராவார்.

**தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் தலைவர்**

ஊடகத்துறையில் நிறைந்த அனுபவத்தையும், ஆற்றலையும், அறிவையும் பெற்றிருந்த குருநாதன், தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் தலைவராக,சக ஊடகவியலாளர்களால் தெரிவுசெய்யப்பட்டார்.

இரண்டு பருவ காலம் தமிழ் ஊடகவியலாளர் ஒன்றியத்தின் தலைவராகப் பணியாற்றிய குருநாதன், தமிழ் ஊடகவியலாளர்களின் தொழில் வாண்மையை விருத்தி செய்வதற்கான பணிகளில் முழு மூச்சாகச் செயற்பட்டிருந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

ஆயுத மோதல்களும், நாட்டின் தென்பகுதிகளில் திடீர்த்தாக்குதல்களும்,குண்டுத் தாக்குதல்களும் தீவிரம் பெற்றிருந்த 1998 ஆம் ஆண்டு ஜுலை மாதம் வீரகேசரியின் துடிப்புமிக்க ஊடகவியலாளராகச் செயற்பட்ட சிறிகஜன் பயங்கரவாதப் புலனாய்வு பிரிவினரால் கைது செய்யப்பட்டார். அவரைத் தொடர்ந்து ஜுலை 20 ஆம் திகதி வவுனியாவில் வைத்து பயங்கரவாதப் புலனாய்வு பிரிவினர் என்னைக் கைது செய்தனர்.

விடுதலைப்புலிகளின் செயற்பாடுகளை நெருக்கமாகக் கண்காணித்து. அவர்களுடைய தாக்குதல்கள் இடம் பெறாத வண்ணம் தடுப்பதற்கான நடவடிக்கைகளை முன்னெடுப்பதற்காக அப்போது பயங்கரவாதப் புலனாய்வு பிரிவு புதிதாக உருவாக்கப்பட்டிருந்தது.

ரீஐடி – பயங்கரவாதப் புலனாய்வு பிரிவு என்றாலே எல்லோரும் அஞ்சி ஒடுங்கிய சூழல். சிங்கள ஊடகவியலாளர்கள் கூட அந்தப் பிரிவினருடன் தொடர்பு கொள்வதற்கும், அவர்களால் கைது செய்யப்பட்டவர்கள் பற்றிய விவரங்களைக் கேட்டறிவதற்கும் அஞ்சியிருந்த நேரம் அது.

பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ் ஊடகவியலாளர் சிறிகஜனும் நானும் கைது செய்யப்பட்டமையையடுத்து. தமிழ் ஊடகவியலாளர்கள் பெரும் அச்சமடைந்தனர். தமிழ் ஊடகவியலாளர்கள் பணியாற்ற முடியுமா என்ற அச்சம் கலந்த கேள்வி எழுந்திருந்த நிலையில் கைது செய்யப்பட்டு தீவிர விசாரணையின் பின்னர், நீதிமன்றத்தின் ஊடாக நாங்கள் இருவரும் விடுதலை செய்யப்பட்டிருந்தோம்.

அந்தப் பின்னணியிலேயே சரிநிகர் சிவகுமார், ஊடகவியலாளர் சிவராம் உள்ளிட்ட முக்கிய ஊடகவியலாளர்கள் ஒன்றிணைந்து தமிழ் ஊடகவியாலளர் ஒன்றியம் என்ற அமைப்பை உருவாக்கியிருந்தார்கள். அதன் தலைமைப் பொறுப்பை அன்றைய சூழலில் துணிவுடன் ஏற்று, அந்த ஒன்றியத்தை குருநாதன் திறம்பட வழிநடத்தியிருந்தார்.

**பேரிழப்பு**

பல்வேறு நெருக்கடிகள், ஆபத்தான சூழ்நிலைகளில் யாழ்ப்பாணத்திலும் திருகோணமமலையிலும் முழுநேர ஊடவியலாளராகத் தமிழ் சமூகத்திற்குப் பணியாற்றிய குருநாதன் தள்ளாத வயதில் தக்க துணையின்றி தனிமையில் வாடியிருந்தார். தார்மீக ரீதியில், சமூகப் பொறுப்புடன் கூடிய பராமரிப்பில்லாத நிலையில் அவர் இயற்கை எய்தியமை வருத்தத்திற்குரியது.

ஆளுமையும் செயற்திறனும் மிக்கதோர் ஊடகவியலாளராகிய குருநாதனின் இழப்பு தமிழ் ஊடகத்துறைக்கு ஏற்பட்டுள்ள ஈடு செய்ய முடியாத பேரிழப்பாகும். அவருடைய ஆன்மா சாந்தியடைய வேண்டும். அவரைப் போன்று ஆயிரக்கணக்கில் ஊடகவியலாளர்கள் உருவாகுவதற்கு வழி சமைக்கப்பட வேண்டும்.

மாகாணங்களில் முழுநேரமாகப் பணியாற்றும் ஊடகவியலாளர்கள் உரிய தொழில் பாதுகாப்பு இல்லாத ஒரு நிலையிலேயே பணியாற்றுகின்றார்கள். வயதாகிய நிலையில் அவர்கள் சமூகத்தில் இருந்து தாங்களாகவே ஒதுங்கி விடுகின்றார்கள். அல்லது ஒதுக்கப்பட்டு விடுகின்றார்கள். அத்தகைய ஒரு நிலையிலேயே அவர்களுடைய வாழ்க்கை முடிவுக்கு வருகின்றது. இதனை குருநாதனின் மறைவு நிதர்சனமாகக் காட்டியிருக்கின்றது.

★





# சுதந்திர வேட்கை

முப்பது ஆண்டுகளுக்கு மேல் படிநிலை வளர்ச்சி கண்டு, நீட்சி கொண்ட தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் புரட்சிகர வரலாறு ஒரு பூகம்பமாக வெடித்துச் சிதறி, பிரளயமாகப் பொங்கிப் பிரவகித்து அடங்கியிருக்கின்றது.

அந்த இயக்கத்தின் வரலாற்றுக்குள்ளே பொதிந்து கிடக்கும் அதிசயிக்கத்தக்க நுட்பமான அம்சங்களும் தியாகங்களும் வீர வரலாறுகளும் நம்மில் பலருக்குத் தெரிவதில்லை.

விடுதலைப் புலிகள் இயக்கம் பற்றிய ஒரு பார்வையாக – அந்த இயக்கத்துடன் பங்காற்றிய ஒரு வரலாற்றுப் பயணத்தின் படிமமாக – கட்டவிழ்கின்றது இந்த நூல்.

புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் எழுதிய 'போரும் சமாதானமும்' என்ற நூலின் ஊடாக விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தரிசித்த நாம், அவரது துணைவியாரான – ஆஸ்திரேலியப் பெண்ணான – அடேல் பாலசிங்கத்தின் பட்டறிவுப் பதிவு மூலமும் புலிகள் இயக்கத்தின் உட்சூக்குமங்களை இந்தப் புதிய தொடரின் ஊடே அறிந்து கொள்ள முடியும்.

'சுதந்திர வேட்கை' என்ற இந்த நூல் முதலில் ஆங்கிலத்தில் 'Will To Freedom' என்ற தலைப்பில் வெளியானது. தமிழ்ப் பதிப்பு சரியாக பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னர் 2002 இல் 'தமிழீழ விடுதலைப் போராட்டம் – உள்ளிருந்து ஒரு நோக்கு' என்ற பீடிகையுடன் வெளியானது.



92



## அத்தியாயம் - VI

## காட்டில் பிரபாகரனுடன் சந்திப்பு

புலிகள் மீதான பாதிப்பு மிகக் குறைவாகவே இருந்தது. தரை மோதல்களைப் பொறுத்தவரையிலே, காடுகளில் போராடி அனுபவம் பெற்ற இந்தியப் படைகளின் சிறப்பு அதிரடி அணிகள் புலிக் கெரில்லாப் படையினரிடமிருந்து படுதோல்வி கண்டன. மணலாற்றுப் பகுதியில் சிறிலங்காப் படைகளுக்கும் அதே கதி நேர்ந்தது. அங்கு ஏப்ரல் மாதம் 15 ஆம் திகதி ஆண், பெண் காவல் உலா அணியைத் தாக்கி 21 அரச படையினரை அதே இடத்தில் கொன்றது.

பிரபாகரனுடைய காவல் உரம் பெற்ற பாசறைகள் தூரக்காட்டினுள் இருந்தன. எமது ஹெலிகள் முந்திய தடவை நெடுங்கேணியில் தரையிறங்கி இருந்தன. ஆனால், இந்தத் தடவை முல்லைத் தீவில் உள்ள அலம்பில் காடுகளில் தரையிறங்க இடம் குறிக்கப்பட்டது. இதனால் பிரபாகரனுடைய பாசறைக்குச் செல்லும் தூரம் கணிசமான அளவு குறைக்கப்பட்டது. தரையிறங்கும் தளத்தில், எமது வரவை எதிர்பார்த்துப் பெரும் தொகைப் போராளிகள் ஆயத்த நிலையில் நின்றார்கள்.

இந்தியாவுடனான எமது கைது போர் இன்னமும் நடந்து கொண்டிருந்ததால், அவர்கள் அந்தப் பகுதியில் படை நகர்வு நடவடிக்கையில் ஈடுபட மாட்டார்கள் என்று எதிர்பார்க்க முடியாதிருந்தது. கொழும்புப் பேச்சின் போது இந்திய எதிர்ப்பு நிலைப்பாட்டை நாம் எடுத்தமையால், அலம்பிலில் இறங்கும்போது, இந்திய அமைதிப் படைகள் எம்மைப் பழிவாங்க முற்படலாம் என்று அஞ்சினோம். எனவே தான் பெரும் தொகைப் போராளிகள் அங்கு நிறுத்தப்பட்டிருந்தார்கள்.

நாம் தரையிறங்கியதும் சோதியா அங்கே வந்தார். சென்னையில் வாழ்ந்த காலத்தில் இருந்து அவருடன் தோழமை பூண்டிருந்தோம். அவருடன் ஆயுதம் தரித்த பெண் போராளிகள் குழு ஒன்று எம்மைக் கூட்டிச் செல்ல வந்திருந்தது. அவருடைய தோற்றம் அவரில் ஏற்பட்டிருந்த தன்னம்பிக்கையைப் பிரதிபலித்தது.

இலங்கைப் படைகளுக்கு எதிராகவும் இந்தியப் படைகளுக்கு எதிராகவும் பல சமர்களில் பங்குபற்றியமையால் அனுபவமுறுக்கேறி இருந்தார் சோதியா. அதை விடப் பெண் போராளிகள் இடையே அவருக்கு அளவற்ற செல்வாக்கு இருந்தது. தங்கள் தலைவியாக சோதியாவை அவர்கள் ஒட்டுமொத்தமாக ஏற்றுக்கொண்டிருந்தார்கள். பெண் போராளிகளின் தளபதியாக அவர் பதவி உயர்த்தப்பட்டிருந்தார். இந்தியப் படை ஆக்கிரமிப்புக் காலத்தில் அலம்பில் காட்டில் இவர்பின்னர் மரணமானார். நெஞ்சினுள் ஏற்பட்ட ஒரு நஞ்சுத் தொற்றி, உள்ளே பரவி இருதயத்தைத் தாக்கி அவரது உயிரைப் பறித்தது. கலகலப்பான ஆற்றல் மிக்க தலைவியை பெண் போராளிகள் இழந்தார்கள். சோதியாவுக்கு அடுத்ததாகத் தலைமை வகித்தவர் சுகி. சோதியாவும் சுகியும் ஒன்றாகவே சென்னையில் புலி அணியில் சேர்ந்தவர்கள். பெண் போராளிப் பிரிவின் இரண்டாவது தலைவியாக சுகி பொறுப்பேற்றார்.

கொழும்பில் இருந்து நாம் அலம்பிலுக்குச் சென்ற நேரத்தை விட, பிரபாகரனுடைய காட்டுப் பாசறைக்கு நடந்து செல்ல, பலமடங்கு அதிக நேரம் பிடிப்பதை விரைவிலே உணர்ந்தோம். காட்டுக்குள் அடியழிக்கப்பட்ட ஒற்றையடிப் பாதைகள், சிற்றாறுகள், அடர்ந்த இலைகுழைப் பற்றைகள் ஆகியவற்றினூடாக இழுத்திழுத்து நடந்தோம்.

பாலாவுக்கு நீரிழிவு நோய். நெடுந்தூரம் நடக்க முடியவில்லை. இரண்டு கம்புகளின் நடுவே ஒரு கதிரையைக் கட்டி, பாலாவை அதில் இருத்தி, ஆள் மாறி, ஆள் மாறி அவரைத் தம் தோள்களிலே போராளிகள் சுமந்து சென்றார்கள். பிரபாகரனிடம் எம்மை அழைத்துச் செல்லும் பாதுகாப்பு ஏற்பாட்டுக்கு அந்தத் தடவை பொறுப்பாக மூத்த தளபதி சங்கர் இருந்தார். இயக்கத்துடனும் பிரபாகரனுடனும் சங்கருக்கு நீண்ட நெருங்கிய தொடர்பு இருந்தது. ஒரு சிறிய கெரில்லாக் குழுவை வைத்துக் கொண்டு வன்னிக் காடுகளில் பிரபாகரன் பயிற்சி பெற்ற தொடக்க நாள்களில் இருந்து தம்மை இணைத்துக் கொண்டவர் சங்கர். பின்னர் கனடாவில் அவர் சில காலம் வாழ்ந்தார். அங்கே விமானப் பொறியியல் கற்றார். மேலும் பல தமிழரைப் போல 1983 ஆம் ஆண்டுக் கலகங்கள் அவரையும் கொதிப்படையச் செய்தன. சென்னை திரும்பி, பிரபாகரனுடனும் ஆயுதப் போராட்டத்துடனும் சங்கர் மீள இணைந்துகொண்டார்.

பல சமர்களில் பங்கு பற்றிய நீண்ட கால போர் அனுபவம் அவருக்கு உண்டு. பிரபாகரனின் மிகுந்த நம்பிக்கைக்கும் விசுவாசத்துக்கும் உரிய போராளிகளில் சங்கரும் ஒருவர். பிரபாகரனுடைய களத்துக்கு நாம் நடந்து கொண்டிருக்கும் போது நாம் செல்லும் நடை பாதையில் நின்று அங்காலோ, இங்காலோ கால் மாறி வைக்க வேண்டாம் என்று சாதாரணமாகச் சங்கர் கூறினார்.

இந்தியப் படைகள் அங்கு அடிக்கடி ஊடறுத்து வந்த போதெல்லாம் நிலக் கண்ணிவெடிகளைத் தாராளமாக நட்டிருக்கின்றனர் என எதுவித பதற்றமும் இல்லாமல் சங்கர் குறிப்பிட்டார். இந்த விவரத்தைக் கேட்டதும் நான் பயத்தில் உறைந்துபோயிருக்கவேண்டும். ஆனால், அஞ்சுவதால் என்ன பயன் என்று என்னைத் தேற்றிக்கொண்டேன். எமது போராளிகள் தாம் ஆபத்தின் ஊடாக நடந்துகொண்டிருக்கின்றமையை பொருட்படுத்துபவர்கள் அல்லர். ஆகவே, நான் மட்டும் ஏன் அலட்டிக் கொள்ள வேண்டும்? ஆபத்து என்றால், எல்லோருக்கும் பொதுவானது தான் என்று முடிவு செய்தேன்.

இப்படியான சந்தர்ப்பத்தில் மனப்பூர்வமாகத் தயார்ப்படுத்திக் கொண்டு, வருவது வரட்டும் என்று ஏற்றுக் கொண்டு தொடர்ந்து முன்னேற வேண்டியது தான். அஞ்சுவதால் மட்டும் நிலக் கண்ணிவெடியில் இருந்து தப்பிவிட முடியுமா என்ன? பயந்தால் ஓர் இனிய பயணம் கெட்டுவிடும் பயம் தான் நீளும். இந்தியப் படைகள் வேறு அடையாளங்களையும் அங்கு விட்டு வைத்திருந்தார்கள். தொட்டம் தொட்டமாக மரங்கள் முறிந்திருந்தன. நீர் தேங்கிய ஆழமான குழிகள் பறிக்கப்பட்டிருந்தன. பலத்த விமானக் குண்டுப் பொலிவுகளினதும் இடைவிடாத ஆட்டிலெறி ஷெல் அடிகளின் எச்சங்களே அவை என்பது புரிந்து.

காடுகளுக்குள் நெடுந்தூரம் செல்லச் செல்ல காவல் உலாச் செல்லும் போராளிக் குழுக்களைக் கண்டோம். தேவையான பொருள் பொட்டகங்களைச் சுமந்து செல்வதற்காக நீண்ட தூர நடையில் ஈடுபட்டிருந்தவர்கள் அவர்கள். புலிப் பிரதேசத்தின் ஆழப் பகுதிக்குள் நாம் வந்து விட்டமையை அது உணர்த்தியது. ஆயுதம் தரித்த போராளிகள், உரு மறைப்பு உடையில் ஆங்காங்கே நிலை கொண்டிருக்கின்றமையைக் காணத் தொடங்கியதும் புலித் தடங்களுக்கு அருகே சென்று விட்டமையை உணர முடிந்தது. நன்கு பலப்படுத்தப்பட்ட காவல் அரண்களும் இங்கும் அங்கும் தென்பட்டன. தொடர்ந்து காட்டினுள் நடந்தோம். காட்டு இலைகுழைகளின் ஊடாக குடில்கள் தெரிந்தன. நன்றாக உரு மறைக்கப்பட்ட குடில் ஒன்றில் அருகே நின்றோம்.

எமது வருகை பற்றி பிரபாகரனுக்கு கூறப்பட்டிருந்தமையால் பாசறையை நாம் போய்ச் சேர்ந்ததும் அவரும் அங்கே வந்தார். காட்டுப் பச்சைச் சீருடை, பளிச்சென்ற தோற்றம் குதூகலமாக அவர் எம்மை வரவேற்றார். கெரில்லாப் பாசறைப் பகுதி என்று அந்த இடத்தைக்கூற முடியவில்லை. கச்சிதமான ஒரு சாதாரண கிரமமாக சுத்தமாக இருந்தது. அத்தனை இடர்பாடுகளுக்கு மத்தியிலும் தமது போராளிகளின் மன உற்சாகத்தையும் பிரபாகரன் பேணி வருகின்றமை தெரிந்தது. எத்தகைய பாடுபட்டு, இடர்பாடுகளை மேவி அந்தப் பாசறையை அவர்கள் கனகச்சிதமாக நிறுவி இருந்தார்கள் என்பது அந்தக் காட்டுச் சூழலில் ஓர் அற்புதமே. ஒரு பூர்வீகக் காடு வெட்டித் துப்புரவாக்கப்பட்டு, இலை செறிந்த முது மரங்கள் மட்டும் காப்பும் நிழலும் வழங்க அந்த அகன்ற பரப்பு, மனிதர் வாழ்வதற்கு ஏற்றதாக உரு மாற்றப்பட்டிருந்தது. அணி அணியாக போராளிகள் பணி புரிந்திருந்தார்கள். பாறைகளைப் புரட்டி, ஆழத் தோன்றி நீர் தேடி இருக்கிறார்கள். சில தடவைகளில் அறுபது எழுபது அடி ஆழக் கிணறுகள் தோண்டப்பட்டு, இறுதியில் அங்கு நீர் இல்லை என்பதால் கைவிடப்பட்டிருக்கின்றன. இதே கடும் முயற்சி போதுமான அளவு நீர் கிடைக்கும் கிணறு கிடைக்கும்வரை தொடர்ந்திருக்க வேண்டும். பாசறைகள் தொடங்கிய நாள்களில் கிரமமான உணவு விநியோகம் ஏற்பாடு செய்யப்படவில்லை. அந்த நாள்களில் நாளுக்கு ஒரு வேளை உணவு, உப்பில்லாத சோறும் பருப்பும். இந்த இடர்பாட்டை மேவ நிலக்கண்ணி வெடி நிறைந்த காட்டினூடாக நீண்ட தூரம் நடந்து சென்று, விநியோகப் பொருள்கள் வருவதற்கான பாதை திறந்தார்கள். விநியோகப் பொருள்களை வாங்க ஒரு நாள் பயணமும் செய்யவேண்டி இருக்கும். அப்படியான வேளைகளில் இந்திய காட்டுச் சுற்றுலா அணிகளிடம் அகப்படுவதைத் தவிர்ப்பதற்கும் பதுங்க வேண்டி இருக்கும்.

அரிசி, மா, சீனி மூடைகளையும் ஏனைய பொதிகளையும்தோளிலே சுமந்த வண்ணம் தளத்துக்கு நீண்ட பயணம் மேற்கொள்வார்கள். இத்தகைய ஆபத்தான பயணங்களில் பெண் போராளிகளும் மாறிமாறிச் செல்வார்கள்.

(தொடரும்...)

காலைக்கதிர் Kalaikkathir



## வடக்கு மாகாண சபையின் 'இறந்த' காலம்:

# குற்றச்சாட்டுகளை பட்டியலிட்டார் எதிர்க்கட்சித் தலைவர்

**வட மாகாண சபையின் கடந்த கால செயற்பாடுகள் தொடர்பான விவாதத்தை 07.09.2017ஆம் திகதிய விசேட சபை அமர்வில் முடித்து வைத்து எதிர்க்கட்சித் தலைவர் ஆற்றிய உரை**

## 'வினைத்திறனற்ற செயற்பாடு' என்பதற்கு உதாரணங்களையும் வரிசைப்படுத்தினார்

(நேற்றைய தொடர்ச்சி)

அவைத் தலைவர் அவர்களே, முதலமைச்சர் நான் பத்திரிகைகளில் விளம்பரப்படுத்துவதற்காகத் தம்மை கையாலாகாதவர்கள் என்று சித்திரிக்கப் பார்க்கின்றேன் என்று குற்றஞ்சாட்டியிருந்தார். கௌரவ முத லமைச்சரால் அமைக் கப்பட்ட விசாரணைக் குழுவினரும் அதனையேதான் வேறு வார்த்தைப்பிரயோகத்தில்கூறியிருக்கிறார்கள் என்பதனைப் புரிந்து கொள்ள வில்லையா?

அரசியல் ரீதியாக, வடக்கு - கிழக்கு மாகாணங்கள் இணைந்த ஓர் அலகாக இருக்க வேண்டுமென்று நாம் எல்லோரும் கோரிக்கை விடு கின்றோம். ஒன்பது மாகாண சபை களில் முதன்மையான மாகாண சபை யாக, வினைத்திறனுள்ள செயற் பாட்டுடனான மகாண சபையாக நாங்கள் செயற்பட்டுக் காட்டு வோமாயின் கிழக்கு மாகாண மக்கள் எங்களுடன் சேர்வதன் மூலம் தாங்களும் முன்னேற முடியும் என்று தாங்களாகவே இணைப்பிற்கு முன்வருவார்கள். ஆனால் எங்களுடைய செயற்பாடுகள் அவர்களை இன்று எங்களுடன் சேர்ந்து வாழ விரும்பாதவர்களாகவே மாற்றிக் கொண்டு இருக்கின்றது.

முதலமைச்சரின் பதில் தொடர்பாக நான் ஏற்கனவே ஊடகங்களிற்குக் கருத்துக் கூறியிருந்தேன், வட்டுக் கோட்டைக்கு போகும் வழி என்ன என்றால் துட்டுக்கு இரண்டு கொட்டைப் பாக்கு என்பது போல் அமைந்துள்ளது என்று. இதனை அன்று முதலமைச்சர் காரசாரமாக விமர்சித்திருந்தார். இந்த உவமானம் தவறென்பதனை நான் ஏற்றுக் கொள்கின்றேன். சரியான உவமானம் கவுண்டமணி செந்திலின் வாழைப்பழக் கதை. நான் ஒரு வாழைப் பழம் என்று சொல்கின்றேன், முதலமைச்சர் இரண்டு வாழைப்பழம் என்று கூறுகின்றார். நான் கூறுவ தொன்று, முதலமைச்சர் பதிலில் கூறுவது இன்னொன்று.

பளையில் அமைக்கப்பட்ட மின்காற்றாலை சம்பந்தமான எனது குற்றச் சாட்டு, சபை செயலாள ரைக் கொண்டு உடன்படிக்கையைக் கையெழுத்திட வைத்தமையும், முதலாண்டு அந் நிறுவனங்களிடமிருந்து பெற்ற கொடையை நிதியாகப் பெற்று மாகாண சபையின் வரவிற்குக் கொண்டு வந்து அது சபையின் அங்கீகாரத்துடன் செலவு செய்யப்பட்டிருக்க வேண்டுமென் பதுமே ஆகும். இதற்கு கௌரவ முதலமைச்சர் அவர்கள் பதிலளிக்காது ஏனைய வருடங்களில் நடந்தவை தொடர்பாக விவர அறிக்கை ஒன்றைச் சமர்ப்பித்துள்ளார்.



சுன்னாகம் நிலத்தடி நீரில் தற்போது ஒயில் கலப்பு இல்லை என ஐக்கிய இராச்சிய உயர்ஸ்தானிகரிற்கு முதலமைச்சர் கூறியிருந்தது தொடர்பாக நான் மாகாண சபையில் கேள்வியெழுப்பியிருந்த போது, ஆஸ்திரேலியாவில் வசிக்கும் புலம்பெயர் தமிழர்களின் ஆய்வு அறிக்கையினை வைத்தே தான் அவ்வாறு கூறியதாகப் பதிலளித்திருந்தார். அந்த ஆய்வு அறிக்கையில் அவ்வாறு குறிப்பிடப்பட்டிருக்கவில்லை என்பன அந்த அறிக்கையை ஆதாரமாகக் காட்டி முதலமைச்சர் தவறாக வழி நடத்தப்படுகின்றார் எனச் சுட்டிக்காட்டியிருந்தேன். இக் கூற்றிற்குப் பதிலளிப்பதனைத் தவிர்த்து சுன்னாகம் நிலத்தடி நீரில் ஒயில் மாசு இருக்கின்றதா என்பது தொடர்பான நீண்டதொரு உரையை முதலமைச்சர் ஆற்றியிருக்கின்றார்கள். நான் இச் சபையில் இது தொடர்பாக 21.07.2017ம் திகதியன்று உரையாற்றிய பின் 23ஆம் திகதி ஆஸ்திரேலியாவிலிருந்து இந்த அறிக்கையைத் தயாரித்தவர்களில் ஒருவரெனத் தன்னை அறிமுகப் படுத்திய ஒருவரிடமிருந்து எனக்குத் தொலைபேசி அழைப்பு ஒன்று வந்திருந்தது. நான் ஒருவன்தான் தங்களது அறிக்கையை முறையாக விளங்கிக் கொண்டிருக்கின்றேன் எனக் கூறி அவர் எனக்குப் பாராட்டையும் தெரிவித்திருந்தார்.

வட மாகாண சபையில் அரச விடுதிகள் இல்லாத காரணத்தினால் மாகாண நிதியிலிருந்து தனியார் வீடுகளை வாடகைக்குப் பெற்றுத் தேவையான செயலாளர் தர உத் தியோகத்தர்களிற்கு விடுதி, நீர், வாடகை, மின்சார வசதி உட்பட வழங்கப்பட்டு, அதற்காக 500 ரூபா அவர்கள் சம்பளத்திலிருந்து மாதாந் தம் அறவிடப்படுவதை நீங்கள் ஒத்துக் கொண்டிருக்கின்றீர்கள். இவ்வாறாக மாகாண சபை நிதியிலிருந்து ரூ.924,000.00 வீணடிக் கப்பட்டிருக்கின்றதென்பதே கணக்காய்வின் குற்றச்சாட்டு. செய லாளர்களிற்கு வழங்கப்பட்ட விடுதிக் கொடுப்பனவு தொடர்பாக சுற்று நிருபங்களெதுவும் இல்லாத கார ணத்தினால் இவ்வாறு செயற்பட்டதாகக்கூறியிருக்கின்றீர்கள். தாபன விதிக்கோவை அத்தியாயம் KIK பிரிவு 5:3இல் இது தொடர்பாகத் தெட்டத் தெளிவாகக் கூறப்பட்டிருக்கின்றது.

திருமணமாகா தவர்களிற்கு சம்பளத்தில் 5 வீதமும், திருமணமானவர்களிற்கு 10 வீதமும், கணவனும், மனைவியும் அரச சேவையில் உள்ளவர்களாயின் 12h வீதம் எனவும் குறிப்பிடப் பட்டுள்ளது. இதைச் செய்யவில்லை என்பதே என் குற்றச்சாட்டு. மேலும் அவர்களது விடுதி, மின்சாரம் மற்றும் நீர்க் கொடுப்பனவுகளிற்கு சுற்று நிருபம் இல்லை என்பதற்காக அரச பணத்திலிருந்து செலவிட முடியுமா? நீங்கள் தவறாக வழிநடத்தப் படுகின்றீர்கள் என்பதனை இதிலி ருந்தாவது புரிந்து கொள்ளுங்கள்.

இரணை மடு - யாழ் நீர்வழங்கல் மற்றும் யாழ் மாநகர சபை கழிவு நீர் அகற்றல் தொடர்பாக இது வரை எவ்வித மாற்றுத்திட்டமும் ஆசிய அபிவிருத்தி வங்கிக்கு வைக்கவில்லை என்பதே எனது குற்றச்சாட்டு. அதிலும் குறிப்பாக யாழ் மாநகர சபை கழிவு நீர் அகற்றல் தொடர்பாக இரணைமடுத் திட்டத்தின் கீழ் வரவிருந்த பெரும் நிதி நிறுத்தப்பட்டுள்ளது. முதல மைச்சர்பதில் அளிக்கும்போது கல்லுண்டாய் சாக்கடைத் திட்டத்தைப் பற்றிப் பேசுகிறார். இது வட்டுக்கோட்டைக்கு போகும் வழி என்னவென்றால் துட்டுக்கு இரண்டு கொட்டைப் பாக்கு என்பது போல் அமையாதா?

சீப்பா நிறுவனத்தினால் நோர்வே அனுசரணையுடன் இவ்வருடம் ஏப்ரல் 20ஆம் திகதி நடைபெற்ற கூட்டத்திற்குத் தாங்கள் போகின் றீர்களா என்று இச்சபையில் கேள்வியெழுப்பிய போது தனக்கு அவ்வாறான அழைப்பிதழ் ஏதும் வரவில்லை எனக் கூறியிருந்தார். ஆனால் இன்று கூறுகின்றார், அக் கூட்டத்திற்குத் தனது ஆலோசகர் சென்றுள்ளதாகவும் அதில் பங்கு பற்றியதாகவும் கூறியிருந்தார். அப்படியாயின் சபையில் ஓர் பொறுப்புள்ள முதலமைச்சர் பொறுப்பற்ற விதத்தில் ஏன் பொய்யாகப் பதிலளிக்கின்றார்?

அதே போல் முதலீடுகள் எல்லாவற்றிற்கும் தாங்கள் தடையாக இருக்கவில்லை என்று ஏன் கூறுகின்றார். முதலமைச்சரால் அமைக்கப்பட்ட விசா ரணைக்குழு அறிக்கையில் இது தொடர்பாகக் கூறப்பட்டுள்ளதாவது,

மூங்கில் நடுகைத் திட்டத்தை நிராகரித்தமை சட்ட பூர்வமற்ற தெனவும் முதலீட்டாளரைத் தன்னை வந்து சந்திக்கும் படி கேட்டுக் கொண்டதை இது சந்தேகத்தை ஏற்படுத்துவதாக விசாரணைக் குழு கருதுகின்றது.

அரசியல் காரணங்களிற்கான இடமாற்றங்கள் செய்யப்படுபவை எல்லாம் இப்போது நிறுத்தப்பட்டிருப்பதாக முதலமைச்சர் குறிப்பிடுகின்றார். அரசியல் காரணங்களிற்காக அதிகார து;பிரயோகம் என்ற குற்றச் சாட்டின் அடிப்படையில் முதலமைச்சரால் நிர்ணயிக்கப் பட்ட விசாரணைக் குழுவின் தீர்மானத்தின் பிரகாரமே முன்னாள் கல்வி அமைச்சர் நீக்கப்பட்டிருக்கின்றார்.

யாழ் மாநகர சபையின் ஊழல்கள் தொடர்பாக அமைக்கப்பட்ட விசா ரணைக் குழு தொடர்பாகவும், நெல்சிப் திட்டத்தின் கீழ் அமைக்கப்பட்டு நீண்ட காலமாகப் பாவனையில் இல்லாத கட்டடங்கள் தொடர்பாகவும் எனது குற்றச் சாட்டுகளை ஏற்றுக் கொண்டமைக்கு எனது நன்றிகள்.

(முற்றும்)

# ரூ.5,000 நாணயத்தாளை ரத்துச் செய்ய நடவடிக்கை!

கொழும்பு, செப். 11

5000ரூபாய் நாயணத்தாளை ரத்து செய்ய அரசு நடவடிக்கை எடுத்துவருகிறது எனத் தெரிவிக்கப்படுகிறது.




இலங்கையில் நாணயத்தாள் அச்சிடும் போது போலி அச்சிடலைத்தடுக்கும்தொழில்நுட்ப முறை ஒன்று கடைப்பிடிக்காமையால் நாடு முழுவதும் போலி நாணயத்தாள்கள் உள்ளன என அரசு அச்சுப் பொறிதிணைக்களம் தெரிவித்துள்ளது.

போலி நாணயத்தாள் அச்சிடப்படுவது தொடர்பில் ஒவ்வொரு மாதமும் முறைப்பாடு பதிவாகுகிறது எனவும், ஒரு மாதத்திற்கு நான்கு முறைப்பாடுகள் தொடர்பில் விசாரணைகள் மேற்கொள்ளப்படுகின்றன என்றும் தெரிவிக்கப்படுகின்றது.

கடந்த சில மாதங்களாக நாடு முழுவதும் மோசடியான முறையில் அச்சிடப்பட்ட 5000 ரூபாய் தாள்கள் பொலிஸாரால் கைப்பற்றப் பட்டுள்ளன. இதனால், 5000 ரூபாய் தாள் தொடர்பில் தீர்மானம்மிக்க நடவடிக்கை எடுக்கவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

சர்வதேசம் ஏற்றுக் கொண்ட போலி அச்சிடலை தடுக்கும் தொழில்நுட்ப முறை இலங்கையில்பயன்படுத்தப்படாமையாலேயே இவ்வாறு போலி தாள்கள் அச்சிடும் நடவடிக்கை அதிகரித்துள்ளது எனக் குறிப்பிடப்படுகிறது.

இவ்வாறானபோலி நாணயத் தாள்களை அடையாளம் காணும் நடவடிக்கை கடினமாக உள்ளதுடன், அவ்வாறான சில தொழில்நுட்பங்கள் இந்த நாட்டுவங்கிகட்டமைப்புக்குள் மாத்திரமேயுள்ளது.

போலி தாள்களின் அதிகரிப்பைக் கட்டுப்படுத்துவதற்காக 5000 ரூபாய் தாள்களை தடை செய்வதற்கான நிலை ஏற்பட்டுள்ளதாக அரச அச்சுப் பொறி அதிகாரி கங்கானி லியனகே தெரிவித்துள்ளார்.

(க)

## நாடெங்கிலும் தொடர் மழை!



கொழும்பு, செப். 11

இலங்கையின் பல பகுதிகளில் தொடர்ந்தும் மழை அல்லது அடைமழை பெய்யும் என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மேல், சப்ரகமுவ, மத்திய, வடக்கு மற்றும் வடமேல் மாகாணங்களிலும், காலி மற்றும் மாத்தறை மாவட்டங்களிலும் தொடர்ந்தும் மழை பெய்யக் கூடும் எனக் குறிப்பிடப்பட்டுள்ளது.

மழை பெய்யும் போது தற்காலிகமாக பலத்த காற்று வீசும். இடி, மின்னல் தாக்கம் தொடர்பில் அவதானத்துடன் செயற்படுமாறு குறிப்பிடப்பட்டுள்ளது.

## வடக்கில் தென்னிலங்கை மீனவர்கள்: பணிப்பாளரின் கூற்றுக்கு ரவி கண்டனம்

யாழ்ப்பாணம், செப். 11

வடக்குகடலில் மீன்பிடிப்பதற்கு தெற்கு மீனவர்களுக்கு கொழும்பு அனுமதிகொடுத்துவிட்டால் அதில் எவரும் தலை யிடமுடியாது என கடற்றொழில் நீரியல் வளத் திணைக்களத்தின் பணிப்பாளர் அண்மையில் வெளியிட்ட கருத்துக்கு வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிரன் தனது கண்டனத்தைத் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

தென்னிலங்கை மீனவர்களின் வருகையால் வடபகுதி மீனவர்களின் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்டுள்ள நிலையில் தடை செய்யப்பட்ட தொழில்களை மேற்கொண்டு தொடர்ந் தும் தென்னிலங்கை மீனவர்கள் பாதிப்பை ஏற்படுத் திவருகின்றனர்.

சட்டம் ஒழுங்குகளைப் பாதுகாக்க வேண்டும் , சட்ட முரண் மீன்பிடிகளைத்தடைசெய்ய வேண்டும் என அறத்தின் பக்கம் நின்று வட பகுதி மீனவர்கள் வாதாடுகின்றார்கள்.

நீதியின்மை, முறைகேடான தொழில் நடவடிக்கைகளை ஏப்ரல் 2 ஆம் திகதி முல்லைத்தீவு மாவட்ட செயலகத்தில் நடைபெற்ற மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் மீனவர்கள் சுட்டிக்காட்டியிருந்தனர்.

தவறான தொழில் நடவடிக்கைகள் நடைபெறுகின்றன என்ற சுட்டிக்காட்டலை ஏற்றுக்கொண்ட கடற்றொழில் அமைச்சர் அவற்றுக்கான நடவடிக்கைகளை எடுக்கின்றார் எனத் தெரிவித்திருந்தார்.

எனினும், தற்போது வரை எந்தவித நடவடிக்கைகளும் எடுக்கப்படவில்லை . இதன் பின்பும் நடைபெறும் மோச மான தொழில் நடவடிக்கைகள் பற்றி கடந்த கடந்த மாதம் 10 ஆம் திகதி நடைபெற்ற மாகாண சபைக் கூட்டத்திலும் தெரிவித்திருந்தேன்.

இந்தச் சட்டமுரண் செயற்பாடுகள் தொடர்பாகக் கடந்த ஓகஸ்ட் மாதம் 14 ஆம் திகதி முதலமைச்சர், கடற்றொழில் அமைச்சர் மஹிந்த அமரவீர விற்கு கடிதம் அனுப்பி எனக்கும் அதன் பிரதியை அனுப்பியிருந்தார்.

அதற்கு மறுமொழியும்வகையில் கடந்த ஓகஸ்ட் மாதம் 22 ஆம் திகதி கடற்றொழில் அமைச்சின் தனிப்பட்ட செயலாளர் காமினி



இச்சட்டமுரண் தொழில் நடவடிக்கைகள் தொடர்பில் கவனம் செலுத்தும் முகமாக கடற்றொழில் திணைக்களப் பணியாளருக்கு கடிதம் அனுப்பி முதலமைச்சருக்கும் எனக்கும் பிரதியை அனுப்பியிருந்தார் எனவும் வட மாகாண சபை உறுப்பினர் ரவிகரன் மேலும் சுட்டிக்காட்டியுள்ளார்.

## முன்னாள் போராளிகளுக்கு விஷ ஊசி ஏற்றப்படவில்லை

கொழும்பு, செப். 09

கடந்த 2009 ஆம் ஆண்டு இராணுவத்தினரிடம் சரணடைந்து புனர்வாழ்வளிக்கப்பட்ட விடுதலைப் புலிகளின் முன்னாள் உறுப்பினர்களுக்கு விஷ ஊசி ஏற்றப்படவில்லை என வடமாகாண முன்னாள் சுகாதார அமைச்சர் ப.சத்தியலிங்கம் தெரிவித்துள்ளார்.

முன்னாள் போராளிகளுக்கு விஷ ஊசி ஏற்றப்பட்டமை தொடர்பாக வடமாகாண சுகாதார அமைச்சு எந்த வித நடவடிக்கையும் எடுக்க வில்லை என மாகாணசபை உறுப்பினர் தவநாதன் குற்றம் சாட்டியமைக்குப் பதிலளிக்



கும்போதே முன்னாள் சுகாதார அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

போரின் பின்னர் புனர்வாழ்வளிக்கப்பட்ட முன்னாள் போராளிகளுக்கு விஷ ஊசி ஏற்றப்பட்டதாகவும், இதன் காரணமாக அவர்கள் மர்ம

**வடக்கின் முன்னாள் சுகாதார அமைச்சர் கூறுகிறார்!**

மான முறையில் இறக்கின்றனர் எனவும் குற்றஞ்சாட்டப் பட்டது. இது வடமாகாண சபையிலும் முன்வைக்கப்பட்டது.

இதன் பின்னர், எனது அமைச்சின் கீழ் மருத்துவ நிபுணர் குழுவொன்றை அமைத்தேன். பின் ஐந்து மாவட்டங்களிலும் உள்ள புனர்வாழ்வளிக்கப்பட்ட முன்னாள் போராளிகளுக்கு இந்த அறிவித்தலை ஊடகங்களூடாக விடுத்திருந்தோம். அத்துடன் விண்ணப்பங்களும் அனுப்பி வைத்தோம்.

இதன்பின்னர் 300 வரையான முன்னாள் போராளிகள் விண்ணப்பித்திருந்தனர்.

இந்த 300 முன்னாள் போராளிகளுக்கும் எமது மருத்துவர்களால் அனைத்துப் பரிசோதனைகளும் மேற்கொள்ளப்பட்டன.

இந்த மருத்துவப் பரிசோதனைகளின் அடிப்படையில் இந்த போராளிகளுக்கு விஷ ஊசி ஏற்றப்பட்டதற் கான எந்த வித அடிப்படைக் காரணிகளும் பரிசோதனையூடாக நிரூபிக்கப்படவில்லை. அதற்கான அறிகுறிகளும் தென்படவில்லை.

இதில் சில முன்னாள் போராளிகள் மருத்துவப் பரிசோதனையைப் பெற மறுத்துள்ளனர். அவர்களை கட்டாயப் படுத்த முடியாது. எனவே சுகாதார அமைச்சின்மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டை மறுக்கின்றேன் எனத் தெரிவித்துள்ளார்.

## சூரியன் மறைவிற்கு பின் கடலில் குளிக்கத் தடை!



கோவா. செப்.11

சூரியன் மறைவிற்கு பின் சுற்றுலா பயணிகள் கடலில் குளிக்கத் தடை விதிக்க கோவா அரசு முடிவு செய்துள்ளதாக சுற்றுலாத் துறையின் செய்தித் தொடர்பாளர் தெரிவித்துள்ளார்

இந்தியாவின் முக்கிய மானசுற்றுலாதலங்களில் ஒன்றாக கோவா மாநிலம் விளங்கி வருகின்றது. இங்குள்ளகடற்கரைகளில் தினமும் இரவு நேரங்க ளில் நடனம், இசை உள் ளிட்ட பல்வேறு கலை நிகழ்ச்சிகள் அரங்கேறு கின்றன.

இந்நிலையில்கோவா கடற்கரையில் மது அருந்தி விட்டு கடலில் குளிக்கும் சில நபர்கள் கடலில் மூழ்கி இறந்து விடுகின்றனர். இதனைத் தவிர்க்க சூரியன் மறைவிற்கு பின் கோவா கடலில் குளிக்கக் கூடாது என்ற தடையை அம் மாநில அரசு விரைவில் கொண்டு வர உள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

சமீபத்தில் ஆமதா பாத்தை சேர்ந்த 2 மாண வர்கள் வடக்கு கோவா வில் உள்ள கண்டோலிம் கடலில் மூழ்கி உயிரிழந் தனர். கடந்த 4 நாள் களுக்கு முன் 2 பேர் பலி யாகினர். சூரியன் மறை விற்கு பிறகே இந்தச் சம்பவங்கள் நிகழ்கிறதாக அங்கு இருக்கும் சுற்றுலா பயணிகள் கூறுகின்ற னர்.

# தினகரன் ஆதரவு எம்.எல்.ஏக்கள் ரகசிய இடம் ஒன்றுக்கு மாற்றம்



எடப்பாடி பழனிசாமி அணிக்கு மற்ற எம்.எல். ஏக்கள் யாரும் தாவிவிடக் கூடாது என்பதற்காக தினகரன் ஆதரவு எம்.எல். ஏக்கள் ரகசிய இடத்தில் தங்க வைக்கப்பட்டுள் ளனர்.

அ.தி.மு.க.வில் முதல மைச்சர் எடப்பாடி பழனிச் சாமி தலைமையிலான அணிக்கும், டி.டி.வி. தினகரன் தலைமையி லான அணிக்கும் ஏற் பட்டுள்ள மோதல் உச் சக்கட்டத்தை எட்டியுள் ளது.

கடந்த 2 நாள்களுக்கு முன்பு தினகரன் அணி யில் இருந்த ஜக்கையன் எம்.எல்.ஏ. திடீரென்று எடப்பாடி பழனிச்சாமி அணிக்குத் தாவினார். இதைத் தொடர்ந்து தின கரன் ஆதரவு எம்.எல். ஏக்கள் அணி மாறிவிடக் கூடாது என்பதற்காக அவர்கள் ரகசிய இடத்தில் தங்க வைக்கப்பட்டுள்ள னர் என்று தெரிவிக்கப் படுகிறது.

புதுச்சேரி விடுதியை விட்டு 19 எம்.எல்.ஏக்கள் நேற்று முன்தினம் இரவே பெங்களூரில் உள்ள ஒரு நட்சத்திர விடுதியில் தங்கினார்கள். அவர்கள் தங்க மைசூர் மற்றும் மைசூரை அடுத்த குடகு மலையில் உள்ள வின்ட் பிளவர் ரிசார்ட் விடுதியில் அறைகள் முன்பதிவு செய்யப்பட்டு இருந்தது. ஆனால், எம்.எல்.ஏக்கள் யாரும் அங்கு வர வில்லை. ஆனால், அவர் களது உறவினர்கள் ஒரு சிலர் மட்டும் அங்கு வந்து தங்கிச் சென்றுள்ள னர்.

தற்போது தினகரன் ஆதரவு எம்.எல்.ஏக்கள் எங்குதங்கிஇருக்கிறார்கள் என்ற விவரம் அதிகாரப் பூர்வமாக தெரியவில்லை.

எடப்பாடி பழனிச் சாமி அணியினர் ரகசிய வியூகம் வகுத்து தினகரன் ஆதரவு எம்.எல்.ஏ.க்கள் ஒவ்வொருவராக தங்க ளது அணிக்கு இழுத்து வலுசேர்த்து வருகிறார்கள். அவர்கள் அணி வலுவாகி பெரும்பாண்மையைப் பெற்று விடக்கூடாது என்பதில் தினகரன் உறு தியாக உள்ளார்.

# பீரங்கி எதிர்ப்பு ஏவுகணை சோதனை வெற்றி




புதுடில்லி.ஓக.11

உள்நாட்டிலேயே தயாரிக்கப் பட்ட எதிரிநாட்டுப் பீரங்கிகளை தாக்கி அழிக்கும் திறன் வாய்ந்த 'நாக்' ஏவுகணைச் சோதனை வெற்றி கரமாக அமைந்ததாக இந்திய பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித் துள்ளது

எதிரிநாட்டுப் பீரங்கிகளை தாக்கி அழிக்கும் திறன் வாய்ந்த தாக்குதல் ரக ஏவுகணைகளை (நாக்) இந்திய ராணுவ ஆய்வு மற்றும் மேம்பாட்டு நிறுவனம் (டி.ஆர்.டி.ஓ.) தயாரித்து வருகின் றது. இந்த ஏவுக ணைகளில் சில, கடந்த ஜூன் மாதம் வெற்றிக ரமாக சோதிக்கப் பட்ட நிலையில் தற்போது மீண் டும் சோதனை நடத்தப்பட்டது.

ராஜஸ்தான் பாலைவனத்தில் நேற்று முன்தினம் நடத்தப்பட்ட இந்த சோதனையின் போது 2 வெவ்வேறு இலக்குகளை குறி வைத்து 'நாக்' ஏவுகணை ஏவப் பட்டது. அப்போது 2 இலக்கு களையும் மிகவும் துல்லியமாக இந்த ஏவுகணைகள் தாக்கி அழித் தன. இதன் மூலம் ஏவுகணை சோதனை வெற்றிகரமாக அமைந்த தாக பாதுகாப்பு அமைச்சகம் தெரிவித்துள்ளது.

உள்நாட்டிலேயே தயாரிக்கப் பட்ட இந்த ஏவுகணைகள் 7 கிலோ மீற்றர் தூரம் வரை சென்று தாக்கவல்லது எனவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## மோடியின் படம் வரைந்த மனைவி; வீட்டை விட்டுத் துரத்திய கணவர்!



லக்னோ.செப்.11

உத்தரப்பிரதேசம் மாநிலத்தில் பிரதமர் மோடி மற்றும் முதலமைச் சர் யோகியின் படத்தை வரைந்த பெண்ணை, அவரது கணவர் குடும்பத் தினர் வீட்டை விட்டுத் துரத்திய சம்பவத்தால் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

உத்தரப்பிரதேச மாநிலத்தில் உள்ள பசாரிக்பூர் கிராமத்தைச் சேர்ந்தவர் நக்மா பர்வின். இவரது கணவர் பர்வேஸ் கான். இவர்களுக்கு சிக் கந்தர்பூர் காவல் நிலைய பகுதியில் கடந்த வருடம் திருமணம் நடந்தது.

இந்நிலையில், நக்மா பர்வினை அவரது கணவர் குடும்பத்தினர் சரமாரி யாகதாக்கியதுடன்வீட்டை விட்டும் துரத்தியுள்ளனர்.

இதுகுறித்து பர்வி னின் தந்தை உள்ளூர் பொலிஸ் நிலையத்தில் வழக்குத் தாக்கல் செய் துள்ளார். அதில், தனது மகள் பிரதமர் மோடி மற் றும் உ.பி. முதலமைச்சர் யோகி ஆதித்யநாத் படங் களை வரைந்தார். இதைக் கண்ட கணவர் வீட்டார் அவரை வீட்டை விட்டு துரத்தி விட்டனர் என்று குறிப்பிட்டிருந்தார்.

ஆனாலும் இந்தக் குற்றச்சாட்டை பர்வின் கணவர் குடும்பத்தினர் மறுத்துள்ளனர். இது தொடர்பாக வழக்குப் பதிவு செய்த பொலிஸார், விசாரணை நடத்தி வரு கின்றனர்.

## வங்கிகளுக்கு எதிராக பிச்சைக்காரர் வழக்கு!

கொல்கத்தாவில் பிச்சையெடுத்து வரும் பிச்சைக்காரர் ஒருவர் வங்கிகளுக்கு எதிராக வழக்குத் தொடர்ந்துள் ளார்.

காஞ்சன் ரூய் என்ப வர் கொல்கத்தாவில் பிச்சையெடுத்து வரு கின்றார்.

இவர் அளித்துள்ள மனுவில், வங்கிகளில் 1 ரூபாய் மற்றும் 2 ரூபாய் நாணயங்க ளுக்கு பதிலாக ரூபாய் நோட்டுகளைத் தர மறுக்கின்றார்கள்.

என்னிடம் ஏராள மான நாணயங்கள் குவிந்துள்ளன, இத னால் எனது பிச்சைக் கார தொழில் பாதிப் படைந்துள்ளது என்று கூறியுள்ளார்.

இந்த மனு, தலைமை நீதிபதி நிஷிதா மாத்ரே தலை மையிலான அமர் வில் நேற்று முன்தினம் விசாரணைக்கு வந்தது.

அப்போது, ரிசர்வ் வங்கி சார்பில் ஆஜரான வழக்கறிஞர் சுசிஸ்மிதா சட்டர்ஜி, அனைத்து நாணயங்களும் செல் லும், ஆனால் மனுதாரர், எந்த வங்கியையோ, கிளையையோ குறிப் பிட்டுக் கூறவில்லை என்று நீதிமன்றத்தில் விளக்கம் அளித்துள்ளார்.

அதையடுத்து நீதி பதிகள், மனுதாரர் எந் தக் குறிப்பிட்ட வங் கியையும் பிரதிவாதி யாக சேர்க்காததால், இந்த மனுவைத் திரும் பப் பெற்று, கூடுதல் விவரங்களுடன் புதிய மனு தாக்கல் செய்யு மாறு காஞ்சன் ருய்யுக்கு உத்தரவிட்டுள்ளனர்.

# குர்மீத்தின் ஆசிரமத்தில் ரகசிய சுரங்கப்பாதை



லக்னோ.செப்.11

தேரா சச்சா சவுதா அமைப்பின் தலைமை ஆசிரமத்தில், குர்மீத்தின் அறையில் இருந்து பெண் சீடர்களின் விடுதிக்குச் செல்லும் வகையில் ரகசிய சுரங்கப்பாதை அமைக்கப்பட்டு இருந் தது கண்டுபிடிக்கப்பட்டு உள்ளது.

அரியானா, பஞ்சாப் உள்ளிட்ட வட மாநிலங்க ளில் பிரபலமாக விளங்கி வரும் 'தேரா சச்சா சவுதா' அமைப்பின் தலைவரான குர்மீத் ராம் ரகீம் சிங்கிற்கு பாலியல் துஷ்பிரயோக வழக்கில் 20 ஆண்டு சிறைத்தண்டனை விதிக் கப்பட்டது. அவர் அரியா னாவின் ரோட்டக் சிறை யில் அடைக்கப்பட்டு இருக்கும் நிலையில், சிர் சாவில் உள்ள அவரது தலைமை ஆச்சிரமத்தில் அதிகாரிகள் சோதனை நடத்தி வருகின்றனர்.

குர்மீத் சிங், பெண்களு டன் உல்லாசமாக இருக்க பயன்படுத்தினார் எனக் கூறப்படும் ரகசிய குகை யும் ஆசிரமத்தில் கண்டு பிடிக்கப்பட்டது. அதில் தடயவியல் நிபுணர்கள் சோதனை நடத்தி வரு கின்றனர்.

சுமார் 800 ஏக்கர் பரப்பளவில் அமைந் துள்ள இந்த ஆசிரமத்தில் நேற்று முன்தினம் 2 ஆது நளாக சோதனை நடந்தது. அப்போது ஆசிரமத்தில் ஒரு ரகசிய சுரங்கப்பாதை இருந்தது கண்டுபிடிக் கப்பட்டது. அது குர்மீத் சிங் தங்கும் அறையில் (குபா) இருந்து, 'சாத்வி நிவாஸ்' எனப்படும் பெண் சீடர்களின் விடுதி வரை செல்லும் வகையில் அமைக்கப்பட்டிருந்தது.

மேலும் சட்ட விரோத மான முறையில் பட்டாசு தொழிற்சாலை ஒன்றும் ஆசிரமத்தில் இயங்கி வந்தது கண்டறியப்பட் டுள்ளது. அங்கு தயாரிக் கப்படும் பட்டாசுகளில் பயங்கரமான சில வெடி பொருள்கள் பயன்படுத் தப்பட்டு வந்ததும் தெரிய வந்துள்ளது.

## ரோஹிங்யா நெருக்கடி:

# மியன்மாரில் ஒரு மாதம் தற்காலிக போர் நிறுத்தம்!



கிளர்ச்சியாளர்கள் அறிவிப்பு

யாங்கூன், செப்.11

மியன்மாரில் இராணுவத்திடம் சண்டையிட்டு வரும் ரோஹிங்யா முஸ்லிம் கிளர்ச்சியாளர்கள் ஒரு மாதத்துக்குத் தற்காலிகப் போர் நிறுத்தம் செய்கிறோம் என அறிவித்துள்ளனர்.

மியன்மார் நாட்டின் ராகினே மாகாணத்தில் பௌத்தர்களுடன் பங்களாதேஷைப் பூர்விகமாகக் கொண்ட ரோஹிங்யா முஸ்லிம்களும் பெருவாரியாக வாழ்கின்றனர். கிட்டத்தட்ட 11 லட்சம் ரோஹிங்யா முஸ்லிம்கள் அங்கு வாழ்கின்றனர்.

ஆனால், அவர்கள் நீண்ட காலமாகப் பல்வேறு சித்திரவதைகளுக்கு ஆளாகி வருகின்றனர் எனக் கூறப்படுகிறது. அவர்கள் மீது மியன்மார் பாதுகாப்புப் படைகளும், சில பௌத்த மதக் குழுக்களும் தாக்குதல் நடத்துகின்றன எனக் குற்றச்சாட்டுகள் எழுந்துள்ளன.

ரோஹிங்யா முஸ்லிம்களுக்கு ஆதரவாக ரோஹிங்யா போராளிகள் 'தி அராக்கன் ரோஹிங்யா சோல்வேசன் ஆர்மி' என்ற பெயரில் ஒரு போராளிக் குழு இயங்கி வருகிறது. இந்தப் போராளிகள் குழுவினர் கலவரங்களை தூண்டுகின்றனர் எனவும், கிராமத் தலைவர்கள், அரச உளவாளிகள் ஆகியோரை கொல்கின்றனர் எனவும் அந்த நாட்டு அரசு குற்றம் சாட்டி வருகிறது.

இந்த நிலையில், கடந்த ஆண்டு ஒக்ரோபர் மாதம் முதல் ரோஹிங்யா முஸ்லிம் போராளிகளுக்கும், பாதுகாப்பு படைகளுக்கும் இடையேயான மோதல்கள் அதிகரித்தன. இதனை அடுத்து, இராணுவத்தின் அத்துமீறல்களால் சுமார் 3 லட்சம் முஸ்லிம்கள் பங்களாதேஷுக்கு அகதிகளாகச் சென்றுள்ளனர்.

மேலும், பல்லாயிரக்கணக்கான ரோஹிங்யா இனத்தவர்கள் பலியாகி உள்ளனர். இந்த நிலையில், கிளர்ச்சியாளர்கள் ஒரு மாதம் போர் நிறுத்தம் செய்யப்போகிறோம் என அறிவித்துள்ளனர் என சர்வதேச ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

மனிதாபிமானத்தைக் கணக்கில் கொண்டே இந்த போர் நிறுத்தம் மேற்கொள்ளப்பட்டுள்ளது எனவும், மியன்மார் இராணுவம் மனிதாபிமான ரீதியில் இதை அணுக வேண்டும் எனவும் கிளர்ச்சியாளர்கள் குழு கேட்டுக்கொண்டுள்ளது.

இதேவேளை, ரோஹிங்யா முஸ்லிம்களின் அவலம் தேச எல்லைகள் கடந்து பலரைக் கவலை அடையச் செய்துள்ளது. பல நாடுகளில் இதற்காக ஆர்ப்பாட்டங்களும் நடைபெற்று வருகின்றன. ரோஹிங்யாக்களைக் காக்கத் தவறியதற்காக தலைவர் ஆங் சான் சூகி பல்வேறு தரப்பினராலும் விமர்சிக்கப்படுகிறார்.

மேலும், ரோஹிங்யாக்களுக்கு ஆதரவாக அவர் பேச வேண்டும் என்றும் உலக நாடுகளைச் சேர்ந்த பல்வேறு தலைவர்களும் வலியுறுத்தி உள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ச)

## 30 லீற்றர் தாய்ப்பாலை தானம் செய்த பெண்!

'ஹார்வே' புயலால் பால் கூட கிடைக்காமல் தவித்த குழந்தைகளுக்கு, சுமார் 30 லீற்றர் தாய்ப்பாலைப் பெண் ஒருவர் தானமாக வழங்கியுள்ளார்.

மிசௌரி மாகாணத்தைச் சேர்ந்தவர் டெனில்லா பால்மர். இவரின் குழந்தைக்குப் பிறக்கும் போதே இருதய நோய் இருந்துள்ளது. இதனால், தாயின் மார்பில் நேரடியாக பால் குடிக்க முடியாத நிலையில் அக்குழந்தை இருந்துள்ளது.

இதனால், தன் குழந்தைக்காகத் தாய்ப்பாலைச் சேகரித்து குளிர்சாதனப் பெட்டியில் பத்திரப்படுத்திவைக்கின்றமையை அவர் வழக்கமாகக் கொண்டிருந்தார். இந்த நிலையில், டெக்ஸாஸ் மாநிலத்தில் ஏற்பட்ட புயலால் பல குழந்தைகள் பால் கிடைக்காமல் அவதிப்படுகின்றமையைப் பால்மர் தொலைக்காட்சிகள் வாயிலாக அறிந்துள்ளார். இதனை அடுத்து, சேமித்து வைத்திருந்த பாலை ஹூஸ்டன் நகருக்குப் பால்மர் அனுப்பி வைத்துள்ளார். (ச)

## அணு குண்டுப் பரிசோதனை வெற்றி:

# ஆடல், பாடல், கேளிக்கை விருந்துடன் வடகொரிய ஜனாதிபதி கொண்டாட்டம்!

பியாங்யாங், செப்.11

அணு குண்டுப் பரிசோதனை மேற்கொண்ட வெற்றியை ஆடல், பாடல், கேளிக்கை விருந்துடன் வடகொரிய ஜனாதிபதி கிம் ஜாங் உன் கொண்டாடி உள்ளார்.

அதிக சக்தி வாய்ந்த அணு குண்டை வெற்றிகரமாக பரிசோதனை செய்வதற்கு உறுதுணையாக இருந்த விஞ்ஞானிகளுக்கு வடகொரியா தலைநகர் பியாங்யாங் நகரில், ஜனாதிபதி கிம் ஜாங் உன் மிகப் பெரிய விருந்து அளித்தார் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த விருந்து நிகழ்ச்சியில் ஜனாதிபதி கிம் ஜாங் உன், தனது மனைவி ரி சோல் ஜுவுடன் கலந்து கொண்டு விஞ்ஞானிகளுக்கு வாழ்த்துத் தெரிவித்தார் என வட கொரிய அரசுக்கு சொந்தமான 'ரோடாங் சின்முன்' நாளிதழ் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக, நேற்று ஞாயிற்றுக்கிழமை வெளியான நாளிதழில் இரண்டு பக்க அளவில் சிறப்புக் கட்டுரை பிரசுரிக்கப்பட்டுள்ளது.

அணு விஞ்ஞானிகள் மற்றும் தொழில்நுட்பக் கலைஞர்களின் இந்த மகத்தான சாதனைக்கு வாழ்த்துத் தெரிவித்த கிம் ஜாங் உன், மேலும் அதிகமான ஆற்றல் வாய்ந்த அணு குண்டுகளைத் தயாரித்து, உலக அரங்கில் அணு வல்லமையில் முக்கிய நாடாக வடகொரியாவை உயர்த்த வேண்டும் எனவும் அவர் கேட்டுக் கொண்டார் என அந்தக் கட்டுரையில் குறிப்பிடப்பட்டுள்ளது.



வட கொரியா நாட்டின் கிழக்கு மற்றும் வடகிழக்கு பகுதிக்கு இடையில் உள்ள சுங்ஜிபேகாம் பகுதியில் கடந்த 3 ஆம் திகதி பகல் 12.36 மணியளவில் சக்தி வாய்ந்த அணு குண்டு ஒன்றைப் பூமிக்கு அடியில் வடகொரியா பரிசோதித்தது எனவும், இதன் விளைவாக 6.3 ரிச்டர் அளவிலான நில அதிர்வு ஏற்பட்டது எனவும் செய்திகள் வெளியாகின.

இந்தப் பரிசோதனைக்கு அமெரிக்கா, பிரான்ஸ், ஜப்பான், ரஷ்யா, சீனா ஆகிய நாடுகளும், ஐக்கிய நாடுகள் சபையும் கடும் கண்டனம் தெரிவித்தன.

ஆனால், அது அணு குண்டுப் பரிசோதனை அல்ல. ஹைட்ரஜன் (Hydrogen) குண்டுப் பரிசோதனை தான் நடத்தினோம் என வடகொரியா சாதித்து வருகின்றது.

இந்த நிலையில், இது தொடர்பாக தென்கொரிய ஊடகங்கள் வெளியிட்ட செய்தியில், சமீபத்தில் பரிசோதிக்கப்பட்ட அணு குண்டு 50 கிலோ தொன் அளவிலான அழிவாற்றலை கொண்டது (ஒரு கிலோ தொன் பத்து லட்சம் கிலோ அளவிலான அழிவாற்றலைக் கொண்டது) எனத் தெரிவிக்கப்பட்டது. (ச)



## எகிப்தில் 3 'மம்மி'கள் கண்டுபிடிப்பு!

கெய்ரோ, செப். 11

எகிப்தின் தலைநகர் கெய்ரோவில் மூன்று புதிய 'மம்மி'கள் அகழ்வாராய்ச்சி நிபுணர்களால் கண்டறியப்பட்டுள்ளன.

பல 'மம்மி'கள் எகிப்தில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. இந்த நிலையில், தற்போது மேலும் புதிய 'மம்மி'கள் அகழ்வாராய்ச்சி நிபுணர்களால் கண்டறியப்பட்டுள்ளன.

தலைநகர் கெய்ரோவில் இருந்து தெற்கு 400 கிலோ மீற்றர் தொலைவில் நைல் நதியின் கரையில் லுசார் நகரம் உள்ளது. அங்கு தான் இந்த 'மம்மி'கள் கண்டு பிடிக்கப்பட்டன. அவற்றில் ஒரு பெண் மற்றும் இரண்டு ஆண்களுடைய 'மம்மி'களும் உள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது. (ச)

# தொடரும் மேல் மாகாண பாடசாலைகளின் ஆதிக்கம்




(கங்கா)

யாழ்ப்பாணத்தில் நடைபெறும் தேசிய மட்ட அஞ்சலோட்ட போட்டிகளில் மேல் மாகாண பாடசாலை அணிகள் தனித்து ஆதிக்கம் செலுத்தி வருகின்றன. இரண்டு நாளில் நடைபெற்ற போட்டிகளின் அடிப்படையில், 324 புள்ளிகளைப் பெற்ற மேல் மாகாணம் அசைக்கமுடியாத இடத்தில் உள்ளது.

அதனைத் தொடர்ந்து, 284 புள்ளிகளைப் பெற்ற மத்திய மாகாணம் இரண்டாமிடத்தில் தொடர்கின்றது. அதற்கு அடுத்ததாக 133 புள்ளிகளைப் பெற்ற வடமேல் மாகாணம் இருக்கின்றது.

கல்வி அமைச்சு மற்றும் இலங்கை பாடசாலைகள் மெய்வல்லுநர் சங்கமும் இணைந்து, வருடாந்தம் நடத்தும், தேசிய மட்டப் பாடசாலைகளுக்கிடையிலான அஞ்சலோட்டப்போட்டிகளின் இந்த வருடத்துக்கான போட்டி கடந்த 8 ஆம் திகதி முதல் யாழ்ப்பாணம் துரையப்பா விளையாட்டரங்கில் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

கல்வி அமைச்சின் ஏற்பாட்டில் தொடர்ந்து 2 ஆவது ஆண்டாக நடைபெறும் இந்த அஞ்சலோட்டப்போட்டிகளுக்கு, நெஸ்லே நிறுவனம் அனுசரணை வழங்குவதுடன், வட மாகாண கல்வி அமைச்சு போட்டிகளை ஒழுங்குபடுத்தி நடத்துகின்றது.

இருபாலாருக்குமாக நடைபெறவுள்ள இந்த அஞ்சலோட்டப் போட்டியில் 164 ஆண்கள் பாடசாலை அணிகளும், 138 பெண்கள் பாடசாலைகள் அணிகளுமென மொத்தமாக 302 பாடசாலை அஞ்சலோட்ட அணிகள் பங்குபற்றுகின்றன.

இரண்டு நாள்கள் நடைபெற்ற போட்டிகளின் அடிப்படையின் வெற்றியாளர்கள் விவரம் வருமாறு.

### 4X100 மீற்றர் ஓட்டம்

12 வயதுப் பிரிவு ஆண்களில் முதலிடத்தை கண்டி திரித்துவக் கல்லூரியும், இரண்டாமிடத்தை நீர்கொழும்பு மாரிஸ்ஸ்டெல்லாகல்லூரியும், மூன்றாமிடத்தை மாத்தறை ராகுல கல்லூரியும் பெற்றுக்கொண்டன.

14 வயதுப்பிரிவு ஆண்களில் முதலிடத்தை கொழும்பு புனித பேதுரு கல்லூரியும், இரண்டாமிடத்தை கொழும்பு புனித ஜோசப் கல்லூரியும், மூன்றாமிடத்தை மாத்தறை ராகுல கல்லூரியும் பெற்றுக்கொண்டன.

16 வயதுப் பிரிவு ஆண்களில் முதலிடத்தை கொழும்பு புனித பெனடிக்ட் கல்லூரியும், இரண்டாமிடத்தை கல்கிஸ்ஸை புனித தோமியர் கல்லூரியும், மூன்றாமிடத்தை கண்டி திரித்துவக் கல்லூரியும் பெற்றுக்கொண்டன.

18 வயதுப் பிரிவு ஆண்களில் முதலிடத்தை கொழும்பு புனித பெனடிக்ஸ் கல்லூரியும், இரண்டாமிடத்தை கொழும்பு றோயல் கல்லூரியும், மூன்றாமிடத்தை மாத்தறை ராகுல கல்லூரியும் பெற்றுக் கொண்டன.

20 வயதுப் பிரிவு ஆண்களில் முதலிடத்தை நீர்கொழும்பு மாரிஸ் ஸ்டெல்லா கல்லூரியும், இரண்டாமிடத்தை கொழும்பு புனித பெனடிக்ட் கல்லூரியும், மூன்றாமிடத்தைதிரித்துவக் கல்லூரியும் பெற்றுக்கொண்டன.


12 வயதுப் பிரிவு பெண்களில் முதலிடத்தை நீர்கொழும்பு அவே மரியா கன்னியர்மடமும், இரண்டாமிடத்தை கண்டி மகாமய மகளிர் வித்தியாலயமும், மூன்றாமிடத்தை நாவலப்பிட்டி சென. அன்ட்றூஸ் மகளிர் வித்தியாலயமும் பெற்றுக்கொண்டன.

14 வயதுப் பிரிவு பெண்களில் முதலிடத்தை நாவலப்பிட்டி ஜனாதிபதி மகளிர் வித்தியாலயமும், இரண்டாமிடத்தை பனிப்பிட்டிய தர்மபால வித்தியாலயமும், மூன்றாமிடத்தை இரத்தினபுரி சுமண மகளிர் வித்தியாலயமும் பெற்றுக்கொண்டன.

16 வயதுப் பிரிவு பெண்களில் முதலிடத்தை குருணாகல் சேர் ஜோன் கொத்தலாவல மகா வித்தியாலயமும், இரண்டாமிடத்தை கண்டி நல்லாயன் கன்னியர்மடமும், மூன்றாமிடத்தை பனிப்பிட்டி தர்மபால வித்தியாலயமும் பெற்றுக் கொண்டன.

18 வயதுப் பிரிவு பெண்களில் முதலிடத்தை குருணாகல் சேர் ஜோன் கொத்தலாவல மகா வித்தியாலயமும், இரண்டாமிடத்தைகொழும்பு மோஸஸ் மகளிர் கல்லூரி, மூன்றாமிடத்தை வலல ரத்னாயக்க கல்லூரியும் பெற்றுக்கொண்டன.



20 வயதுப் பிரிவு பெண்களில் முதலிடத்தை அம்பாகமுவ மத்திய கல்லூரியும், இரண்டாமிடத்தை வலல ரத்னாயக்க கல்லூரியும், மூன்றாமிடத்தை இரத்தினபுரி சுமண மகளிர் வித்தியாலயமும் பெற்றுக்கொண்டன.

### 4X800 மீற்றர் ஓட்டம்

18 வயதுப் பிரிவு ஆண்களில் முதலிடத்தை வலல ரத்னாயக்க மத்திய மகா வித்தியாலயமும், இரண்டாமிடத்தை கண்டி சென். சில்வெஸ்ரர் கல்லூரியும், மூன்றாமிடத்தை வென்னப்புவ சென். ஜோசப் வாஸ் கல்லூரியும் பெற்றுக் கொண்டன.

18 வயதுப் பிரிவு பெண்களில் முதலிடத்தை வலல ரத்னாயக்க மத்திய மகா வித்தியாலயமும், இரண்டாமிடத்தை மகுஸ்ஸாவெள சிறிரத்னானபல மகா வித்தியாலயமும், மூன்றாமிடத்தை வெலிமட மத்திய கல்லூரியும் பெற்றுக்கொண்டன.

20 வயதுப் பிரிவு ஆண்களில் முதலிடத்தை வலல ரத்னாயக்க மத்திய மகா வித்தியாலயமும், இரண்டாமிடத்தை நீர்கொழும்பு மாரிஸ் ரெல்லா கல்லூரியும், மூன்றாமிடத்தை கொழும்பு சென். பீற்றர்ஸ் கல்லூரியும் பெற்றுக் கொண்டன.

20 வயதுப் பிரிவு பெண்களில் முதலிடத்தை வலல ரத்னாயக்க மத்திய மகா வித்தியாலயமும், இரண்டாமிடத்தை வெலிமட மத்திய கல்லூரியும், மூன்றாமிடத்தை அம்பேகஸ்டோவ மத்திய கல்லூரியும் பெற்றுக்கொண்டன.

# கோல் மழை பொழிந்த சென். பற்றிக்ஸ்: இடையில் விலகிய திருச்சிலுவைக் கல்லூரி

(கங்கா)

யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணியினர் தொடர்ந்து கோல் அடிக்க, நடுவர்கள் சென். பற்றிக்ஸ் அணியினருக்கு ஆதரவு வழங்குகின்றனர் என குறை கூறிய களுத்துறை திருச்சிலுவைக்கல்லூரி அணியினர், போட்டிமுடிவடைய 11 நிமிடங்கள் இருக்கும் நிலையில் போட்டியில் இருந்து விலகினர்.

இலங்கை பாடசாலைகள் உதைபந்தாட்ட சம்பியன்சிப் தொடரின் பிரிவு 1 அணிகளுக்கிடையிலான உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி தற்போது நடைபெற்று வருகின்றது. இதில் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணிக்கும் களுத்துறை திருச்சிலுவை அணிக்கும் இடையிலான முதலாவது போட்டி 8 ஆம் திகதி வெள்ளிக்கிழமை சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெற்றது.



போட்டியின் முதற்பாதியில் சென். பற்றிக்ஸ் அணிக்கு இரண்டு அருமையான வாய்ப்புக்கள் கிடைத்தும், அவ்வணி அதனைக் கோலாக்க தவறியது. அதேபோல் திருச்சிலுவை அணிக்கு, நான்கு வாய்ப்புக்கள் கிடைத்தும் அவற்றில் 3 வாய்ப்புக்கள் சென். பற் றிக்ஸ் அணியின் கோல் காப்பாளரால் தடுக்கப்பட்டன.

முதற்பாதியாட்டம் எவ்வித கோல்களும் பெறப்பாடத நிலையில் முடிவடைந்தது.

இரண்டாவது பாதியாட்டத்தின் 7 ஆவது நிமிடத்தில் சென். பற்றிக்ஸ் அணி முதலாவது கோலை அடித்தது. அதனை கிறிஸ் ஸ்ரீபன் அடித்தார். அதன்பின்னர் சென். பற்றிக்ஸ் அணியின் கைகள் ஓங்கின. இரண்டாவது கோலை அவ்வணியின் சாந்தன் அடித்தார். அதே உத்வேகத்துடன் ஆடிய சென். பற்றிக்ஸ் அணிக்கு அபீஸன் மூன்றாவது கோலைப் பெற்றுக் கொடுத்தார்.

இரண்டாவது பாதியின் 27 ஆவது நிமிடத்தில் கோல் காப்பாளரின் கைகளின் பட்டு திரும்பிய பந்தை, சென். பற்றிக்ஸ் அணியின் சாந்தன் கோலாக மாற்றினார். எனினும் அந்தக் கோலை ஏற்கமறுத்ததிருச்சிலுவை அணியினர், சென். பற்றிக்ஸ் அணியினர் முறையற்ற விதத்தில் கோல் காப்பாளரிடம் இருந்து பந்தைப் பறித்து ஆடுகின்றனர் எனநடுவரிடம் முறையிட்டனர்.

அதே குழப்பத்தில், அடுத்த கோலையும் சென். பற்றிக்ஸ் அணியினர் அடித்தனர். அந்தக் கோலை ஹட்ரிக் கோலாக சாந்தன் அடித்தார். எனினும் அந்தக் கோலையும் ஏற்காத திருச்சிலுவை அணியினர் நடுவருடன் வாக்குவாதத்தில் ஈடுபட்டனர்.

வாக்குவாதத்தின் முடிவில் தாங்கள் தொடர்ந்து விளையாடுவதில்லையென முடிவெடுத்த திருச்சிலுவை அணியினர், மைதானத்தைவிட்டு வெளியேறினர்.

போட்டியில் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணியினர் 5:0 என்ற கோல்கள் கணக்கில் வெற்றி பெற்றனர்.

## உதைபந்தாட்ட போட்டிகள்

(கங்கா)

பேராயர் பொன்சியன் ஆண்டகை ஞாபகார்த்தமாக யாழ்ப்பாணம் சென். பற்றிக்ஸ் கல்லூரி அணிக்கும் (புனித பத்திரிசியார் கல்லூரி) கொழும்பு சென். ஜோசப்கல்லூரிக்கும் இடையிலான உதைபந்தாட்ட போட்டிகள் இன்று பிற்பகல் ஒரு மணிக்கு சென். பற்றிக்ஸ் கல்லூரி மைதானத்தில் நடைபெறவுள்ளது.

முதலாவது வருடமாக நடத்தப்படும் இந்த உதைபந்தாட்டப் போட்டிகளில், இரண்டு பாடசாலைகளின் 12, 14, 16 மற்றும் 18 வயதுப்பிரிவு கால் பந்தாட்ட அணிகளும் மோத வுள்ளன.

இரண்டு பாடசாலைகளின் வீரர்களுக்கிடையில் நல்லுறவை ஏற்படுத்தும் நோக்கில் இந்த உதைபந்தாட்டப் போட்டியானது தொடர்ந்து வரும் வருடங்களில் தொடர்ந்து நடத்தப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இலங்கை – பாகிஸ்தான் அணிகளுக்கிடையிலான சுற்றுத்தொடர் விவரம்



பாகிஸ்தான் கிரிக்கெட் சபை (PCB) இலங்கை கிரிக்கெட் அணியின் ஐக்கிய அரபு இராச்சியம் மற்றும் பாகிஸ்தான் ஆகிய நாடுகளுக்கான சுற்றுப் பயணத்தின் போது நடைபெறவுள்ள போட்டிகளின் அட்டவணையை வெளியிட்டுள்ளது.

இலங்கையின் இந்த சுற்றுத் தொடர் இரண்டு டெஸ்ட் போட்டிகளையும், ஐந்து ஒரு நாள் போட்டிகளையும், மூன்று ரி-20 போட்டிகளையும் கொண்டதாக அமைந்துள்ளது.

இத்தொடரின் இறுதி ரி-20 போட்டி (பாதுகாப்பு விடயங்கள் உறுதிப்படுத்தப்படும் பட்சத்தில்) பாகிஸ்தானின் லாஹூர் நகரில் எதிர்வரும் ஒக்ரோபர் மாதம் 29 ஆம் திகதி இடம்பெறும்.

இத்தொடர் செப்ரெம்பர் மாதம் 28 ஆம் திகதி நடைபெறவுள்ள, இரண்டு போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடருடன் ஆரம்பமாகின்றது. டுபாய் மைதானத்தில் ஒக்ரோபர் மாதம் 6 ஆம் திகதி தொடக்கம் 10 ஆம் திகதி வரை நடைபெறும் இத் தொடரின் இரண்டாவது டெஸ்ட் போட்டி பகலிரவு ஆட்டமாக நடைபெறவுள்ளது.

இத்தொடரின் ஐந்து போட்டிகள் கொண்ட ஒரு நாள் தொடர், ஒக்ரோபர் மாதம் 13 ஆம் திகதி நடைபெறும் போட்டியுடன் ஆரம்பமாகவுள்ளது. ஒரு நாள் போட்டிகள் யாவும் டுபாய், அபுதாபி மற்றும் சார்ஜா ஆகிய நகரங்களில் பகலிரவு ஆட்டங்களாக நடைபெறவுள்ளன.

இதற்கு மேலதிகமாக, தொடரின் முதல் இரண்டு ரி-20 போட்டி களும் அபுதாபி நகரில் இடம்பெறவுள்ளன. இத் தொடரின் மூன்றாவது ரி-20 போட்டி பாகிஸ்தானின் லாஹூரில் நடைபெறவுள்ளதால்.

இலங்கை அணியுடனான இத்தொடரும், உலக பதினொருவர் அணியின் பாகிஸ்தானுக்கான தொடரும் அந்நாட்டில் சர்வதேச கிரிக் கெட் போட்டிகள் மீண்டும் நடைபெறுவதற்கு ஒரு வாய்ப்பாக அமைந்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

இலங்கை கிரிக்கெட் அணி, இத்தொடரில் பங்குபற்றுவதற்காக செப்ரெம்பர் மாதம் 25 ஆம் திகதி ஐக்கிய அரபு இராச்சியத்திற்கு பயணமாகின்றது.

## 43 ஆவது தேசிய விளையாட்டு நிகழ்வில் கராத்தே போட்டியில் முல்லை இளைஞன் வெண்கலப் பதக்கம்



43 ஆவது தேசிய விளையாட்டுப் போட்டியில் ஆண்களுக்கான கராத்தே போட்டியில் முல்லைத்தீவு மாவட்ட இளைஞன் வெண்கலப் பதக்கத்தைப் பெற்றுச் சாதனை படைத்துள்ளார்.

விளையாட்டுத் துறை அமைச்சினால் நடத்தப்படும் 43ஆவது தேசிய விளையாட்டு விழாவின் ஆண்களுக்கான கராத்தே போட்டி நிகழ்வு கண்டி மாவட்டத்தில் திகன பிரதேசத்தில் இம் மாதம் 6ஆம், 7ஆம் திகதிகளில் நடைபெற்றது.

இப் போட்டி நிகழ்வில் முல்லைத்தீவு மாவட்டத்தைச் சேர்ந்த எம். குமார் வெண்கலப் பதக்கத்தைப் பெற்று கொண்டார்.

இவர் 84-75 நிறை பிரிவில் வடமேல் மாகாண வீரருடன் காலிறுதிப் போட்டியில் மோதி 7:4 என்ற புள்ளி அடிப்படையில் வெற்றிபெற்று தேசிய ரீதியிலான வெண்கலப் பதக்கத்தை பெற்றுப் கொண்டார். (100)

## சென்ரல் அணி 15 ஓட்டங்களால் வெற்றி

(கங்கா)

சலிஸ்ரனின் சிறப்பான பந்துவீச்சால் பெற்றுக் கொள்ளப்பட்ட குறைந்த ஓட்ட எண்ணிக்கையையும் எதிரணியினர் துரத்தவிடாமல் தடுக்க, சென்ரல் அணியினர் 15 ஓட்டங்களால் வெற்றியை தமதாக்கினர்.

யாழ்.மாவட்ட கிரிக்கெட் சங்கத்தின் ஏற்பாட்டில், வி.ரி.மகாலிங்கம் ஞாபகார்த்த பிறிமியர் லீக் இருபது - 20 கிரிக்கெட் சுற்றுப்போட்டியொன்றை நடத்தி வருகின்றது. யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த 24 துடுப்பாட்ட அணிகள் பங்குபற்றுகின்றன. அணிகள் 4 பிரிவுகளாக பிரிக்கப்பட்டு, முதற்சுற்று ஆட்டங்கள் லீக் முறையில் நடத்தப்பட்டு வருகின்றன.

வட்டுக்கோட்டை யாழ்ப்பாணக் கல்லூரி மைதானத்தில் அண்மையில் நடைபெற்ற ஆட்டமொன்றில் யாழ்ப்பாணம் சென்ரல் விளையாட்டுக் கழக அணியை எதிர்த்து திருநெல்வேலி வை.எம்.எச்.ஏ அணியினர் மோதினர்.

நாணயச் சுழற்சியில் வென்ற திருநெல்வேலி அணியினர் முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தனர். அதற்கிணங்க களமிறங்கிய சென்ரல் அணியினர் 18.4 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 129 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டனர். துடுப்பாட்டத்தில் பாலேந்திரா 26 ஓட்டங்களையும்,சுதர்சன் 21 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர்.

பந்துவீச்சில் திருநெல்வேலி அணி சார்பாக, மிலுக்சன் 3, சுதாகரன் 2 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்.

130 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு பதிலளித்தாடிய திருநெல்வேலி அணியினர், 18.5 ஓவர்களில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 114 ஓட்டங்களை மாத்திரம் பெற்றனர். துடுப்பாட்டத்தில் சஞ்சீவன் 21, அருண்ராஜ் 16 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுத்தனர்.

பந்துவீச்சில் சென்ரல் அணி சார்பாக, சலிஸ்ரன்அ 4 ஓவர்கள் பந்துவீசி 14 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகளையும், சுதர்சன் 2 விக்கெட்டுகளையும் கைப்பற்றினர்.

## ஜொனியன்ஸ் அணி 17 ஓட்டங்களால் வெற்றி

(கங்கா)

ஜொனியன்ஸ் அணி, யதுசன், கிசாந்துஜனின் சிறப்பான துடுப்பாட்டத்தால், கிறாஸ்கோப்பர்ஸ் அணியை 17 ஓட்டங்களால் வென்றது.

யாழ்.மாவட்ட கிரிக்கெட் சங்கத்தின் ஏற்பாட்டில், வி.ரி.மகாலிங்கம் ஞாபகார்த்த பிறிமியர் லீக் இருபது - 20 கிரிக்கெட் சுற்றுப் போட்டியொன்றை நடத்தி வருகின்றது. யாழ்.மாவட்டத்தைச் சேர்ந்த 24 துடுப்பாட்ட அணிகள் பங்குபற்றுகின்றன. அணிகள் 4 பிரிவுகளாக பிரிக்கப்பட்டு, முதற்சுற்று ஆட்டங்கள் லீக் முறையில் நடத்தப்பட்டு வருகின்றன.

சென்.ஜோன்ஸ் கல்லூரி மைதானத்தில் அண்மையில் நடைபெற்ற முதற்சுற்று ஆட்டமொன்றில் கிறாஸ்கோப்பர்ஸ் அணியை எதிர்த்து யாழ்ப்பாணம் ஜொனியன்ஸ் அணி மோதியது.

நாணயச்சுழற்சியில் வென்ற கிறாஸ்கோப்பர்ஸ் அணி முதலில் களத்தடுப்பில் ஈடுபடத் தீர்மானித்தது. அதற்கிணங்க களமிறங்கிய ஜொனியன்ஸ் அணி, முதல் 3 விக்கெட்டுகளை 11 ஓட்டங்களுக்குள் இழந்து தடுமாறியது. எனினும் கிசாந்துஜன் -யதுசனின் ஆட்டம் அணியை சரிவிலிருந்து மீட்டெடுத்துச் சென்றது. கிசாந்துஜன் 43 ஓட்டங்களைப் பெற்றிருந்த போது, ஆட்டமிழந்தார். தொடர்ந்தும் சிறப்பாக ஆடிய யதுசன், அரைச்சதம் கடந்து 68 ஓட்டங்களைப் பெற்று ஆட்டமிழந்தார்.

ஜொனியன்ஸ் அணி 20 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்டுகளை இழந்து 161 ஓட்டங்களைப் பெற்றது.

பந்துவீச்சில் கிறாஸ் கோப்பர்ஸ் அணி சார்பாக, ஜெரோம், சரண்ராஜ் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளைக் கைப்பற்றினர்.

162 ஓட்டங்கள் என்ற வெற்றியிலக்கை நோக்கி பதிலளித்தாடிய கிறாஸ்கோப்பர்ஸ் அணி, முதல் மூன்று விக்கெட்டுகளையும் 16 ஓட்டங்களுக்குள் இழந்து, ஜொனியன்ஸ் அணி போல் தடுமாறியது. எனினும், டிலோசன் – சாரங்கனின் ஆட்டம் அணியைத் தூக்கி நிறுத்தியது. அவர்கள் ஆட்டமிழக்க அணி தொய்வடைந்தது. எனினும், இறுதியில் றதீசன் காட்டிய அதிரடியில் வெற்றியை நோக்கி நகருவது போல் இருந்தாலும், அவருடைய ஆட்டமிழப்புடன் அதுவும் முடிவுக்கு வந்தது. கிறாஸ்கோப்பர்ஸ் அணி, 20 ஓவர்களில் 7 விக்கெட்டுகளை இழந்து 144 ஓட்டங்களை மாத்திரம் பெற்றது. துடுப்பாட்டத்தில் சரண்ராஜ் 37 ஓட்டங்கள், டிலோசன் 31 ஓட்டங்கள், றதீசன் 22 ஓட்டங்களையும் பெற்றுக் கொடுத்தனர்.

பந்துவீச்சில் ஜொனியன்ஸ் அணி சார்பாக சஞ்சயன், யதுசன், கிசாந்துஜன் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளைக் கைப்பற்றினர்.

காலைக்கதிர் Kalaikkathir



# அச்சுவேலி நெசவுசாலையை மீள இயக்க நடவடிக்கை எடுக்குமாறு நேற்று போராட்டம்

## அங்கு இயங்கும் மதத் தலத்திற்கும் எதிர்ப்பு

அச்சுவேலி, செப்.11

அச்சுவேலி இராச வீதியில் அமைந்துள்ள நெசவுசாலை கட்டடத்தை மத போதனை நிலையமாக மாற்றியதற்கு எதிர்ப்புத் தெரிவித்து அப்பகுதி மக்கள் நேற்று போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

குறித்த கட்டடத்தை மீண்டும் நெசவு நிலையமாக மாற்றி தாங்கள் அங்கு தொழில் செய்வதற்கு வழி ஏற்படுத்தித் தருமாறும் அவர்கள் கோரிக்கை விடுத்தனர்.

அந்த நெசவுசாலை யுத்தத்தின் பின் இயங்கவில்லை. இதனையடுத்து அந்தக் கட்டடம் மதத்தலமாக மாற்றப்பட்டு அங்கு பிரார்த்தனை வழிபாடுகள் முன்னெடுக்கப்பட்டுவருகின்றது.

அங்கு அதிக சத்தத்துடன் பிரார்தனை வழிபாடுகள் மேற்கொள்ளப்படுவதாகவும் இதன் காரணமாக மாணவர்கள் மற்றும் நோயாளிகள் பல்வேறு உளவியல் ரீதியான பிரச்சினைகளுக்கு உள்ளாவதாகவும் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர். அதனால் அந்த மதத்தலத்திற்கு எதிராக மல்லாகம் நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டுள்ளதாகவும் அவர்கள் கூறினர்.

இந்நிலையில், அந்த நெசவு சாலையை கைத்தொழில் அமைச்சு பொறுப்பெடுத்து மீளவும் இயக்கவேண்டும் எனவும் நேற்றுப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் தெரிவித்தனர்.






ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள், கைகளில் பதாகைகளையும் ஏந்தியிருந்தனர். அவர்கள் "பொதுச் சொத்தை தனி மனிதன் கையகப்படுத்துவதா?" "சமயத்தின் பெயரில் சர்வதிகாரமா?", 'அச்சுவேலி மக்களை ஏமாளியாக்காதே, நெசவு நிலையத்தினை மீளவும் இயங்க வழிவிடு' போன்ற கோஷங்களை எழுப்பினர். (ம)

### கிளிநொச்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

என்பதை அரசாங்கம் அறிவிக்க வேண்டும் எனவும் தமது உறவினர்களைக் கண்டுபிடித்து தங்களிடம் ஒப்படைக்க வேண்டும் எனக் கோரியும் அவர்கள் ஆரம்பித்த போராட்டம் நேற்றுடன் 203 ஆவது நாளாக இடம்பெற்றது.

இந்நிலையில், கிளிநொச்சி கந்தசுவாமி ஆலய வருடாந்த மஹோற்சவம் கடந்த இரு வாரங்களுக்கு முன்னர் ஆரம்பமாகிய போது, திருவிழா நடைபெறும் 10 தினங்களும் பந்தலை அகற்றி ஒத்துழைப்பு வழங்குமாறும் அதன் பின்னர் அந்த இடத்தில் மீண்டும் பந்தல் அமைத்து போராட்டத்தில் ஈடுபடுமாறும் ஆலய நிர்வாகம் போராட்டக்காரர்களை கோரியிருந்தது.

இதையடுத்து காணாமற் போனோரின் உறவினர்கள் ஆலயத்திற்கு சமீபமாக உள்ள சிறிய கடை ஒன்றில் இருந்து தமது போராட்டத்தை முன்னெடுத்தனர்.

ஆலய மஹோற்சவம் கடந்த 6 ஆம் திகதி முடிவடைந்த நிலையில், போராட்டக்காரர்கள் இன்னும் சில தினங்களில் முன்னர் இருந்த இடத்தில் மீண்டும் பந்தலை அமைக்கவிருந்தனர்.

இந்நிலையில், ஆலயத்தில் தொடர்ந்தும் திருவிழாக்கள் நடைபெறவிருப்பதால் ஆலயத்திற்கு முன்பாக போராட்டம் நடத்த அனுமதி வழங்க முடியாது என நேற்றைய தினம் ஆலய நிர்வாகம் கடிதம் மூலம் அறிவித்திருக்கின்றது.

2017.09.10 ஆம் திகதி ஆலய நிர்வாகம் நடத்திய நிர்வாக சபைக் கூட்டத் தீர்மானத்தின் அடிப்படையிலேயே இந்த முடிவு எடுக்கப்பட்டதாகவும் கடிதத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

ஆலயத்தில் வியாழ மாற்றம், நவராத்திரி விழா, கௌரிக் காப்பு, புரட்டாதிச் சனி, கந்தசஷ்டி விரதம், பிள்ளையார் கதை, திருவெம்பாவை ஆகிய விழாக்கள் நடைபெறவிருக்கின்றன எனவும் கடிதத்தில் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மேற்படி கடிதத்தின் பிரதிகள் நாடாளுமன்ற உறுப்பினர் சி.சிறிதரன், கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர், கரைச்சி பிரதேச செயலாளர், கிளிநொச்சி நகர கிராம சேவையாளர் ஆகியோருக்கு அனுப்பப்பட்டுள்ளன. (ம)

### சரத்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வழிபாடுகளில் ஈடுபட நேற்றுச் சென்றிருந்த முன்னாள் ஜனாதிபதியிடம் முதலமைச்சர் விக்னேஸ்வரன் வெளியிட்டிருந்த சந்தேகம் தொடர்பில் ஊடகவியலாளர்கள் கேள்வி எழுப்பிய போதே அவர் மேற் கண்டவாறு கூறியுள்ளார்.

முன்னாள் இராணுவ தளபதி கூறுவதால், சந்தேகம் உள்ளது. அது உண்மையாக இருக்கலாம் என விக்னேஸ்வரன் கூறுகிறார். உண்மையில், இப்படியான காட்டிக்கொடுப்புகள் நடக்கும் போது சமூகம் குறித்தும் நாடு குறித்தும் அடுத்தது போரின் முடிவுகள் தொடர்பாகவும் மிகப் பெரிய குழப்பமான நிலைமை ஏற்படும்.

இராணுவத் தளபதி ஒருவர் செய்யக் கூடாத ஒன்றை பொன்சேகா செய்துள்ளார் என மஹிந்த ராஜபக்ஷ குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை முதலமைச்சர் விக்னேஸ்வரன், சிறையில் இருக்கும் விடுதலைப் புலிகளின் உறுப்பினர்களை பார்க்க சென்றிருந்தமை குறித்து ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விக்கு பதிலளித்த மஹிந்த ராஜபக்ஷ, அவர்களுக்கு உரிமையுள்ளது. அவர்களுக்காகத்தானே இவர்கள் குரல் கொடுக்கின்றனர். எம்மவருக்கே அதனை புரிந்துகொள்ள முடியாது போயுள்ளது எனக் கூறியுள்ளார். (இ-ச)

### நீரிழிவு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கொழுப்பைக் கரைத்து, உடல் பருமனையும், நீரிழிவு நோயையும் தடுக்கிறது என்று கண்டறியப்பட்டுள்ளது.

இந்த நாளமில்லா சுரப்புத் திரவத்தை எலிகளுக்குச் சோதனை முறையில் செலுத்திப் பார்த்ததில், உடல் பருமனையும் நீரிழிவையும் கட்டுப்படுத்தியுள்ளமை கண்டறியப்பட்டுள்ளது.

இந்த நிலையில், மனிதர்களிடமும் இந்தச் சோதனை வெற்றியடையும் என நம்பிக்கை வெளியிடப்பட்டுள்ளது.

தற்போது நீரிழிவு நோயாளர்களுக்கு இன்சுலின் மருந்து மட்டுமே தீர்வாக இருக்கின்றது.

எனவே, விரைவில் இன்சுலினுக்கு மாற்றாக இந்த திரவத்தைச் செலுத்துவதன் மூலம் நீரிழிவு நோயைக் கட்டுக்குள் கொண்டுவர முடியும் என புரூஸ் ஸ்பைகில் மென் என்ற விஞ்ஞானி தெரிவித்துள்ளார். (இ-ச)

### சீரற்ற...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இருப்பினும், தற்போது நிலவும் சீரற்ற காலநிலைக்கு மத்தியில் மீண்டும் டெங்கு நோய் வியாபிக்கக்கூடிய நிலை இருப்பதாகவும் அவர் குறிப்பிட்டார்.

இது குறித்து பொதுமக்கள் மிகவும் அவதானத்துடன் செயற்பட வேண்டும் எனவும் தேசிய டெங்கு நோய் தடுப்புப் பிரிவின் சமூக விசேட வைத்தியர் திருமதி பிரசீலா சமரவீர தெரிவித்துள்ளார். (ம)

### தமிழர்களுக்கான..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நன்மை செய்துவிட்டால், மஹிந்த ராஜபக்ஷ மீண்டும் அதிகாரத்தைக் கைப்பற்றி விடுவார் என்று அரசு இன்னமும் அஞ்சுகிறது. இதனால் தமிழ் மக்களின் பிரச்சினைகளை ஒருபோதும் தீர்க்க முடியாது. அவர்கள் எம்முடன் பேசும் போது, நன்றாகவே பேசுகிறார்கள். எல்லாவற்றையும் ஏற்றுக் கொள்கிறார்கள். ஆமாம், ஆமாம் என்கிறார்கள்.

ஆனால், பின்னர் ஏன் நீங்கள் எதையும் செய்யவில்லை என்று கேட்டால், நாங்கள் மெதுவாகவே, நடவடிக்கைகளை எடுக்க வேண்டியிருக்கிறது, இல்லாவிட்டால் மஹிந்த ராஜபக்ஷ அதிகாரத்துக்கு மீண்டும் வந்து விடுவார் என்கிறார்கள்.

**மனித நேயத்துடன் பேசினார் மகாநாயக்கர்**

நேற்று முன்தினம் மல்வத்தை பீடத்தின் மகாநாயக்க தேரர் எந்த அரசியல் நோக்கமும் இல்லாமல், வடக்கு மக்களின் பிரச்சினைகள் பற்றி பேசினார்.

அவர் அரசியல் பேச விரும்பவில்லை. அவர் மனித நேயத்துடன் மட்டுமே பேசினார்.

எம்முடன் அவர் மிக நன்றாக உரையாடினார். அவரைப் போலவே எல்லா பௌத்த பிக்குகளும் இருக்க வேண்டும் என்று நான் நினைக்கிறேன். என்றும் அவர் தெரிவித்துள்ளார். (இ-2)

### மத்தள...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

வலியுறுத்திவரும் நிலையில் நேற்று முன்தினம் புதுடில்லி சந்திப்பின் போதும் இந்த விடயம் குறித்து அழுத்தமாகப் பேசப்பட்டதாக அறியவருகின்றது.

இந்தியப் பெருங்கடல் மாநாட்டில் பங்கேற்க கடந்தவாரம் கொழும்பு வந்திருந்த இந்திய வெளிவிவகார அமைச்சர் சுஷ்மா ஸ்வராஜ், இலங்கை ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, பிரதமர் ரணில் விக்கிரமசிங்க ஆகியோரைச் சந்தித்துப் பேசியிருந்தார்.

இந்தச் சந்திப்புகளின் போது, இந்தியா ஆர்வம் காட்டி வரும், மத்தள விமான நிலைய திட்டம் மற்றும் கொழும்புத் துறைமுக கொள்கலன் முனையை திட்டம் போன்றவற்றை விரைவாக உறுதிப்படுத்துமாறு இலங்கை அரசிடம் அவர் கோரியதாக, கொழும்பிலுள்ள உயர்மட்ட வட்டாரம் ஒன்று, 'தி ஹிந்து' ஆங்கில நாளிதழிடம் தெரிவித்துள்ளது. (இ-ச)

(மற்றொரு செய்தி 5 ஆம் பக்கத்தில்)

### கூட்டமைப்பு...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

லலித் வீரதுங்க மற்றும் அனுஷ பெல்பிட்ட ஆகியோரைச் சிறையில் சென்று சந்திக்க வேண்டி ஏற்பட்டதால், கூட்டமைப்பு – கூட்டு எதிரணிச் சந்திப்பு தள்ளிப்போய் விட்டது எனத் தெரிவிக்கப்பட்டது.

அடுத்த ஓரிரு தினங்களில் நடைபெறும் சந்திப்பில் கூட்டமைப்பின் சார்பில் இரா. சம்பந்தனும், கூட்டு எதிரணி சார்பில் தினேஷ் குணவர்த்தன, டலஸ் அழகப்பெரும ஆகியோரும் பங்குபற்றுவர் என எதிர்பார்க்கப்படுகிறது.

புதிய அரசமைப்பு உருவாக்கம் உட்பட பல விடயங்கள் இச்சந்திப்பில் ஆராயப்படும் எனவும் நம்பப்படுகிறது. (உ)

### வன்முறையை....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மேஜர் ஜெனரல் கமல் குணரட்ண விடுத்த செய் தியை ஜனாதிபதி சுட்டிக்காட்டி யுள்ளார்.

ஊனமுற்ற படைவீரர்களின் போராட்டத்துக்கு மத்தியில் வெளியாள்களைக் கொண்டு வந்து குவித்து, குழப்பத்தை உருவாக்கியோரே இப்போது அரசை விமர்சிக்கின்றனர் என்றார் ஜனாதிபதி.

ஊனமுற்ற படையினரைப் பொலிஸார் தாக்கினர் என்று மேஜர் ஜெனரல் கமல் குணரட்ண விமர்சித்தமையை சுட்டிக் காட்டியுள்ள ஜனாதிபதி, பொலிஸார் ஊனமுற்றவர்கள் எவருடனும் மோதவில்லை. நல்ல தேகாரோக்கியமானவர்களுடனேயே மோத வேண்டி வந்தது. இந்த ஓய்வு பெற்ற இராணுவ அதிகாரியே அத்தகைய தேகாரோக்கிய முடைய – தவறான ஆள்களை – அந்தப் போராட்டக்காரர்களுக்குள் கொண்டு வந்து நுழைத்தார் என்றும் ஜனாதிபதி குற்றம் சுமத்தினார். (உ)

### விக்கியின்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

அமைச்சர் சரத் பொன் சேகா, முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் ஜகத் ஜயசூரிய பற்றி கூறிய கருத்து மிகவும் கீழ்த்தரமான கதை.

வடக்கு முதலமைச்சரின் தேவைக்காக பொன்சேகா இதனைக் கூறியுள்ளார். இவ்வாறான பாவப்பட்ட நபர் பிறந்தமை குறித்து நான் மிகவும் கவலையடைகின்றேன்.

பொன்சேகாவின் தலையில் இடி விழவேண்டும் என்று மக்களும் கூறுகின்றனர். அவர் மீது இடி விழா விட்டாலும் இடி ஒன்றை செய்தாவது பொன்சேகா மீது விழச் செய்ய வேண்டும் எனவும் ஜனக பண்டார தென்னக்கோன் குறிப்பிட்டுள்ளார்.

அதேவேளை லலித் வீரதுங்க மற்றும் அனுஷ பெல்பிட்ட ஆகியோருக்கு எதிரான நீதிமன்றத் தீர்ப்புக் குறித்து கருத்து வெளியிட்டுள்ள தென்னக்கோன்,

நாட்டில் சகல அதிகாரிகளும் ஒன்றாக இணைந்துள்ளனர். கடமையைச் செய்ய அவர்கள் அஞ்சுகின்றனர்.

வரலாற்றிலேயே ஜனாதிபதியின் செயலாளர் ஒருவருக்கு இப்படியான சிறைத்தண்டனை வழங்கப்பட்டுள்ள முதலாவது சந்தர்ப்பம் இதுவாகும். அவரது அபராதப் பணத்தை செலுத்த நான் கட்சியினருடன் சேர்ந்து பணத்தைச் சேகரிக்கவுள்ளேன் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

### மைத்திரி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

கவுடுள்ள பிரதேசத்திலுள்ள கிராமம் ஒன்றில் கடற்றொழிலாளர்களுக்கு உபகரணம் வழங்கும் நிகழ்வு நேற்று ஜனாதிபதியின் தலைமையில் நடைபெற்றது.

இந்த நிகழ்வைப் பார்வையிட மெதிரிகிரிய பிரதேசத்தில் வசிக்கும் துனுல்யா என்ற சிறுமி தனது பெற்றோருடன் சென்றிருந்தார்.

அங்கு ஜனாதிபதியைக் கண்ட சிறுமி அவரிடம் ஓடிச் செல்ல முயன்றாள். எனினும், பாதுகாப்பு உத்தியோகத்தர்கள் அச்சிறுமி ஜனாதிபதியை நெருங்க அனுமதிக்கவில்லை.

இதைக் கண்ட ஜனாதிபதி அந்தச் சிறுமி தன்னிடம் வருவதற்கு அனுமதி கொடுக்குமாறு பாதுகாப்பு உத்தியோகத்தர்களைப் பணித்தார். பின்னர் ஜனாதிபதியிடம் ஓடிச் சென்ற சிறுமியை அவர் வாஞ்சையோடு அழைத்து மடியில் இருத்தினார்.

அந்த நிகழ்வு முடிவடையும் வரை அச்சிறுமி ஜனாதிபதியின் மடியிலேயே மகிழ்ச்சியுடன் இருந்தாள் என்பது குறிப்பிடத்தக்கது. (ம)

# பொன்சேகாவின் கருத்தால் 'அரசியலில் சலசலப்பு; எச்சரித்தனராம் ஜனாதிபதியும் பிரதமரும்!

கொழும்பு, செப். 11

அண்மையில் பீல்ட் மார்ஷல் அமைச்சர் சரத் பொன்சேகா வெளியிட்ட கருத்து தொடர்பில் ஜனாதிபதி மற்றும் பிரதமர் அதிருப்தி அடைந்துள்ளனர் என கொழும்பு ஊடகம் ஒன்று தகவல் வெளியிட்டுள்ளது.

போர்க்குற்றம் மற்றும் வண. எல்லே குணவன்ச தேரர் தொடர்பில் பொன்சேகா வெளியிட்ட கருத்தால் தென்னிலங்கை அரசியலில் சலசலப்பு நிலை ஏற்பட்டுள்ளது.



பொன்சேகாவின் கருத்துக்கு அரசியல் மட்டத்திற்கு அப்பால், பெரும்பான்மையின மக்களும் தமது எதிர்ப்பை வெளியிட்டு வருகின்றனர்.

இறுதிக்கட்ட போரின் போது போர்க்குற்ற நடவடிக்கையில் இராணுவத்தினர் ஈடுபட்டனர் எனப் பொன்சேகா தெரிவித்திருந்தார்.

அத்துடன், வண. எல்லே குணவன்ச தேரரையும் பகிரங்கமாக அவமதிக்கும் வகையில் பொன்சேகா கருத்து வெளியிட்டார்.

பொன்சேகாவின் கருத்துக்கு சமகால அரசின் அமைச்சர்கள் உள்ளிட்ட உறுப்பினர்கள் தமது எதிப்பை வெளியிட்டுள்ளனர்.

இதனால் அரசிற்கு ஏற்படுகின்ற அவமதிப்பை தவிர்த்துக் கொள்ள சரத் பொன்சேகாவினால் வெளியிடும் கருத்து அரசின் கருத்தல்ல என அமைச்சர்கள் ஊடகங்கள் வாயிலாக தெரிவித்து வருகின்றனர்.

இதேவேளை, அண்மையில் நடைபெற்ற ஸ்ரீலங்கா சுதந்திர கட்சியின் 66 ஆவது ஆண்டு நிறைவு விழாவில் உரையாற்றிய ஜனாதிபதி, இராணுவத்தினரை தண்டிப்பதற்கு தான் ஒருபோதும் இடமளிப்பதில்லை எனக் குறிப்பிட்டார்.

இந்த நிலையில் ஜனாதிபதியின் கூற்றுக்கு எதிர்மாறாக சரத்பொன்சேகா கருத்து வெளியிட்டு வருகின்றமையால், அரசுக்குள் முறுகல் நிலை ஏற்பட்டுள்ளது.

இது தொடர்பாக பொன்சேகாவை கண்டிக்குமாறு அமைச்சர்கள் சிலர், ஜனாதிபதி மற்றும் பிரதமரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இவ்வாறான நிலையில், ஜனாதிபதி மற்றும் பிரதமர் பொன்சேகாவை தனிப்பட்ட ரீதியில் சந்தித்து கலந்துரையாடல் மேற்கொண்டுள்ளதுடன் அவருக்கு எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

தேர்தல் இடம்பெறவுள்ள நிலையில் இவ்வாறான கருத்து வெளியிட்டு அரசிற்கு சிரமத்தை ஏற்படுத்தாமல், வாயை மூடிக்கொண்டிருக்குமாறு ஜனாதிபதி மற்றும் பிரதமர் குறிப்பிட்டுள்ளனர்.

இதன்போது பொன்சேகா அமைதியைக் கடைப்பிடித்துள்ளார் என்றும் அந்த ஊடகம்

## புதிய தேசிய அடையாள அட்டைக்கு விண்ணப்பிக் போது பதிய நடைமுறை!

புதிதாக தேசிய அடையாள அட்டையைப் பெற்றுக் கொள்வதற்காக விண்ணப்பிக்கும் போது ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களத்தால் பதிவு செய்யப்பட்ட புகைப்படப்பிடிப்பாளரிடமிருந்து புகைப்படங்களைப் பெறவேண்டும் என ஆட்பதிவுத் திணைக்களம் அறிவித்துள்ளது.

இந்த மாதம் முதல் புதிய தேசிய அடையாள அட்டைக்காக தேசிய சிவில் விமான ஒழுங்கமைப்பு தரத்திலான புகைப்படம் சமர்ப்பிக்கப்பட வேண்டுமென ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

அதற்கமைய புதிய இலத்திரனியல் அடையாள அட்டைக்கான உரிய புகைப்படம் எடுத்தல் தொடர்பாக தகைமை உடைய புகைப்பட நிலையங்கள் அறிவிக்கப்பட்டுள்ளன.

2017-09-01ஆம் திகதியிலிருந்து தங்களால் தேசிய அடையாள அட்டையைப் பெற்றுக் கொள்வதற்காக விண்ணப்பிக்கும் போது கீழ்க்காணும் தரத்திலான புகைப்படத்தை உபயோகப் படுத்தும்படி கோரப்பட்டுள்ளது.

இவ்வாறான புகைப்படத்தைப் பெற்றுக் கொள்வதற்காக ஆட்பதிவுத் திணைக்களத்தினால் பதிவு செய்யப்பட்ட புகைப்படப்பிடிப்பாளரிடம் செல்லும்படி கேட்டுக்கொள்ளப்படுகிறது.

9, 16 மற்றும் 17 என்னும் பிரிவுகளின் நோக்கங்களுக்காகச் சமர்ப்பிக்கப்படுவதற்குத் தேவைப்படுத்தப்படும் அத்தகைய ஒவ்வொரு நிழற்படமும் பின்வரும் பரிமாணங்களையும் அளவுக் குறிப்பீடுகளையும் நியமங்களையும் மற்றும் தரத்தையும் கொண்டிருத்தல் வேண்டும்.

நிழற்பட அளவானது அகலத்தில் 35 மில்லிமீற்றர் உயரத்தில் 45மில்லிமீற்றர் என்பதாக இருத்தல் வேண்டும் என்பதுடன் நிழற்படத்தின் தரமானது ஆட்களைப் பதிவு செய்தல் ஆணையாளர் தலைமை அதிபதியினால் ஏற்பாடு செய்யப்படும் மென்பொருளுக்கிணங்க அல்லது அறிவுறுத் தல்களுக் கிணங்க இருத்தல் வேண்டும்.

முகம் திறந்த மற்றும் தெளிவாகத் தென்படக் கூடிய கண்களுடனும் மூடிய வாயுடனும் சிரிப்பில்லாமலும் சுய நிலை முகக் குறிப்புடன் இருத்தல் வேண்டும். தலைமுடி முகத்திலிருந்து விலகி இருத்தல் வேண்டும் என்பதுடன் முகத்தின் விளிம்புகள் தெளிவாகத் தென்படக்கூடியனவாக இருத்தலும் வேண்டும்.

மூக்குக் கண்ணாடிகளிலிருந்து பிரதிபலிப்புகள் எவையும் தென்படக்கூடியனவாக இருத்தலாகாது. வில்லைகளினூடாக கண்கள் தெளிவாக தென்படக்கூடியனவாக இருத்தல் வேண்டும் என்பதுடன் தெளிவான வில்லைகள் மட்டுமே அனுமதிக்கப்படுகின்றன.

நிழற்படத்தின் காட்சிப் படுத்தலும் வெண்ணிறப் பின்புலமும் விண்ணப்பகாரரின் இயற்கையான தோல் நிறத்தைப் பிரதிபலித்தல் வேண்டும்.

தோற்றநிலை நேராக இருத்தல் வேண்டும் என்பதுடன் முகமும் தோள்களும் நிழற்படக் கருவிக்கு நடுவிலும் எல்லாப்புறமும் சரிசமமாகவும் இருத்தலும் வேண்டும்.

பின்னணி ஒரு சீராகவும் அலங்காரங்கள் இன்றியும் வடிவங்கள் இல்லாமலும் இளநீல நிறத்திலும் இருத்தல் வேண்டும்.

உருவம் தெளிவாகவும் கூர்மையாகவும் ஒருநிலைப் படுத்தப்பட்டதாகவும் இருத்தல் வேண்டும்.

நிழற்படம் உயர் தொழில் சார் அச்சிடும் ஆய்வுகூடத்தைப் பயன்படுத்தி நிறத்தில் அச்சிடப்படுதல் வேண்டும். எவ்வகையிலும் மாற்றப் படுத்தலாகாது என்பதுடன் விண்ணப்பகாரரின் இயற்கை நிலையில் எடுக்கப் படுதலும் வேண்டுமெனவும் கேட்கப்பட்டுள்ளனர்.

## குற்றஞ் சாட்டப்பட்டுள்ள ஜகத் ஜயசூரியவை விரைவில் சந்திக்கவுள்ளார் ஜனாதிபதி மைத்திரி!

கொழும்பு, செப். 11

சர்வதேச போர்க்குற்ற விசாரணை வழக்கை எதிர்கொண்டுள்ள முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் ஜகத் ஜயசூரியவுக்கும், ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவுக்குமிடையிலான சந்திப்பு விரைவில் நடைபெறவுள்ளது.

இருவருக்கும் இடையில் கடந்த வெள்ளிக்கிழமை இரவு தொலைபேசிமூலம் உரையாடல் இடம்பெற்றுள்ளது.

இதன்போது தாம் எதிர்கொண்டுள்ள பிரச்சினைகளை -சவால்களைநேரில் எடுத்துரைப்பதற்கு சந்தர்ப்பமொன்றை வழங்குமாறு ஜெனரல் ஜகத் ஜயசூரிய ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுத்துள்ளார். இதற்கமையவே சந்திப்புக்கு நேரம் ஒதுக்கப்பட்டுள்ளது.

ஐ.நா. பொதுச் சபையின் 72 ஆவது கூட்டத் தொடர் எதிர்வரும் 12ஆம் திகதி நியூயோர்க்கிலுள்ள ஐ.நா. தலைமையகத்தில் ஆரம்பமாகவுள்ளது.

19ஆம் திகதியே உலக நாட்டுத் தலைவர்கள் பொதுத் தலைப்பின் கீழ் உரை நிகழ்த்தவுள்ளனர்.

இந்தக் கூட்டத்தொடரில் பங்கேற்பதற்காக ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தலைமையிலான இலங்கைக்குழு எதிர்வரும் 17ஆம் திகதிக்கு முன்னர் அமெரிக்கா செல்லவுள்ளது. இந்தப் பயணத்துக்கு முன்னர் ஜெனரல் ஜகத்துடன் பாதுகாப்பு அமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதி சந்தித்துப் பேச்சு நடத்துவார் என அரச உயர்மட்ட அதிகாரி யொருவர் தெரிவித்தார்.

இறுதிக்கட்டப் போரின் போது வன்னிக் கட்டளைத் தளபதியாகச் செயற்பட்ட ஜெனரல் ஜகத் ஜயசூரிய, யுத்தம் முடிவடைந்த பின்னர்



இராணுவத் தளபதியாக நியமிக்கப்பட்டார். இராணுவ சேவையிலிருந்து ஓய்வுபெற்ற பின்னர் பிரேஸிலுக்கான இலங்கைத் தூதுவராக நியமிக் கப்பட்டார்.

கடந்த ஆகஸ்ட் 31ஆம் திகதியுடன் அவரது சேவைக் காலம் முடிவடைந்த நிலையில், அவருக்கு எதிராக பிரேஸில், கொலம்பியா ஆகிய தென் அமெரிக்க நாடுகளில் போர்க்குற்ற விசாரணை வழக்குத் தொடுக்கப்பட்டுள்ளது.

இந்த விவகாரம் இலங்கை அரசியல் களத்தில் பெரும் பரபரப்பையும், சர்ச்சையையும் கிளப்பிவிட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## தங்கத்துண்டுகளுடன் இந்தியப் பிரஜை கைது!

3 லட்சத்து 25 ஆயிரத்து 765 ரூபாய் பெறுமதியான தங்கத் துண்டுகளுடன் இந்தியப் பிரஜை யொருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

சட்டவிரோதமான முறையில் இலங்கையிலிருந்து இந்தியாவிற்கு தங்கத்தை எடுத்துச் செல்ல முயற்சித்த இந்திய இளைஞரே இவ்வாறு கைது செய்யப்பட்டுள்ளார்.

இந்த நபர் கட்டுநாயக்க விமான நிலையத்தில் இருந்து நேற்றுமுன்தினம் முற்பகல் 11 மணியளவில் ஸ்ரீலங்கா விமான சேவையின் ஊடாக மதுரை நோக்கி பயணிக்க இருந்த நிலையில் சுங்க பிரிவினரால் அவர் கைது செய்யப்பட் டுள்ளார்.

30 வயதான இந்த இளைஞரிடம் இருந்து 52 கிராம் பெறுமதியான இரு தங்கத்துண்டுகள் கைப்பற்றப்பட்டுள்ளன. இதேவேளை, இந்த நபரிடம் மேலதிக விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## பிணை முறி மோசடி குற்றச்சாட்டு; சுஜீவ சேனசிங்கவிடம் விசாரணை!



கொழும்பு, செப். 11

மத்திய வங்கி பிணை முறி மோசடி தொடர்பில் பிரதி அமைச்சர் சுஜீவ சேனசிங்கவிடம் விசாரணை நடத்தப்பட உள்ளது.

மத்திய வங்கி பிணை முறி மோசடி தொடர்பிலான விசாரணை ஆணைக்குழுவின் முன்னிலையில் சுஜீவ சேனசிங்க ஆஜராக உள்ளார் என நம்பத் தகுந்த வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதுவரை நடத்தப்பட்ட விசாரணைகளின் அடிப்படையில் சுஜீவ சேனசிங்கவிடம் விசாரணை நடத்தப்பட உள்ளது.

சுஜீவ சேனசிங்கவின் தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்கு நிதி வழங்கியமை, புத்தகம் ஒன்றை வெளியீடு செய்ய நிதி வழங்கியமை மற்றும் தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்கு காரியாலயமொன்றை பெற்றுக் கொள்ளபணம்வழங்கியமை போன்றவற்றுடன் பிணை முறி மோசடி குற்றச்சாட்டு சுமத்தப்பட்டவர்களுக்கு தொடர்பு உண்டு எனத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த அடிப்படையில் விசாரணைகள் முன்னெடுக்கப்பட உள்ளன எனத் தெரிவிக்கப்படுகிறது.

காலைக்கதிர் Kalaikkathir



# வைத்தியத்துறைக்கு உரிய மாண்பை வழங்கி வருகின்றனர் சித்த வைத்தியர்கள்

## கைதடியில் பல்கலைக்கழக வருடாந்த விசேட நிகழ்வில் சிவன் அறக்கட்டளையின் இயக்குநர்









கொழும்பு, செப். 11

சித்த மருத்துவத்துறையில் சேவையாற்றக் கூடிய வைத்தியர்கள் ஒரு போதும் பணத்தை மையமாகக் கொண்டுசெயற்படுபவர்கள் அல்லர். அவர்கள் எப்பொழுதும் முழுமனதோடு சேவை நோக்கம் கருதியே அர்ப்பணிப்போடு செயற்படுகின்றனர். என்னுடைய மாற்றுத் திறனாளிகள் சிகிச்சை நிலையத்திற்கு பல வைத்திய அதிகாரிகள் வருவார்கள். அவர்கள் மிகவும் நீண்ட தூரங்களில் இருந்து வருகை தருகின்றார்கள். ஆனால் அவர்கள் ஒரு போதிலும் போக்குவரத்துக்கான செலவோ அல்லது மருத்துவ பரிசோதனைக்காக செலவோ அறவிடுவதில்லை. அவர்களுடைய கால நேரத்தை முழுமையாக செலவுசெய்து உள்ளார்ந்த ரீதியாக மக்கள் நலனுக்காகவே சேவையாற்றுகின்றனர். உண்மையிலே சித்த வைத்தியர்கள் வைத்தியத்துறைக்கு உரிய மாண்பினை வழங்கி வருகின்றனர் என்று சிவன் அறக்கட்டளை நிறுவனத்தின் இயக்குநர் கணேஷ்வரன் வேலாயுதம் தெரிவித்தார்.

யாழ்.பல்கலைக்கழக சித்த வைத்தியத்துறை மாணவர்களின் ஏற்பாட்டில் வருடாந்த சித்த வைத்தியவாரவிசேட நிகழ்வு கைதடி சித்த வைத்திய பல்கலைக் கழக மண்டபத்தில் யாழ்.பல்கலைக்கழக சித்த வைத்தியத்துறைத் தலைவர் டாக்டர் விவியன் சத்தியசீலன் தலைமையில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்றது.

இந்நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்துகொண்ட சிவன் அறக்கட்டளை நிறுவனத்தின் இயக்குநர் கணேஷ்வரன் வேலாயுதம் அங்கு தொடர்ந்து பேசுகையில் –

சிலவேளை வைத்திய பரிசோதனைக்காக ஆங்கில வைத்திய நிபுணர் ஒருவரைச் சந்திப்பதற்காக ஒரு தினம் குறித்த நேரமான மாலை 4.00 மணி என்று இருந்தால் அந்த வைத்தியநிபுணர் இரண்டுமூன்று மணித்தியாலங்கள் கழிந்த பின்னரே வருகின்றார், சாதாரண ஏழை மக்கள் நீண்ட நேரம் காத்திருக்க வேண்டி இருக்கிறது. நோயைக் குணப்படுத்த வேண்டும் என்று சென்ற மனிதனுக்கு வைத்தியரின் வரவுக்காக காத்திருந்தார் என்பதாலேயே மேலும் நோய் அதிகரிக்கச் செய்கிறது. வெளிநாடுகளில் இலங்கையைப் போன்று அல்ல. உரிய நேரத்தில் வைத்தியரைச் சந்திக்க வேண்டும் என்று முன் கூட்டி அனுமதியைப் பெற்றுக் கொண்டால் அந்த குறித்த நேரத்தில் அந்த வைத்தியரைச் சந்திக்கமுடியும். ஆனால் இலங்கையில் அவ்வாறான நிலை இல்லை.

எமது சிவன் அறக்கட்டளை நிறுவனம் சித்தவைத்தியத் துறையின் சிறப்பியல்புகளையும் அதன் பயனையும் எமது நாட்டுக்கு மட்டுமல்ல உலக நாடுகள் அறிகின்ற வகையில் செயற்பட்டு வருகின்றது. இதன் மூலம் பல எண்ணற்ற மாற்றுத் திறனாளிகள் பயன் அடைந்துள்ளனர்.

இதற்கான அர்ப்பணிப்போடு சித்த வைத்திய அதிகாரிகள் எமக்கு பக்கதுணையாக இருக்கின்றார்கள். என்னுடைய சொந்த செலவாக இருந்தாலும் அவர்களுடைய மனிதாபிமானத் தொண்டும் சேர்ந்தே நாங்கள் மாற்றுத்திறனாளிகளுக்கு சிறந்த சேவையை வழங்கி வருகின்றோம் என்றார் அவர்.

இந்நிகழ்வில் பல்கலைக் கழக ஒழுக்காற்று நடவடிக்கைக்கான பொறுப்பாளர் மாசல் விஜயந்திரன், விரிவுரையாளர்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர். (இ)

# பொன்சேகாவின் கருத்துகள் பாரதூரமானவை இலங்கைக்கு எதிரான தரப்புக்கு சாட்சியம்

## மனித உரிமை ஆணைக்குழுவின் முன்னாள் தலைவர் தகவல்



கொழும்பு, செப். 11

முன்னாள் இராணுவத் தளபதியான அமைச்சர் சரத் பொன்சேகா வெளியிட்டு வரும் கருத்துக்கள் ஜெனீவா மனித உரிமை ஆணைக்குழுவில் இலங்கைக்கு எதிராகச் செயற்படும் தரப்பினருக்கு முக்கியமான சாட்சியமாக அமையும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

இலங்கை மனித உரிமை ஆணைக் குழுவின் முன்னாள் தலைவர் கலாநிதி பிரதீபா மஹாநாமஹேவா இந்தத் தகவலைத் தெரிவித்துள்ளார்.

விடுதலைப் புலிகளுடனான போரில் நேரடியான தலைமைத்துவத்தை வழங்கிய முன்னாள் இராணுவத் தளபதி ஒருவர் வெளியிடும் கருத்துக்கள் மிகவும் பாரதூர மானவை.

உலகில் எந்த ஓர் இராணுவத் தளபதியும் இப்படியான கருத்துக்களை வெளியிட்டதில்லை. உண்மை மற்றும் தகவல்களை கண்டறியும் ஆணைக்குழுவை துரிதமாக நியமிக்க வேண்டியது அரசாங்கத்தின் பொறுப்பு எனவும் அவர் கூறியுள்ளார்.

முன்னாள் இராணுவத் தளபதி ஜெனரல் ஜகத் ஜெயசூரிய போருக்குப்புறம்பான தவறுகளைச் செய்துள்ளமைக்கான தகவல்கள் தன்னிடம் இருக்கின்றன என்றும், யுத்தம் என்ற போர்வையில் சீருடை அணிந்து குற்றங்களைச் செய்திருந்தால், அவர்கள் தண்டிக்கப்பட வேண்டும் என்றும், அமைச்சர் சரத் பொன்சேகா குறிப்பிட்டிருந்தார்.

# என்னிடம் என்ன கேட்கிறீர்கள்? சட்டத்தை அமுல்படுத்துங்கள்

## சகோதரனுக்கு தண்டனை கொடுக்க உத்தரவிட்டார் மைத்திரி

'என்னிடம் என்ன கேட்கின்றீர்கள்? யாராக இருந்தாலும் தராதரம் பாராமல் சட்டத்தை அமுல்படுத்துங்கள் எனக் கூறி, குற்றம் செய்த தனது சகோதரருக்கு தண்டனை வழங்கப் பொலிஸாரைப் பணித்திருக்கின்றார் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன.

ஜனாதிபதியின் சகோதரர் லால் சிறிசேன ஓட்டிச் சென்ற லான்ட் குரூசர் வாகனம் பொலநறுவை – ஹிங்குராங்கொட வீதியில் மோட்டார் சைக்கிள் ஒன்றை மோதித்தள்ளியதால், மோட்டார் சைக்கிளில் சென்ற இருவர் உயிரிழந்தனர்.

இதனையடுத்து தலைமறைவான அவர் பின்னர் பொலிஸ் நிலையத்தில் சரணடைந்தார். அதன் போதே பொலிஸ் அதிகாரி ஜனாதிபதிக்கு அழைப்பை மேற்கொண்டு அது தொடர்பாகக் கூறினார் எனவும் அதற்கு பதிலளித்த போதே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார் எனவும் தகவல்கள் வெளியாகியுள்ளன. (ம)

*(மற்றொரு செய்தி 07ஆம் பக்கத்தில்)*

# வவு. ஸ்ரீராமபுரத்தில் மருத்துவ முகாம்

வவுனியா, செப். 11

வவுனியா ஸ்ரீராமபுரம் திருஞானசம்பந்தர் வித்தியாலயத்தில் இன்று பிற்பகல் 2 மணி முதல் இலவச மருத்துவ முகாம் இடம்பெறவுள்ளது. இங்கு இலவச மூக்குக் கண்ணாடி வழங்கல், பல் மருத்துவம், சாதாரண வியாதிகளுக்கான மருந்துகள் வழங்கல் என்பன இடம்பெறவுள்ளன.

பிராந்திய சமுதாய பொலிஸ் பிரிவு, வன்னிப் பிராந்திய பிரதிப் பொலிஸ்மா அதிபர் காரியாலயம், இறம்பைக்குளம் ஈ.சி. மிஸன் ஆகியன இணைந்து இதனை ஏற்பாடு செய்துள்ளன. (இ)

## யாழ். மாவட்டக் கூட்டுறவுச் சபை நடத்தும்

# 95ஆவது சர்வதேச கூட்டுறவு தினவிழா வீரசிங்கம் மண்டபத்தில் சனியன்று




யாழ்ப்பாணம், செப்.11

யாழ்ப்பாணம் மாவட்டக் கூட்டுறவுச் சபை நடத்தும் 95ஆவது சர்வதேச கூட்டுறவு தினவிழா கூட்டுறவாளர் வீரசிங்கம் மண்டபத்தில் எதிர்வரும் 16ஆம் திகதி சனிக்கிழமை முற்பகல் 10 மணிக்கு நடைபெறும்.

யாழ். மாவட்ட கூட்டுறவுச் சபைத் தலைவர் தி.சுந்தரலிங்கம் தலைமையில் நடைபெறும் இந்நிகழ்வில், முதன்மை விருந்தினராக யாழ். அரச அதிபர் நா.வேதநாயகனும், சிறப்பு விருந்தினர்களாக மக்கள் வங்கியின் பிராந்திய முகாமையாளர் க.சுசீந்திரன், யாழ். கூ.அ.உ. ஆணையாளர் பொ.மோகன் ஆகியோரும் கலந்துகொள்வர்.

கூட்டுறவுச் சபையினர் நடத்திய போட்டியில் முதலிடம் பெற்றவர்களின் பேச்சும் இடம்பெறும். அவர்களின் விவரம் வருமாறு:–

★ கீழ்ப்பிரிவு: பாஸ்கரன் சக்திவர்மன் (வட்டு. இந்துக் கல்லூரி)

★ மத்திய பிரிவு: ஜெயச்சந்திரன் கவினாஸ் (மானிப்பாய் இந்துக் கல்லூரி)

★ கனிஷ்ட பிரிவு: லிங்கேஸ்வரன் வைஷ்ணவி (வேம்படி மகளிர் கல்லூரி)

★ சிரேஷ்ட பிரிவு: கமலநாதன் கர்ஷிகா (வேம்படி மகளிர் கல்லூரி)

★ அங்கத்தவர் – மகாதேவன் மயூரி (ஏழாலை மேற்கு ஸ்ரீவிநாயகர் ஐ.நா. சங்கம்)

★ பணியாளர்–மகாலிங்கம் கார்த்தீபன் (அச்சுவேலி ப.தெ.வ.அ.கூ. சங்கம்). (இ)

# கிருஷ்ண ஜெயந்தி தின விழா கொக்குவிலில் சிறப்புற நடந்தது





கொக்குவில் கிருஷ்ணா அறநெறிப்பாடசாலையின் கிருஷ்ண ஜெயந்திதின விழா நேற்று கொக்குவில் கிழக்கு கோணாவளை வீதியில் அமைந்துள்ள கிருஷ்ணா அறநெறிப் பாடசாலையில் சிறப்பாக இடம்பெற்றுள்ளது. இதன்போது, கிருஷ்ணா அறநெறிப் பாடசாலை முன்றலில் அமைந்துள்ள கிருஷ்ண பகவானின் திருவுருவச் சிலைக்கு நல்லூர்க் கந்தசுவாமி ஆலயத்தின் சிவஸ்ரீ உமாரமணக் குருக்கள் விசேட பூஜை வழிபாடுகள் ஆற்றினார். சாந்திகம் நிறுவனத்தின் ஆலோசகர் இரா. சந்திரசேகர சர்மா தலைமையில் இடம்பெற்ற விழாவில் சிவஸ்ரீ உமாரமணக் குருக்கள் மற்றும் கொக்குவில் சாயி துர்க்கா ஆலயத்தின் பிரதம குரு ஆகியோர் ஆசியுரைகளை நிகழ்த்தினர்.

அதனைத் தொடர்ந்து அறநெறிப் பாடசாலை மாணவ மாணவிகளின் வரவேற்பு நடனம், குழு நடனம், கிருஷ்ண பஜனைப் பாடல்கள் இசைத்தல் போன்ற பல்வேறு கலை நிகழ்வுகளும் விமரிசையாக இடம்பெற்றன.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 11.09.2017 இல் அச்சிடப்பட்டுவெளியிடப்பெற்றது.